# நாவாவின் ஆராய்ச்சி

## காலாண்டு ஆய்விதழ்

2394

நிறுவக ஆசிரியர்

பேராசிரியர் நா. வானமாமலை

ஜனவரி 47 1999

# நாவாவின் ஆராய்ச்சி

(காலாண்டு ஆய்விதழ்)

**நிர்வாக ஆசிரியர்**

மே. து. ராசு குமார்

**ஆசிரியர் குழு**

எஸ். தோதாத்ரி
தே. லூர்து
ஆ. சிவசுப்பிரமணியன்
பொன்னீலன்
ந. முத்துமோகன்
செந்தீ நடராசன்
பா. ஆனந்தகுமார்
இ. முத்தையா
கி. முப்பால்மணி
தொ. பரமசிவன்
ஆ. இரா. வேங்கடாசலபதி
சி. சொக்கலிங்கம்
ஞா. ஸ்டீபன்
நா. இராமச்சந்திரன்

அச்சிட்டோர்
மக்கள் அச்சகம்
24 உனிசு அலி சாகிப் தெரு சென்னை 600 002

**கட்டுரை அனுப்ப / இதழ்கள் பெற முகவரி**

டாக்டர் மே. து. ராசு குமார்
**நாவாவின் ஆராய்ச்சி**
24 உனிசு அலி சாகிப் தெரு
எல்லிசு சாலை சென்னை 600 002
தொலைபேசி இல்லம் 8545531 அலுவல் 8545532

(நாவாவின் ஆராய்ச்சியில் வெளியிட
கட்டுரைகள் / ஆய்வுரைக்கான நூல்கள் போன்றவற்றை
இரண்டு படிகளாக அனுப்பவேண்டுகிறோம்.)

**தனி இதழ் ரூ. 15-00**
**ஆண்டுக் கட்டணம் (4 இதழ்கள்) ரூ. 50-00**

# நாவாவின் ஆராய்ச்சி

## காலாண்டு ஆய்விதழ்

### பொருளடக்கம்

நாவா தூண்டிய ஆய்வு உணர்வுகள்
தலையங்கம் ரு

1 பரதவர்களின் மேசை எதிர்ப்புப் போராட்டம்
ஆ. சிவசுப்பிரமணியன்

2 வ.உ.சி.யும் சைவ சிந்தாந்தமும்
ஆ. இரா. வேங்கடாசலபதி 17

3 புதுமைப்பித்தனின் கனவோடை 'கபாடபுரம்' வழியில் ஃப்ராய்டிய விளக்கம்
தி. கு. இரவிச்சந்திரன் 29

4 உழைப்பில் பங்கு பெறாதவர்களுக்கு நில உரிமை மாற்றம்
த. வசந்தா 49

5 இடைக்காலத் தமிழகத்தில் வேளாண் வளர்ச்சியினால் ஏற்பட்ட சமூக-பொருளாதார மாற்றங்கள்
மே. து. ராசு குமார் 61

6 'மணிக்கொடி'யில் நாவா 93

முன்னவர்
மேனாள் துல
பெருங்குடி, சென்னை—600 096.

# நாவா தூண்டிய ஆய்வு உணர்வுகள்

'நாவாவின் ஆராய்ச்சி' இதழ் 47 தற்போது தங்கள் கைகளில்.

'நாவாவின் ஆராய்ச்சி' தொடர்ந்து, கால இடைவெளியைக் கடந்தும் தாண்டியும்தான் வெளிவந்து கொண்டிருக்கிறது. என்றாலும், இந்த இதழ் சற்று மிகையாக, சில ஆண்டுகளுக்குப் பிறகு வருவது ஒருவகையான குற்ற உணர்வையே ஏற்படுத்துகின்றது.

இருந்தாலும், அண்மையில் நாவா தொடர்பாக நடந்த சில குறிக்கத்தக்க நிகழ்வுகள் நிறைவு தருகின்றன.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் டாக்டர் இ. சுந்தரமூர்த்தி, பச்சையப்பன் கல்லூரியின் டாக்டர் மா. இரா. அரசு ஆகியோர் முயற்சியில் 'பேரா. மா. இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வு மைய'மும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் இணைந்து 11-12-1998 அன்று நடத்திய 'தமிழில் ஆய்வு இதழ்கள்' கருத்தரங்கில் 'ஆராய்ச்சி' இதழ் குறித்து நான் ஆய்வுரை வழங்க வாய்ப்புக் கிடைத்தது. தமிழ் ஆய்விதழ்களில் தனித்தன்மையுடன் நாவா அவர்கள் 'ஆராய்ச்சி'யினை நடத்தியதை அனைவரும் நினைவுகூர்ந்தனர்.

தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரியின் தாளாளர் திரு. ஏ.பி.சி.வி. சொக்கலிங்கம், பேராசிரியரும் ஆய்வறிஞருமான ஆ. சிவசுப்பிரமணியன் ஆகியோர் முனைப்பில் தொடங்கப்பட்டுள்ள 'வ. உ. சிதம்பரம் சமூக அறிவியல் நிறுவன'த்தின் சார்பில் 10-01-1999 அன்று பேராசிரியர் நா. வானமாமலை நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு நடைபெற்றிருக்கிறது. மார்க்சியத்தால் நாவா அவர்களுடன் பிணைப்புக் கொண்ட, அவரைப் போன்றே தமிழியலுக்குத் தக்க ஆக்கங்கள் செய்திருக்கின்ற—இப்போதும் செய்து வருகின்ற கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் இந்தச் சொற்பொழிவினை நிகழ்த்தியிருக்கிறார்கள் என்பது மன மகிழ்வைத் தருகிறது.

அடுத்து, பாளையங்கோட்டை தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரியில் அமைந்துள்ள 'நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்', ஆண்டுதோறும் நாவா அவர்களின் நினைவு நாளில் அவர்களுடைய ஆய்வுப்பணிகள் குறித்த

சிறப்புக் கருத்தரங்கம் நடத்தத் திட்டமிட்டுள்ளது. நாவா அவர்களிடம் பயிற்சி பெற்ற என் இனிய நண்பர் டாக்டர் தெ. லூர்து அவர்கள் முன்னிலையில், மைய இயக்குநர் பேராசிரியர் ஃபிரான்சிஸ் செயபதி செ. ச. அவர்கள் துணையுடன் 02-02-1999 அன்று நடந்த முதல் கருத்தரங்கில், நாவா அவர்களின் மாணவர்களான பேராசிரியர்கள் ஆ. சிவசுப்பிரமணியன், எஸ். தோதாத்ரி, ந. சிவசுப்பிரமணியன், டாக்டர் நா. இராமச்சந்திரன், எழுத்தாளர்கள் தோழர் பொன்னீலன் திரு. சொக்கலிங்கம் போன்றவர்கள் கலந்துகொண்டிருக்கிறார்கள்.

அதே நாளில், நாவா ஆய்வுகள் பற்றி பிஎச்டி பட்டத்துக்கான ஆய்வு மேற்கொண்டிருக்கும் பேரா. இரா. காமராசு அவர்கள் முயற்சியில் 'நாவாவின் படைப்புகள்—நூலடைவு' என்ற ஒரு சிறு தொகுப்பு நூலினை 'நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்' வெளியிட்டுள்ளது. நாவா அவர்களின் படைப்புகள் முழுவதையும் தொகுத்து வெளியிடும் எனது முயற்சிகளில் கிடைத்த விவரங்கள் சிலவும் இந்த நூலடைவில் இணைத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்நூலடைவு முழுமையானதாக அமையாதிருப்பினும், நாவாவின் படைப்புகளைத் தொகுக்கின்ற மாபெரும் திட்டத்தின் ஒரு பகுதியாக இதனை எடுத்துக்கொள்ள முடியும்.

இந்த நினைவு நாளிலேயே, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமனறத்தின் பொதுச் செயலாளரும் 'சாகித்ய அகாதமி' பரிசுபெற்ற எழுத்தாளருமான அன்புத்தோழர் பொன்னீலன் அவர்களின் பெரும்முயற்சியில் 'நாவா அறக்கட்டளை' ஒன்று தனியாகத் தொடங்கிவைக்கப்பட்டுள்ளது. இதில் பேராசிரியரோடு தொடர்புகொண்ட பலர் உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளார்கள்.

பேரா. நாவா அவர்கள் 'ஆராய்ச்சி' காலாண்டு இதழுக்கு முன்னோடியாகத் தொடங்கிய 'நெல்லை ஆய்வுக் குழு'வின் தொடக்கக் கால உறுப்பினரும் 'ஆராய்ச்சி' இதழில் தொடர்ந்து பல சிறப்புமிக்க ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியவருமான வழக்கறிஞர், தோழர் வெ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் முன்னின்று நடத்திவரும் 'சென்னை ஆய்வு வட்டம்' அண்மைக் காலங்களில் குறிப்பிடத்தக்க பணிகளை நிறைவேற்றி வருகிறது. தொடர் கருத்தரங்குகளில் ஆய்வுக் கட்டுரைகள் பல படைக்கப்படுவதோடு, அக்கட்டுரைகள் சில நூல் வடிவிலும் வெளியிடப்பட்டிருக்கின்றன.

இவையன்றி, இடையிடையே தடுமாறிக் கொண்டிருந்த 'நாவாவின் ஆராய்ச்சி' காலாண்டிதழ், இந்த ஆண்டிலிருந்து

புதிய நம்பிக்கையுடன், ஆராய்ச்சிக் குழுத் தோழர்களின் ஒத்துழைப்போடும் எனது ஏற்பாட்டிலும் மீண்டும் வெளிவரத் தொடங்கியுள்ளது.

இவை யாவும் தனித்தனி நிகழ்வுகளாக—முயற்சிகளாகத் தோன்றினாலும், இவற்றுக்குப் பின்னால் பேரா. நாவா அவர்களால் ஏற்றி வைக்கப்பட்ட—தூண்டிவிடப்பட்ட ஆய்வு உணர்வுகள் ஒளிவிட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை மறந்துவிட முடியாது. அத்துடன், நாவா அவர்கள் தொடங்கி வைத்த மாபெரும் பணிகளின் தொடர்ச்சியாகவும் இவற்றைக் கொள்ளவேண்டும்.

மேலும், நாவா அவர்களின் ஆய்வுகளுக்கு அடித்தளமாக நின்ற சமூக-பொருளாதாரக் கண்ணோட்டம்—மார்க்சிய ஆய்வுமுறை, தமிழியல் ஆய்வுகள் முழுமை பெற இன்றியமையாத தேவையாக அமைந்திருக்கிறது என்பதையே இந்த நிகழ்வுகள் யாவும் உறுதிப்படுத்துகின்றன.

இப்பணிகளில் எல்லாம் நாவா அவர்களின் 'நெல்லை ஆய்வுக் குழு', 'ஆராய்ச்சி' இதழ் ஆகியவற்றோடு நேரிடையாகத் தொடர்புகொண்டிருந்த ஆய்வாளர்களும் நாவா அவர்களின் மாணவர்களும் ஏதாவது ஒரு வகையில் பங்கு பெற்றிருக்கிறார்கள் என்பதும் மனதில் கொள்ளவேண்டியதாகும்.

மேலும், நாவா அவர்களோடு தொடர்பு கொண்டிருந்த 'ஆராய்ச்சி'க் குழுவினைச் சேர்ந்த பிறரும், நாவா அவர்களின் மறைவையடுத்து அவரது மாணவர்களின் தொடர்புகளால் ஆய்வுக் களத்திற்குள் அடியெடுத்து வைத்திருக்கும் அடுத்த தலைமுறையினரும் வெவ்வேறு வகைகளில் தங்கள் சீரிய பங்களிப்புகளைச் செய்து வருகிறார்கள். இவர்களில், முனைவர் ஆ. இரா. வேங்கடாசலபதி போன்றவர்கள் வியக்கவைக்கும் வினைகளாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இவ்வகையில், சார்பு அமைப்புகளான தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் போன்றவற்றின் சில பணிகளையும் குறிப்பிட்டாகவேண்டும்.

நாவா அவர்களின் தலைமுறை என்பது அவரது மாணவர்களோடு நின்றுவிடாமல், அடுத்தடுத்துத் தொடர்ந்து வருவதையும், மகிழ்ச்சிமிக்க நிறைவுடன் நாம் காண்கிறோம்.

நாவா அவர்களின் ஆய்வு வழித்தோன்றல்கள் தமிழியல் ஆய்வுகளில் புதிய தடம் பதிப்பவர்களாகத் தொடர்ந்து நீடித்து வருகிறார்கள் என்பதும் மிகையுரை அன்று.

இந்த இடத்தில், அண்மைக் காலங்களில் ஏற்பட்டுள்ள சில போக்குகளை நாம் மனத்தில் கொள்ளவேண்டும், இன்றைய சிக்கலான சமூக-பொருளாதார-பண்பாட்டு நிலைமைகளில் மார்க்சிய அடிப்படையிலான அளவுகோல்கள் முழுமையான

தாக இல்லை என்ற கூக்குரல் வலிமையுடன் ஒலிக்கத் தொடங்கியுள்ளது. பல புதிய போக்குகளும் நோக்குகளும் மார்க்சியத்துக்கு மாற்றாக முன்மொழியப்படுகின்றன. சிலர், மார்க்சியத்தின் குறைகளைக் களையும் புதிய சிந்தனைகளாகக் கூட இவற்றைக் காட்ட முனைகின்றனர். இது பற்றிய விவாதங்களில் மார்க்சிய அறிஞர்களிடையே முரண்பாடுகளும் முளைவிட்டிருக்கின்றன.

மார்க்சியம் என்பது அறிவியலை அடித்தளமாகக் கொண்டது. மார்க்ஸ்—எங்கெல்ஸ் என்ற இரண்டு பேரறிஞர்களோடு மார்க்சியம் நின்று விடவில்லை—நிறைவு பெற்றுவிடவும் இல்லை. அறிவியலைப் போன்று, அன்றாடம் தோன்றுகின்ற புதிய வரவுகளை — தரவுகளைத் தமதாக்கிக் கொள்ளும் தன்மை கொண்டது மார்க்சியம். சமூக-பொருளாதார-பண்பாட்டுத் தளத்தில் புதிதாகத் தோன்றும் எந்த ஆய்வுப் போக்கும், அறிவியல் பார்வையோடு ஒத்திருக்கின்ற வரை அது மார்க்சியத்திற்கு ஏற்புடையதாகவே அமையும். அறிவியலைப் போன்று மார்க்சியமும் வளர்ந்துகொண்டிருக்கிறது—வளர்ந்து கொண்டிருக்கவேண்டும். இதுதான் மார்க்சியம். எத்தகைய சமூக அறிவியலும்—அறிவியல் பார்வையும் மார்க்சியத்தோடு முரண்பட்டுவிடமுடியாது. இதில் ஏற்படுகின்ற தெளிவே மார்க்சியத்தைப் புரிந்துகொள்வதற்கான முதல் பாடமாகும்.

மார்க்சும் எங்கெல்சும் தங்கள் ஆய்வுகளின் அடிப்படையில் பல முடிவுகளை மேற்கொண்டார்கள். காலக் குறைவால், சில பொருள்களை முழுமையாக ஆய்வு செய்ய இயலாமல் குறிப்புரைகளையே கொடுத்திருக்கிறார்கள். இத்துடன், விவாதத்துக்கு எடுத்துக்கொண்டதை விவரிக்காமல் விட்டது, தொட்டுச் சென்றது, விட்டுச் சென்றது எனப் பல கருத்து நிலைகள் இருக்கின்றன. அத்துடன், அவர்களுக்கு, அக்கால கட்டத்தில் கிடைத்த தரவுகளைக் கொண்டே அவர்கள் தங்கள் வரையறைகளை உருவாக்கிக்கொள்ள முடிந்தது.

புதிய தரவுகள் கிடைத்த பின்னர், தங்களது முடிவுகளைக் கூட மாற்றிக் கொள்ள அவர்கள் தயங்கியதில்லை. போதுமான விவரங்கள் கிடைக்காததால் ‘ஆசிய உற்பத்தி முறை’யை அவர்களால் முழுமையாக வரையறை செய்ய இயலவில்லை.

மேலும், அன்றைய நிலையில் அரசியல் பொருளாதாரத்திற்கு அவர்கள் முன்னுரிமை தரவேண்டிய நிலையில் இருந்தனர். இதை அவர்களே சுட்டிக்காட்டியுள்ளார்கள். அவர்களுக்குக் கிடைத்த கால அளவு, தரவுகள், விவரங்கள் போன்ற புறச்சூழல்களால் அவர்களால் ஒன்றைக் கூறமுடியவில்லை என்பதே மார்க்சியத்தின் குறையாகிவிடாது.

> ஒரு பொருளில் பார்த்தால், பின்வரும் பகுதிகள், மார்க்ஸ் விட்டுச் சென்ற ஒரு பணியை நிறைவு செய்வதாகவே அமைகின்றன. வரலாற்றைப் பற்றித் தன்னுடைய—எங்களுடைய என்று சில வரையறைகளுக்குட்பட்டுக் கூறலாம்—பொருளிய ஆய்வின்வழி தான் கண்ட முடிவுகளின் தொடர்பில் மார்கனது ஆய்வு விளைவுகளை மக்கள் முன் வைத்து அதன்வழி அவற்றின் சிறப்பு முழுவதையும் தெளிவாக்க வேண்டும் என்று மார்க்ஸ் திட்டமிட்டிருந்தார்......... மறைந்த எனது நண்பர் செய்ய முடியாமல் போன பணிக்கு ஈடாக நான் செய்திருக்கின்ற பணி அற்பமாகத்தான் அமைய முடியும்

என்று 'குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்' என்ற நூலுக்கான முன்னுரையில் எங்கெல்ஸ் குறிப்பிடுகிறார். மேலும்,

> ஒன்றுக்கொன்று கலந்துறவு கொள்ளுவது தொடர்பானவற்றிற்கு உரிய இடத்தைத் தருதற்கு எங்களுக்கு காலமோ, இடமோ வாய்ப்போ கிடைக்கவில்லை.

என்று ஜோசப் பிளாக் என்பருக்கு எழுதிய மடலில், அவர் கூறுகிறார். மார்க்ஸ் விட்டுச்சென்ற பல பணிகளை எங்கெல்ஸ் தொடரவேண்டியிருந்தது. அத்துடன் தன்னுடையதன்றி, மார்க்சினது நூல்களுடைய பதிப்புப் பணிகளையும் அவர் மேற்கொண்டிருந்தார்.

சில பணிகளை அவர்களால் முழுமைபெறச் செய்ய முடியவில்லை என்றாலும், இயங்கியல் பொருளியம் என்ற அறிவியலே மார்க்சியத்தின் அடிப்படையாகும். இதையொட்டிய அடிப்படை வரையறைகளை மார்க்சும் எங்கெல்சும் தெளிவாக்கிச் சென்றிருக்கிறார்கள். இவற்றின் வழிகாட்டுதலில் மார்க்சியம் முழுமையாக நோக்கப்படவேண்டும். பல்வேறு நிலைகளையும் இதனடி நின்று புரிந்துகொள்ளவேண்டும். குருடர்கள் பிடித்துப் பார்த்த யானையாக, அவரவரது புரிதலாக மட்டுமே மார்க்சியம் இருந்துவிட முடியாது.

மார்க்சியத்தின் விளக்கமாக—வளர்ச்சியாக—மேம்படுத்தலாக, பல வரையறைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. தத்துவம், பொருளியல், அரசியல், பண்பாடு என அவை பரந்துள்ளன. ரஷ்யப் புரட்சியின்போது, அந்நாட்டு மக்கள்தொகையில் 19% தொழிலாளிகளாக இருந்ததற்கேற்பப் புரட்சிக்கான திட்டங்களை லெனின் உருவாக்கினார். ஆனால், தொழிலாளர் பிரிவினர் 2% கூட இல்லாத சீனாவில், மாவோ, விவசாயிகளின் வலிமையைப் பயன்படுத்திக்கொண்டார். இந்தியாவில் சாதி

அமைப்பு முறை, மாறுதல்களுக்கான திட்டங்களை வரையறுக்கக் கணக்கில் கொள்ளவேண்டியதாக நிற்கிறது.

எனவே, அறிவியல் அடிப்படையிலான எத்தகைய புதிய நோக்கும் போக்கும் கொள்கை நிலையும் மார்க்சியத்துக்கு மாற்று அல்ல; முரணும் அல்ல. அது மார்க்சியத்தின் வளர்ச்சியே; அதன் பகுதியே.

காலத்துக்கும் இடத்துக்கும் சூழலுக்கும் ஏற்ப மார்க்சியம் தொடர்ந்து வளர்த்தெடுக்கப்படவேண்டும் — வளப்படுத்தப் படவேண்டும். அடுத்து, இப்படி வளப்படுத்தப்பட்ட மார்க்சியத்தை, அறிவியலைப் பயன்கொள்வது போன்று, காலத்துக்கும் இடத்துக்கும் சூழலுக்கும் ஏற்பப் பயன்படுத்தவேண்டும். வளப்படுத்துவதிலோ, பயன்படுத்துவதிலோ இயல்பாக ஏற்படுகின்ற நடைமுறைக் குறைபாடுகளை — சிக்கல்களை மார்க்சியத்தின் பற்றாக்குறையாகப் பார்ப்பது அறிவியல் பண்பாகாது.

நம்மைப் பொறுத்தவரை, தமிழியல் ஆய்வு வளர்ச்சிக்கு, தொடர்பான ஒவ்வொரு துறையின் பங்கும் இன்றியமையாததாகும். இலக்கியம், மொழியியல், தத்துவம், கல்வெட்டியல், அகழ்வாழ்வியல், கடலியல், மானிடவியல், சமூகவியல், பொருளியல் போன்று விரிந்து பரந்து கிடக்கும் சமூக அறிவியல் துறைகள் அனைத்தும் தமிழியல் ஆய்வுகளுக்கு அடித்தளமாக அமையவேண்டும். இத்துறைகளில் ஏற்படுகின்ற புதிய ஆய்வுகள்—கண்டுபிடிப்புகள் எவையானாலும், அவை சிறு துளிகளாயினும் ஊக்குவிக்கப்படவேண்டும். ஏனெனில், ஒவ்வோர் ஆய்வும், வேறொரு விரிந்த ஆய்வுக்கு அடித்தளமாகின்றது.

பேரா. நாவா அவர்கள் 'ஆராய்ச்சி' இதழின் நோக்கமாக இதனையே கொண்டு, பல ஆய்வுகளை வெளிப்படுத்தினார்கள். இவ்வழியில் தனது பணியைத் தொடரவே 'நாவாவின் ஆராய்ச்சி' விழைகின்றது.

பேராசிரியர் நாவா அவர்களின் வழித்தோன்றல்களும் 'ஆராய்ச்சி'க் குழுவினரும் அவர்களோடு தொடர்புகொண்டுள்ள அறிஞர்களும் அவ்வப்போது பல்வேறு கருத்தரங்குகளில் படைக்கின்ற ஆய்வுகளை முழுமையாக வெளியிடவேண்டும் என்றாலே, ஆண்டுக்கு நான்கு முறை மட்டுமே வெளிவரும் காலாண்டு இதழ் கொள்ளாது. இந்த வகையில், பொருளுதவி பெறும் நிறுவனங்கள் எதிர்நோக்கும் ஆய்வுப் படைப்புகளின் பற்றாக்குறை 'நாவாவின் ஆராய்ச்சி'க்கு இல்லை. முடிக்கப்பட்ட ஆய்வுகளைக்கூட வெளியிட முடியாதவாறு பொருளியல்—அமைப்பியல் காரணிகளே நமக்குத் தடையை ஏற்படுத்தி வருகின்றன.

இந்த நிலையிலும், தமிழியல் ஆய்வுகளில் ஈடுபட்டுள்ள அனைவரிடமிருந்தும்—'ஆராய்ச்சி' வட்டத்துக்கு வெளியில் உள்ளவர்களிடமிருந்தும் ஆய்வுப்படைப்புகளை நாடுகிறோம். தரமான படைப்புகளை வெளியிடும் தனது பணிகளை நிறைவுடன் செயல்படுத்த முழுமையான ஒத்துழைப்புக் கிடைக்குமென்ற உறுதிப்பாடு 'நாவாவின் ஆராய்ச்சி'க்கு உள்ளது.

மே. து. ராசு குமார்
ஆசிரியர் குழுவுக்காக

---


## நாவாவின் ஆராய்ச்சி

(தமிழ்)

**உரிமை மற்றும் பிற விவரங்கள்**

படிவம் 4 (பார்க்க விதி 8)

| | | | |
|---|---|---|---|
| 1 | வெளியிடும் இடம் | : | 24 உனிசு அலி சாகிப் தெரு சென்னை 600 002 |
| 2 | கால அளவு | : | காலாண்டு |
| 3 | அச்சிடுவோர் | : | ரா. வசந்தா, மக்கள் அச்சகம் |
| | இனம் | : | இந்தியன் |
| | முகவரி | : | 24 உனிசு அலி சாகிப் தெரு சென்னை 600 002 |
| 4 | வெளியிடுவோர் | : | மே. து. ராசு குமார் |
| | இனம் | : | இந்தியன் |
| | முகவரி | : | 24 உனிசு அலி சாகிப் தெரு சென்னை 600 002 |
| 5 | ஆசிரியர் | : | மே. து. ராசு குமார் |
| | இனம் | : | இந்தியன் |
| | முகவரி | : | 24 உனிசு அலி சாகிப் தெரு சென்னை 600 002 |
| 6 | உரிமையாளர் | : | மே. து. ராசு குமார் |
| | இனம் | : | இந்தியன் |
| | முகவரி | : | 24 உனிசு அலி சாகிப் தெரு சென்னை 600 002 |

மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் யாவும் யானறிந்தவரை சரியானவை என உறுதியளிக்கிறேன்.

மே. து. ராசு குமார்

நாள் : 31-01-1999 வெளியீட்டாளர் ஒப்பம்

# பரதவர்களின் மேசை எதிர்ப்புப் போராட்டம்

ஆ. சிவசுப்பிரமணியன்

பொருளாதார மற்றும் உயர் பதவியின் அடிப்படையில் ஒரு சாதிக்குள் 'மேலோர் குழு' (Elite group) ஒன்று உருவாவது இயல்பாகும். இவ்வாறு உருவாகும் மேலோர் குழு தன் சாதியில் அடித்தள மக்களாக (Subalterns) விளங்குவோர் மீது தனது மேலாண்மையை நிலைநிறுத்தும்.

ஒரு சாதியின் அடித்தளப் பிரிவினர், மேலோர் குழுவின் மேலாண்மையை வேறு வழியின்றி ஏற்றுக்கொண்டாலும், வாய்ப்பு நேரிடும்போது தனது எதிர்ப்பை வெளிப்படுத்துவர். சில நேரங்களில் இவ்வெதிர்ப்புணர்வு கிளர்ச்சியாக உருவெடுத்து வெற்றியடையவும் செய்யும்.

இதற்கு எடுத்துக்காட்டாகத் தூத்துக்குடி நகரில் கடல் தொடர்பான தொழில்களைச் செய்து வாழும் பரதவர் என்ற சாதியினரிடையே நிகழ்ந்த மேசை எதிர்ப்புப் போராட்டத்தைக் குறிப்பிடலாம்.

## பரதவர்

தமிழகத்தின் நெய்தல் நில மக்களாகப் பரதவர்கள் என்ற குலத்தினரைச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. பாண்டிய நாட்டின் தென் பகுதியில் வாழ்ந்த பரதவர்கள் 'தென் பரதவர்' என்று குறிப்பிடப்படுகிறார்கள். பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பரதவர்களை வென்ற செய்தியினைக் குறிப்பிடும் மதுரைக்காஞ்சி (144) "தென்பரதவர் போரேறு" என்று அவனை அழைப்பதன் மூலம் பரதவர்களின் வலிமையையும் குறிப்பிடுகின்றது. சோழன் செருப்பாழியெறிந்த இளஞ்சேட் சென்னி இப்பரதவர்களை வென்றதனைத் "தென் பரதவர் மிடல் சாய" என்று புறநானூறு (378 : 1) குறிப்பிடுகின்றது.

கி. பி. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த நின்ற சீர் நெடுமாறன் என்ற பாண்டிய மன்னன் பரதவர்களை வென்றான். இச்செய்தியினை "விரவி வந்தடையாத பரவரைப்

பாழ்படுத்தும்'' என்ற வேள்விக்குடிச் சாசன வரி தெரிவிக்கின்றது.

மேற்கூறிய செய்திகள் பரதவர்களின் தொன்மையையும் அவர்களின் போர்க்குணத்தையும் அறிவிக்கின்றன.

**பரதவர்களின் தொழில்**

முத்துக்குளித்தல், சங்கு எடுத்தல், மீன் பிடித்தல், சரக்குகளைச் சுமந்து செல்லும் பெரிய தோணிகளைக் கடலில் இயக்குதல் என்பன பரதவரின் பாரம்பரியத் தொழிலாகும். இராமேஸ்வரத்திலிருந்து கன்னியாகுமரி வரையிலான கடற்கரைப் பகுதியில் விலையுயர்ந்த முத்துக்கள் மிகுதியாகக் கிடைத்து வந்தமையால் இப்பகுதியில் வாழும் பரதவர்கள் முத்துக்குளித்தலில் தேர்ந்த அனுபவம் பெற்றிருந்தனர். எனவே இக்கடற்கரைப் பகுதி 'முத்துக்குளித்துறை' என்று அழைக்கப்படுகிறது.

**பரதவர்கள் மத மாற்றம்**

அரேபிய மூர்களின் (சோனகர்) தாக்குதல்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள முத்துக்குளித்துறைப் பகுதியில் வாழ்ந்து வந்த பரதவர்கள் கொச்சியிலிருந்த போர்ச்சுக்கீசியரின் உதவியைக் கி. பி. 1533ஆம் ஆண்டில் நாடினர். பரதவர்கள் கத்தோலிக்கச் சமயத்தைத் தழுவினால் உதவுவதாகப் போர்ச்சுக்கீசியர் கூறவே, பரதவர்கள் அனைவரும் ஒரே குழுமமாகக் கத்தோலிக்கத்தைத் தழுவினர். மூர்களிடமிருந்து பரதவரைக் காப்பாற்றியதும், பரதவர் வாழும் முத்துக்குளித்துறைப் பகுதி முழுவதையும் போர்ச்சுக்கீசியர் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். பரதவர்கள் போர்ச்சுக்கீசிய மன்னனின் குடிமக்களாகக் கருதப்பட்டனர். போர்ச்சுக்கீசியக் குடிப்பெயர்களான வாஸ், கோமாஸ், பர்னாந்து என ஏறத்தாழ அறுபது குடிப்பெயர்கள் பரதவர்களுக்குச் சூட்டப்பட்டன. போர்ச்சுக்கல் மன்னனின் நேரடி கட்டுப்பாட்டிற்குள் இருந்த பதுருவா குருக்கள் பரதவர்களிடையே மறைப்பணி ஆற்ற வந்தனர்.

**போர்ச்சுக்கீசியர்களின் சுரண்டல்**

போர்ச்சுக்கல் நாட்டின் பொருளாதார நலனை மையமாகக்கொண்டே முத்துக்குளித்துறைப் பகுதியில் போர்ச்சுக்கீசிய அதிகாரிகள் செயல்பட்டனர். தூத்துக்குடியைத் தலைமை இடமாகக் கொண்டு செயல்பட்ட போர்ச்சுக்கீசியர்

கள் இப்பகுதியில் கிடைக்கும் முத்துக்களின் வாயிலாகத் தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்வதில் கருத்தாயிருந்தனர். சான்றாக, மார்க்கோ போலோ முத்துக்குளிப்பைப் பற்றிக் குறிப்பிடும்போது எடுத்த முத்தில் பத்தில் ஒரு பங்கு பாண்டிய மன்னனுக்கு வரியாகச் சென்றது என்று குறிப்பிடுகின்றார். போர்ச்சுக்கீசியர் காலத்திலோ எடுத்த முத்தில் நாலில் ஒரு பங்கு போர்ச்சுக்கீசிய மன்னருக்கும், மற்றொரு பங்கு தூத்துக்குடியில் இருந்த போர்ச்சுக்கல் கேப்டனுக்கும், படை வீரர்களுக்கும் சென்றது. மீதமுள்ள பாதியில் ஒரு பங்கு யேசு சபைப் பாதிரியார்களுக்குச் சென்றது. எஞ்சிய ஒரு பங்கே பரதவர்களுக்குக் கிடைத்தது. இதனால் உடல் உழைப்பை மட்டும் நம்பி வாழ்ந்த பரதவர்களின் நலம் பாதிக்கப்பட்டது. மேலும் 16ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் முத்துக் குளித்தல் மற்றும் சங்கு குளித்தல் தொழில் புரிபவர்களிடம் ஒரு குறிப்பிட்ட பங்கை வரியாகப் பெறுவதற்குப் பதிலாக இவற்றை எடுக்கும் உரிமையை வரையறுக்கப்பட்ட தொகைக்குப் போர்ச்சுக்கீசியர்கள் விற்றார்கள். இதன் விளைவாக இவ்விரு முக்கிய தொழில்களும் வளம் படைத்த வணிகர்களின் கைக்குச் சென்றடைந்தன. முத்துக் குளிப்பவர்களும், சங்கு குளிப்பவர்களும் தம் உரிமையை இழந்தனர். அன்றியும் ஒரு நாள் முத்துக்குளிப்பு தூத்துக்குடியிலிருந்த போர்ச்சுக்கல் கேப்டனுடைய மனைவியின் காலணிக்காக ஒதுக்கப்பட்டது.

**மேசைக்காரர்**

போர்ச்சுக்கீசியர்களின் இத்தகைய பொருளாதார சுரண்டலுக்கு நடுவே சில குறிப்பிட்ட பரதவகுலக் குடும்பங்களின் வளம் பெருகியது. முத்துக்குளித்தல், சங்கு குளித்தல் உரிமைகளை விலைக்கு வாங்கியும், போர்ச்சுக்கீசியர்களின் வாணிபத் தரகர்களாக விளங்கியும் இக்குடும்பங்கள் பயன் பெற்றன. பரதவ சாதியின் ஊர்த்தலைவர்களாக விளங்கியவர்களும் இவர்களுள் அடங்குவர். இவர்கள் அனைவரும் போர்ச்சுக்கீசியரிடம் நெருக்கமான உறவு கொண்டிருந்தனர். இப்பரதவர்களின் நல்லெண்ணத்தையும், நெருக்கத்தையும் பெற்று, அதன் வாயிலாக ஏனைய பரதவர்களைத் தம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர போர்ச்சுக்கீசிய அதிகாரிகளும், கத்தோலிக்கச் சமயக் குருக்களும் விரும்பினர். தம் விருப்பத்தை நிறைவேற்றும் வழிமுறைகளுள் ஒன்றாக இவர்களுக்கு அவ்வப்போது விருந்து கொடுத்தனர். இவ்விருந்து மேசையின் முன் நிகழ்ந்தது. பரதவ குலத் தலைவர்களும், வணிகர்களும் போர்ச்சுக்கீசியர்களுக்கு

விருந்து கொடுக்கும்போதும் மேசையைப் பயன்படுத்தினர். பின் தமது அன்றாட வாழ்விலும் மேசைக்கு இடமளித்தனர். தமிழர்களுக்குப் பழக்கப்படாத மேசையின் முன் அமர்ந்து போர்ச்சுக்கீசியருடன் சமமாக விருந்துண்ணும் சிறப்பினைப் பெற்றவர்கள் ஏனைய பரதவர்களால் 'மேசைக்காரர்கள்' என்று அழைக்கப்பட்டனர். சுருக்கமாகச் சொன்னால் பரதவ சாதி வணிகர்களே மேசைக்காரர்கள். இவ்வாறு போர்ச்சுக் கீசிய வருகைக்குப் பின் பரதவ சாதிக்குள் மேசைக்காரர் என்ற மேலோர் குழு ஒன்று உருவாகியது. இம்மேலோர் குழுவின் மையமாக அமைந்தவர் சாதித்தலைவர்.

**சாதித் தலைவர்**

முத்துக்குளித்துறையில் (1) வேம்பாறு (2) வைப்பாறு (3) தூத்துக்குடி (4) புன்னைக்காயல் (5) வீரபாண்டியன் பட்டினம் (6) ஆலந்தலை (7) மணப்பாடு என்ற ஏழு கடற் கரை ஊர்களும் 'ஏழூர்' என்று பரதவர்களால் அழைக்கப் பட்டன. இவ்வேழு ஊர்களிலும் தூத்துக்குடி நீங்கலாக ஏனைய ஆறு ஊர்கள் ஒவ்வொன்றும் பட்டங்கட்டி என்பவ ரால் நிர்வகிக்கப்பட்டன. இவருக்கு 'அடப்பனார்', 'சீதாதி மார்', 'மொடுதோம்ஸ்' என்ற அதிகாரிகள் நிர்வாகத்தில் துணைபுரிந்தனர். இப்பதவிகள் பரம்பரை உரிமையாக வருவன என்றாலும் இவர்கள் அனைவரையும் நியமிப்பவர் தூத்துக்குடியில் இருக்கும் சாதித் தலைவரே ஆவார். தொடக் கத்தில் புன்னைக்காயல் சாதித் தலைவரின் தலைமையகமாக இருந்தது. போர்ச்சுக்கீசியரின் வருகைக்குப் பின் முக்கியத் துவம் பெற்ற நகரமாகத் தூத்துக்குடி விளங்கியதாலும், போர்ச்சுக்கீசிய உயர் அதிகாரிகள் வாழ்ந்ததாலும் சாதித் தலைவர் தூத்துக்குடிக்கு இடம் பெயர்ந்தார். இவரது இருப் பிடம் 'பாண்டியபதி' என்றழைக்கப்பட்டது. மேற்கூறிய ஏழு ஊர்களிலும் வாழ்ந்து வந்த பரதவர்கள் இவரது கட்டுப் பாட்டுக்குள் வாழ்ந்தனர். முத்துக்குளித்துறையில் ஏனைய ஊர்களில் வாழும் பரதவர்களும் இவரது மேலாண்மையை ஏற்றிருந்தனர்.

பரதவர்களின் மீது செல்வாக்குச் செலுத்தும் சாதித் தலைவரைத் தமக்கு நெருக்கமாக வைத்துக்கொள்ளப் போர்ச் சுக்கீசியர் விரும்பினர். எனவே போர்ச்சுக்கல் கௌரவப்பட்ட மான 'சிஞ்ஞோர் சிஞ்ஞோர் டோம்' (Senhor Senhor Dom) என்ற பட்டத்தை வழங்கினர். இப்பட்டத்தைத் தமது பெய ருக்கு முன் சாதித்தலைவர் இட்டுக்கொள்வார். மேலும் 'Lord of the Seven Seas' என்று சாதித் தலைவரை அழைத்து

அவருக்குச் சில வரிகளை வசூலித்துக் கொள்ளும் உரிமைகளை வழங்கினர். தமது அதிகாரத்தின் சின்னமாகத் தங்கச்சிலுவை ஒன்றை நீண்ட தங்கச் சங்கிலியில் கோத்து சாதித் தலைவர் அணிந்திருப்பார். பரதவர்களுக்கு இடையே ஏற்படும் வழக்கு களைத் தீர்த்து வைக்கும் உரிமையும், தண்டம் அளிக்கும் உரிமையும் இவருக்கு இருந்தது. கடற்பன்றி பிடிபட்டால் அதன் தலை சாதித் தலைவர்க்கு உரியது. "பட்டதில் பருமீன்" என்ற அடிப்படையில் நாள்தோறும் கிடைத்த மீனில் பெரிய மீனைச் சாதித்தலைவருக்கு ஒவ்வொரு மீன்பிடிப்பவரும் வழங்கிவிடவேண்டும்.

இவை தவிர சமய வாழ்விலும் சாதித் தலைவருக்குச் சில சிறப்புரிமைகள் வழங்கப்பட்டன. அவை வருமாறு:

1 ஒவ்வொரு கடற்கரை தேவாலயத்திலும் பலிபீடத் திற்கு அருகில் சாதித் தலைவருக்குத் தனி இருக்கை உண்டு.

2 தூத்துக்குடியிலுள்ள பனிமயமாதா ஆலயத்தில் கருவூலப் பெட்டியின் மூன்று திறவுகோல்களில் இரண்டு திறவுகோல்கள் அவரிடமே இருக்கும்.

3 நற்கருணை, புனிதப் பொருட்களையும், சொரூபங் களையும் முத்தமிடுதல், திருநீற்றுப் புதனன்று பங்கு குருவிடம் சாம்பலினால் சிலுவை போட்டுக் கொள் ளுதல், குருத்தோலைத் திருநாள் அன்று குருத்தோலை யைக் குருவிடம் இருந்து பெற்றுக் கொள்ளுதல் ஆகிய சமயச் சடங்குகளில் முதலுரிமை இவருக்கே உரியது.

4 சாதித் தலைவரின் ஆன்ம மற்றும் உலகியல் நன்மைக் காகத் தேவாலயங்களில் திருவழிபாடு நிகழ்ந்தபின் சிறப்புச் செபம் நிகழும்.

5 சாதித் தலைவர் பதவியேற்பு விழா எவ்விதக் கட்டண மும் பெறாது பனிமயமாதா கோவிலில் நிகழும்.

6 திருமுழுக்கு, திருமணம், இறப்பு போன்ற சடங்குகளுக் காகச் சாதித் தலைவரின் உறவினர்களும், அவரது குழந்தைகளும் கட்டணம் ஏதும் திருச்சபைக்குச் செலுத்த வேண்டியதில்லை.

7 திருச்சபை நடத்தும் கல்வி நிறுவனங்களில் சாதித் தலைவரின் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி.

8 ஆகஸ்டு 5ஆம் நாள் நிகழும் பனிமயமாதா தேர்த் திருவிழாவின்போது தேர் வடத்தை முதலில் தொட்டு இழுத்து, தேரோட்டத்தைத் தொடங்கி வைத்தல்.

9 அனைத்து சமய ஊர்வலங்களும் (தேரோட்டம் உட்பட) சாதித்தலைவரின் இல்லமான பாண்டியபதி யின் முன் நின்று செல்லவேண்டும்.

10 சாதித் தலைவரின் பதவியேற்பு விழாவின்போதும், சாதித்தலைவர் மற்றும் அவரது குழந்தைகளது விழாக்களின் போதும் பனிமயமாதா உருவத்தை மறைத்துள்ள திரையை விலக்குவதுடன் பொன்முடி மற்றும் அணிகலன்களால் அலங்கரித்து வைத்தல்.

இவ்வாறு மேசைப் பிரிவைச் சார்ந்த சாதித் தலைவர் சமய வாழ்விலும் தனிச்சிறப்புரிமைகளைப் பெற்றிருந்தார்.

**கம்மாரக்காரர்**

முத்துக்குளித்தல், சங்கு குளித்தல், மீன் பிடித்தல், வாணிபச் சரக்குகளைக் கொண்டு செல்லும் பெரிய தோணி களைச் செலுத்துதல் எனக் கடினமான உடலுழைப்புத் தேவைப்படும் தொழில்களை மேற்கொண்டு வாழ்ந்த பரதவர் கள் கம்மாரக்காரர்கள் என அழைக்கப்பட்டனர். எண்ணிக்கை யில் இவர்களே மிகுதியானவர்கள்.

**மேசைக்காரர்—கம்மாரக்காரர் உறவு நிலை**

கடின உடலுழைப்பில் இருந்து அந்நியமான மேசைக் காரர்கள், கம்மாரக்காரர்களை மதிக்கவில்லை. அவர்களது உடல் உழைப்பை இழிவானதாகக் கருதினர். “கடல்ல முங்கினவனுக்கு கால் புத்தி” என்பது கம்மாரக்காரர்களைக் குறித்து மேசைக்காரர்களிடம் வழங்கிய பழமொழி. மேலும் மீன்பிடித்தலை இழிவான தொழிலாக இவர்கள் கருதினார்கள். அதே நேரத்தில் நெய்தல் நில மக்களான பரதவர் குலத்தினர் தாங்கள் என்பதை மறைக்கவும் முடியவில்லை. எனவே மீன் பிடித்தல் உயரிய மக்களாலும் மேற்கொள்ளப்பட்ட ஒன்று என்பதை நிரூபிக்கும் முயற்சியில் ஈடுபட்டார்கள். இதற்குச் சான்றாக மேசைப்பிரிவைச் சார்ந்த ரோச் விக்டோரியாவின் பொருளுதவியுடன் 1892ஆம் ஆண்டில் வெளியான “பரதகுல பாண்டியர் பழமை” என்ற நூலில் இடம்பெற்றுள்ள சில செய்திகளைக் குறிப்பிடலாம். வலை வீசியாவது, தூண்டில் போட்டாவது “மீன் வேட்டையாடுவது இழிசனருக்கு மாத் திரம் உரிய ஈனத்தொழில் ஆகாமல் எவ்வளவோ மேன்மையும், கௌரவமும் பொருந்திய மேன்மக்களுக்கும், உல்லாசத்திற்கும்

உரிய தொழிலென்றொப்பிப்பது இங்கேயே நமது கடமையாகும்'' என்று குறிப்பிட்டுவிட்டு, சிவபெருமான் என்று சொல்லப்படுகின்ற சந்திரசேகர பாண்டியனும், குலசேகர பாண்டியனும் பிரெஞ்சு நாட்டு தளபதிகளும் மன்னர்களும், பிரபுக்களும், பத்தாம் சிங்கராயர் என்ற போப் ஆண்டவரும் மீன்பிடித்தலைப் பொழுதுபோக்காகக் கொண்டிருந்தமையை எடுத்துக்காட்டுகிறார். மேலும் ''கடலினிடத்து வேட்டையாடுவதும் அரசர்களுக்குக் கற்பிக்கப்பட்ட தொழில்'' என்று குறிப்பிடுகின்றார்.

இதுபோன்றே மணப்பாட்டுச் செல்வர்களின் உதவியால் 1902இல் வெளியான ''பரவர் புராணம்'' என்ற நூலிலும் ''பாண்டியர் பரவரான இலம்பகம்'' என்ற பகுதியில் சந்தர்ப்ப வசத்தால் பாண்டியர்கள் பரதவர்கள் ஆகி மீன்பிடிக்கும் தொழிலை மேற்கொண்டார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கூறிய இவ்விரு நூல்களிலும் இடம் பெற்றுள்ள செய்திகள் மீன்பிடித்தலை மேசையர்கள் இழிவாகக் கருதியதை உணர்த்துகின்றன. மீன்பிடிக்கும் பரத இனத்தில் பிறந்தமைக்காகத் தங்களை இழிவாக யாரும் கருதிவிடக்கூடாது என்ற நோக்கில் மீன்பிடித்தல் மன்னர்களும், பிரபுக்களும் ஏன் போப்பாண்டவரும் விரும்பி மேற்கொண்ட பொழுதுபோக்கு என்று கூறியுள்ளனர்.

இத்தகைய மனநிலை சமுதாய வாழ்விலும் எதிரொலித்தது. மேசைக்காரர்கள், கம்மாரக்காரப் பரதவர்களுடன் மண உறவு கொள்வதில்லை. மணப்பாடு, வீரபாண்டியன் பட்டினம் ஊர்களில் வாழும் வளம் படைத்த பரதவர்களிடம் மட்டுமே மண உறவு வைத்தனர். மேசையர் வீட்டுத் திருமணத்திற்குக் கம்மாரக்காரர்களை அழைத்தாலும் தாம்பூலம் மட்டுமே கொடுத்து அனுப்பிவிடுவர். திருமண விருந்தில் மேசையர்கள் மட்டுமே பங்குகொள்வர். கம்மாரக்காரர் வீட்டுத் திருமணத்திற்குச் செல்லும் மேசையர் அங்கு உணவருந்தாது தாம்பூலம் மட்டும் பெற்றுக் கொள்வார்கள்.

பரதவ சாதியினருக்கு இருபத்தொரு விருதுகள் உண்டு. பரதவர்களின் மங்கல அமங்கல நிகழ்ச்சிகளை ஒட்டி இவ்விருதுகளும் குடைகளும் எடுத்துச் செல்லப்படும். இவை அனைத்தும் சாதித் தலைவர் இல்லத்திலேயே இருக்கும். இவற்றைப் பயன்படுத்த, சாதித் தலைவரிடம் அனுமதி பெற வேண்டும், இவ்வனுமதி கிடைப்பதில் மேசைக்காரர்களுக்கும் கம்மாரக்காரர்களுக்கும் இடையில் அவ்வப்போது பாகுபாடு காட்டப்படுவதுண்டு. பரதவர்கள் தங்கள் வீட்டில் நடக்கும் திருமணத்

திற்கு முதல் வெற்றிலை பாக்கு சாதித் தலைவரிடம் வைத்து மரியாதை செலுத்துவர். பனிமயமாதாவின் தேர் செல்லும் நான்கு வீதிகளிலும் திருமண, மரண ஊர்வலம் செல்லும் உரிமை மேசைக்காரர்களுக்கே உரியது.

இச்செய்திகள் முகாமையான குழுவின் பண்பாட்டு மேலாண்மையையும், அடித்தளப் பிரிவினரான கம்மாரக்காரர்கள் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் இருந்ததையும் காட்டுகின்றன.

**கம்மாரக்காரர் மேசைக்காரராதல்**

காலப்போக்கில் தூத்துக்குடி நகர் விரிவடைந்து தொழில் வளர்ச்சியும், இரயில் போக்குவரத்தும், கல்விக் கூடங்களும் உருவாயின. இதன் விளைவாகக் கம்மாரக்காரர்களிலும் வணிகர்களும், செல்வர்களும் உருவாயினர். பொருளாதார நிலையில் வளர்ச்சி பெற்றாலும் தங்களது சாதிக்குள் மேசைக்காரருக்கு அடுத்த சமூக மதிப்பைத்தான் இவர்கள் பெற முடிந்தது. இதே காலகட்டத்தில் ஆங்கிலேயர்களின் முறையான சிவில் நிர்வாக அமைப்பின் காரணமாகச் சாதித்தலைவரின் வருவாயும், அப்பதவியின் அவசியமும் சுருங்கின. மேசைக்காரர்களில் சிலர் பொருளாதார நிலையில் தாழ்ந்தனர். இத்தகைய சூழலில் சமூக உயர் மதிப்பைப் பெற விரும்பிய கம்மாரக்காரச் செல்வர்கள் தங்களைவிடப் பொருளாதார நிலையில் தாழ்ந்த அல்லது தங்களுக்குச் சமமான மேசைக்காரக் குடும்பங்களுடன் மண உறவு கொண்டனர். இத்தகைய திருமணங்கள் நிகழ்ந்தபொழுது மண உறவு கொள்ளும் மேசைக்காரர்கள் சாதித் தலைவருக்கு அபராதம் செலுத்த வேண்டியிருந்தது. இன்னும் சில கம்மாரக்காரர்கள் தங்க எலுமிச்சம்பழம் ஒன்றைச் செய்து சாதித் தலைவரிடம் கொடுத்து, மேசைக்காரராகத் தம்மை உயர்த்திக் கொண்டனர். இவ்வுயர்வை மேசைக்காரர் ஏற்றுக்கொள்ளும் வகையில் சாதித் தலைவருக்கும், புதிதாக மேசைக்காரரான கம்மாரக்காரர் தம் செலவில் விருந்து கொடுக்கவேண்டும். தங்கத்தின் விலை உயர்ந்தபோது தங்க எலுமிச்சம் பழத்திற்கு மாற்றாகச் சாதித்தலைவர் நிர்ணயம் செய்யும் ஒரு தொகையைக் கொடுக்கும் பழக்கமும் தோன்றியது.

**ம்ம ாரக்காரர்—மேசைக்காரர் முரண்பாடு**

பொருளாதார அடிப்படையில் பரதவ சாதியில் உருவான மேசைக்காரப் பிரிவு பண்பாட்டு ஆதிக்கத்தையும், பொருளாதாரச் சுரண்டலையும் நிகழ்த்தியது. கம்மாரக்காரர்களில் ஒரு

பிரிவினர் கல்வி அறிவு பெற்ற மத்தியதர வர்க்கமாக மாறினர். மற்றொரு பிரிவினர் விலைமதிப்புமிக்க தோணிகளுக்கு உரிமையாளர்களாகவும், வெள்ளையர் நிறுவனங்களின் முகவர்களாகவும், தரகர்களாகவும் விளங்கினர். இவர்கள் மேசையரின் பண்பாட்டு மேலாண்மையை விரும்பவில்லை. மற்றொரு பக்கம் கடின உடலுழைப்பை மேற்கொண்டு வாழ்ந்த கம்மாரக்காரர்கள் சாதித்தலைவர் மற்றும் மேசைக்காரர்களின் பொருளாதாரச் சுரண்டலையும் அவர்கள் விதிக்கும் தண்டனைகளையும் வெறுத்தனர். சாதியாலும் மதத்தாலும் ஒன்றாக இருந்தாலும் ஒரு தனிக்குழுவாகச் செயல்பட்ட மேசையர் மற்றும் சாதித்தலைவருக்கு எதிராக இம்மூன்று பிரிவினரும் ஓரணியில் நின்றனர்.

## மேசை எதிர்ப்புப் போராட்டத்தின் தொடக்கம்

மேசைக்காரர்களின் பண்பாட்டு மேலாண்மையின் சின்னமாகச் சாதித்தலைவர் விளங்கியதால் கம்மாரக்காரரின் மேசை எதிர்ப்புப் போராட்டம் சாதித் தலைவரை மையமாக வைத்தே தொடங்கியது. 1889இல் டோம் கபிரியேல் டி குருஸ் பல்டோனா என்ற சாதித் தலைவர் இறந்து போனார். இவருக்கு ஆண் வாரிசு இல்லாமையால் இவரது பேரன் டோம் கபிரியல் டி குருஸ் லாசர் மோத்தாவாஸ் சாதித் தலைவராகப் பட்டம் சூட்டப்பட்டார். கம்மாரக்காரர்கள் இதனை எதிர்த்தனர். தங்களின் எதிர்ப்பை ஆங்கில அரசுக்குத் தெரிவித்தனர். இம்முயற்சியில் கம்மாரக்காரர்கள் வெற்றி பெறாவிட்டாலும் சாதித் தலைவருக்கு எதிராகக் கம்மாரக்காரர்களால் குரல் எழுப்ப முடியும் என்பதையும் இவர்களிடையே ஒரு தலைமை உருவாகியதையும் இந்நிகழ்ச்சி உணர்த்தியது.

1908 ஆகஸ்ட் 5ஆம் நாள் பனிமயமாதா தேர்த்திருவிழா நடைபெற்றது. இத்தேரோட்டத்தில் தேர்வடத்தை முதலில் தொட்டு இழுக்கும் சாதித் தலைவரின் உரிமைக்கு எதிராகக் கம்மாரக்காரர்கள் குரல் எழுப்பினர். சாதித் தலைவரின் இவ்வுரிமையைத் தடுக்கும் முயற்சியில் கம்மாரக்காரர்கள் வெற்றிபெற இயலவில்லை என்றாலும் மேசை எதிர்ப்பு உணர்வு கனன்று கொண்டு இருந்ததை இந்நிகழ்ச்சி உணர்த்தியது.

1914ஆம் ஆண்டில் டோம்கபிரியல் டி குருஸ் பல்டோனா காலமானார். இவரது மகனைச் சாதித் தலைவராக முடிசூட்ட மேசைக்காரர்கள் முயன்றனர். இறந்துபோன சாதித் தலைவரே இப்பதவிக்கு முறையற்ற வாரிசு என்ற நிலையில் அவரது மகனைச் சாதித் தலைவராக ஏற்க முடியாது என்று

கம்மாரக்காரர்கள் எதிர்த்தனர். இம்முறை தங்களது எதிர்ப்பை ஆங்கில அதிகாரிகளுக்கு மனுவின் மூலம் தெரிவித்ததுடன் நின்று விடவில்லை. தங்கள் நிலையை விளக்கித் துண்டுப் பிரசுரங்களையும், அச்சடித்த அறிக்கைகளையும் வெளியிட்டனர்.

மேசைக்காரர்கள் புதிய சாதித் தலைவர் நியமனத்தை அங்கீகரித்து, 'அங்கீகாரப் பத்திரம்' அனுப்பவேண்டும் என்று திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு விண்ணப்பம் அனுப்பினர். முத்துக்குளிக்கும்போது மரபுப்படி சாதித் தலைவருக்குரிய பங்கு அளிக்கப்படும் என்றும், சாதித் தலைமை என்பது அவர்களது உள் விவகாரம் என்பதால் அதில் தாம் தலையிடுவதற்கு இல்லை என்றும் ஆட்சித் தலைவர் பதில் எழுதினார். மீண்டும் இது தொடர்பாக மேசைக்காரர்கள் விண்ணப்பம் அனுப்பியும் மாவட்ட ஆட்சித்தலைவர் தம் நிலையிலிருந்து மாறவில்லை.

இந்நிலையில் கம்மாரக்காரர்கள் 1914 டிசம்பரில் முதல் பரதவ மாநாட்டை நடத்தினர். பரதவ சாதியினரின் கல்வி, வாணிபம், தொழில் முயற்சி தொடர்பான கருத்துக்கள் இம் மாநாட்டில் முக்கிய இடம் பெற்றன. பல கடற்கரை ஊர்களிலும் இருந்து குறிப்பிடத்தகுந்த அளவில் பரதவர்கள் இம் மாநாட்டில் கலந்து கொண்டது கம்மாரக்காரர்களுக்கு மகிழ்ச்சியை அளித்தது. சாதித் தலைவர் என்ற பதவி அனைத்துப் பரவர்களாலும் உருவாக்கப்படும் ஒன்றாக இருக்க வேண்டுமே தவிர, தங்களை மேல் வகுப்பார் என்று கூறிக் கொள்ளும் ஒரு பிரிவினரின் பரம்பரை உரிமையாக இருக்கக் கூடாது என்ற கருத்தைக் கம்மாரக்காரத் தலைவர்கள் வலுவாகப் பரப்பினர். இவர்களைப் பொறுத்தவரையில் சாதித் தலைமை என்பதை மறுக்காது ஏற்றுக்கொண்டாலும் அது பரம்பரை அடிப்படையில் இருக்கக் கூடாது என்பதை அவர்கள் அச்சிட்டு வெளியிட்டுள்ள அறிக்கைகளில் தெரியப் படுத்தினர். 18-9-1916இல் பரதவ சாதித் தலைமையைப் பற்றித் தூத்துக்குடி பரத பாண்டியர் சங்கம் ஓர் அறிக்கையை வெளியிட்டது. இதையடுத்து, மேசைக்காரர்களை உறுப்பினர்களாகக் கொண்ட பரதகுல மகாஜன சங்கம் 18-6-1916இல் நிகழ்த்திய கூட்டத்தில், பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன:

1 தொன்றுதொட்டு பரதகுலத்திற்கு ஓர் மகிமையாகவும், பாண்டிய அரச வம்சத்தினரென் ஸ்தாபிக்கத்தக்க நிர் விவாத சாதனமாகவும் வாழையடி வாழையாக வந்து

கொண்டிருக்கும் ஜாதித் தலைமையென்னும் கௌரவ பதவியை மாமூல்படி ஆதரித்து உற்சாகப்படுத்தி வர வேண்டியது அவசியம்.

2 முதல் தீர்மானத்தில் கண்ட ஜாதித் தலைமை யென்னுங் கௌரவப் பதவிக்கு எவ்வாற்றானுஞ் சர்வ பாத்தியதையுடையவரும், வாரீஸ்தாரும், காலஞ் சென்றுபோன ஜாதித் தலைவமோர்தொன் கபிரியல், தெ. குரூஸ் லாசர் மோத்தவாஸ் அவர்களது சிரேஷ்ட குமாரருமாகிய தொன் அனஸ்தாசியும் மோத்த கொரைறா அவர்களே நமது சாதித் தலைவ ராக இருந்து வருகின்றமையால் அவர்களுக்குரிய சுதந்தரங்களை மாமூல்படி செலுத்த வேண்டியது நியாயமுங் கடமையுமாயிருக்கின்றது.

3 நமது ஜாதித் தலைவர் தொன் அனஸ்தாசியுஸ் மோத்த கொரைறா அவர்களுக்கு மாமூல்படி பட்டாபிஷேக உத்ஸவம் நடத்தி வைக்க வேண்டியது.

நான்காவது தீர்மானத்தில் இவ்விழாவை நடத்தும் பொறுப்பை நிர்வகிக்க இருபத்தாறு உறுப்பினர்களைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டது. இச்செய்திகள் அடங்கிய அறிக்கை ஒன்று 'பரதகுல மகாஜன பொது மீட்டிங்' என்ற தலைப்பில் 23-6-1916இல் வெளியானது.

இத்தீர்மானத்திற்கு மறுப்பாக 'பரத ஜாதித் தலைமை' என்ற தலைப்பில் 2-7-1916 நாளிட்ட அறிக்கை ஒன்றை பரத பாண்டிய சங்கம் வெளியிட்டது.

> பரத ஜாதித் தலைமையைப் பற்றித் தூத்துக்குடி பரதபாண்டிய சங்கத்தார் சென்ற மாதம் 18உ வெளி யிட்ட அருமைத்திருமுகம் பார்த்திருப்பீர்கள். சங்கத்தின் நல்லபிப்ராயம் சகலராலும் ஒப்புக்கொள்ளப்படுமென்ப தற்குச் சற்றென்கிலும் சந்தேகமில்லை. ஆயினும் தூத்துக்குடி சங்கத்தார் எதனை விரும்புகின்றனரோ அதனையே ஏனையவூர்ச் சகோதரரும் ஒப்புக்கொள்ள வேண்டுமெனல் சங்கத்தாரின் நோக்கமல்ல. ஏனெனில் சாதிக்குத் தலைமை ஸ்தாபிப்பது ஜாதியார் எல்லோருக் கும் உரித்தானது. இந்த உரிமையைக் கொண்டு ஒவ் வொரு ஊராரும் தத்தம் பிரதிநிதிகளைத் தெரிந்து கொள்ள பாத்தியதையிருக்கிறது. அப்படித் தெரிந்து கொள்ளப்பெற்ற பிரதிநிதிகளுக்குள் எவர் லாயக்குள்ள வரோ அவரையே ஓட் மூலமாய் ஜாதித் தலைவராக நியமனம் பண்ண வேண்டும்

இவ்வாறு தொடங்கும் அறிக்கை, தொன் சூசை என்ற தலைவர் காலத்தில்தான் சாதியப் பிரிவினை செய்யும் மேசை உருவானது என்று குறிப்பிட்டு, இறுதியில்

> ...தலைமை ஸ்தாபனம் சாதாரண காரியமெனெ நினைத்து எரிகின்ற வீட்டில் பிடுங்குகிறது லாபம் என பார்ப்பது எட்டுணையும் உசிதமல்ல. ஆகையால் காவேரி முதல் கன்னியாகுமரி வரை, பரதஜன சமூகத்தார் வசிக்கும் ஊர் ஒவ்வொன்றிலும் தலைமை விஷயமாய்ப் பொதுக் கூட்டம் கூடி அவ்வவ்வூருக்கு ஓர் பிரதானியைத் தெரிந்து கொள்ள வேண்டும். தெரிந்து கொண்டதை ஆங்காங்குள்ள பிரமுகர்களுக்குத் தபால் மூலமாவாது அல்லது ஜாதி பிர சித்தமாகப் பத்திரிகை வழியாகவென்கிலும் அவ்வப்போது அறிவித்துக் கொள்ளல் வேண்டும். காரியாதிகளை ஆர அமர யோசித்துத் தீர்மானிப்பதே மிகவும் சிரேஷ்டம். ஏனெனில் ஜாதித் தலைமை ஸ்தாபகம் சாதாரண கரும மல்ல. நம்மெல்லோருக்குமே அது ஓர் ஜீவாதாரமான விஷயமாமென்க

என்று முடிவடைகிறது.

மேசைக்காரர்களும் முடிசூட்டு விழாவிற்கான ஏற்பாடு களை மேற்கொள்ளத் தொடங்கினர். கம்மாரக்காரர்களின் எதிர்ப்பை எதிர்கொள்ளும் வழிமுறையாகப் பிற ஊர்களில் வாழும் பரதவர்களின் ஊர்த் தலைவர்களான தலைமைக்காரர் (பட்டங்கட்டி), சீதாதி, ஊரார் ஆகியோருக்கு எம். பி. கோமாஸ் என்பவர் கடிதம் எழுதினார். இக்கடிதத்தில் முடி சூட்டுவிழாவையும் அது தொடர்பான கொண்டாட்டங்களை யும் எவ்வாறு நிகழ்த்த வேண்டும் என்பது தொடர்பாக அவர் களது கருத்துக்களைக் கேட்டிருந்தார். இக்கடிதங்களுக்குக் கிடைக்கும் பதிலின் அடிப்படையில் சாதித்தலைவர் பதவி யேற்பு அனைத்து பரதவர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்ற கருத்தை உருவாக்குவதே எம். பி. கோமாஸின் நோக்க மாகும். ஆனால் அவர் எதிர்பார்ப்புக்கு மாறாக வெளியூர் பரதவர்களின் பிரதிபலிப்பு அமைந்தது.

**தூத்துக்குடி**
**ஸ்ரீமாஞ். எம். பி. கோமாஸ் அவர்களின் பொறுப்பும், கீழக்கரை பரதகுல ஊரவர்களின் மறுப்பும்**

என்ற தலைப்பில் கீழக்கரை "பரதகுல ஊரவர்களின் உத்தர வின்படி" ஏ. பர்னாந்தீஸ் என்பவர் 1-5-1917இல் எழுதிய

கடிதம் அச்சிடப்பட்டு வெளியானது. அக்கடிதத்தின் இறுதியில் பின்வரும் கருத்து வலியுறுத்தப்பட்டது.

> ஜாதியை விபரீதப்படுத்திப் பகையுண்டு பண்ணி, குடும்ப சங்கடங்களையும், சகோதரப் பிரிவையும், குற்ற வரைக்கும் நிலை நிற்க செய்த நாலுகால் பாழும் மேசையொழிந்தும், மேசையரென்ற அகங்காரிகளின் ஓசையழிந்து போக வேண்டுமென்பது எமது துணிபு. இனி ஜன சமூக அங்கீகாரத் தலைமை நியமன அறிக்கையென நாமகரணஞ் சூட்டப்பெற்ற பத்திரம் எமக்குக் கிடைத்த பின்னரே எம்மூரிலிருந்து பிரதிநிதிகள் அனுப்பப்படுவார்கள். அப்படிக்கின்றி அநாகரீக மேசையரின் சாரமற்ற துண்டுக்கடிதங்களுக்கு எம்மூர் கிஞ்சிற்றேனுஞ் செவி சாய்க்காது. "விநாசகாலம் விபரரீதப்புத்தி" என்னும் ஆன்றோர் மொழிக்கிணங்க அவசரப்பட்டு தலைமை தலைமை என ஓலமிடுவது சற்றெங்கிலும் பொருந்தாது. ஜாதியின் மகிமையைக் கெடுத்த சந்ததிகளிலென்கிலும், பணச்செருக்கால் பிரிந்து போன மேசையரிலாகிலும், பரத ஜாதித் தலைமை ஸ்தானம் ஏற்படாமல், ஜனசமூக அங்கீகாரத்தோடு மதிக்கப்பெற்ற ஒரு உத்தம புருஷன் ஜாதித் தலைவராக வேண்டுவதே எனது முழு அபிப்ராயம். ஆகையால் அக்காலம் வரும் வரையில் தம்முடைய தலைமை பேச்சுத் தள்ளி வைக்கப்பட்டிருக்குமெனத் தெரிந்து கொள்க.

புன்னைக்காயல், உவரி போன்ற ஊர்களிலிருந்தும் வந்த கடிதங்களும் இக்கருத்தையே பிரதிபலித்தன.

இதன் பின்னர் பரத மகாஜன நாட்டினர் கூட்டமொன்று 18-5-1917 இல் கம்மாரக்காரர்களால் கூட்டப்பட்டது. இக்கூட்டத்தில் சாதித் தலைவர் நியமனம் தொடர்பாகப் பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது:

> பரத ஜாதித் தலைமை ஸ்தானத்தில், தொன்சூசை வாஸ், தொன்கபிரியேல்வாஸ் குவர்களால் நம் ஜாதிக்கு சம்பவித்து இதுவரையும் இருந்து வருகின்ற ஐயக் குறைவு நீங்கி ஸ்திரமான ஒற்றுமை ஏற்பட்ட பிற்பாடுதான், ஜாதித்தலைமை நியமன விஷயத்தைப் பற்றி யோசிக்க வேண்டுமெனவும், இந்த நமது நன்னோக்கத்தை ஏற்கனவே அனுசரித்து ஜாதிப் பிளவு எடுபட்டு ஜாதியாருக்குள் சமாதானம் குடிகொண்டாலொழியத் தலைமை நியமிக்கக் கூடாதென அயலூர் சகோதரர்களிடமிருந்து

வந்த கடிதங்களை இதனோடு தாக்கல் செய்து கொள்ள வேண்டுமெனவும் தீர்மானிக்கலாயிற்று.

இதற்கு மாறாக 20-5-1917 இல் மேசைக்காரர்கள் கூட்டிய பரத மகாஜனம் புதிய ஜாதித் தலைவரை ஏற்றுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றியது.

21-5-1917 இல் மீண்டும் கூடிய கம்மாரக்காரர்கள் ''திரு. எம். பி. கோமெஸ் வகையறாக்களால் பரத ஜாதித் தலைமை நியமனத்திற்குத் தெரிந்து கொள்ளப்பட்ட திரு. அனஸ்தாசியூஸ் மோத்த, பரத ஜாதித் தலைமைக்கு வாரீசு மல்ல. பரதஜாதி தலைமைக்கு லாயக்குமல்ல, ஆகையால் ஷெ யாரை நமது பரத ஜன சமூகம் ஏற்றுக் கொள்ளவில்லையெனத் தீர்மானிக்கப் பெற்றது'' என முடிவுசெய்தனர்.

இத்தகைய நிலையில் சாதித் தலைவர் பெரும்பாலான பரதவர்களின் ஆதரவின்றி சாதித் தலைவராக விளங்கினார். மேசைக்காரர்களும், கம்மாரக்காரர்களும் ஒருவருக்கொருவர் முரண்பட்டு நின்று தீர்மானங்கள் நிறைவேற்றல், சிறு பிரசுரங் கள் மற்றும் அறிவிப்புக்கள் வெளியிடல் என்ற செயல்களைத் தொடர்ந்து நடத்தி வந்தனர். மணப்பாட்டைச் சேர்ந்த ஜே. எல். மிராண்டா என்ற யேசு சபைத் துறவி இருதரப்பின ரையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். இதனடிப் படையில் மேசைக்காரர் தரப்புத் தலைவர்களும், கம்மாரக் காரத் தரப்புத் தலைவர்களும் 1925 அக்டோபரில் சந்தித்தனர். இச்சந்திப்பின் விளைவாக உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது. அதே மாதம் மணப்பாட்டில் நிகழவிருந்த நான்காவது பரத மாநாட்டில் அனைத்துப் பரதவர்களும் வேறுபாடின்றிக் கலந்து கொள்ளும் வகையில், சாதித் தலைவர் பதவியேற்பு விழாத் தொடர்பான தீர்மானங்களை நிறுத்தி வைப்பதாக இவ்வுடன்படிக்கை குறிப்பிட்டது.

இவ்வுடன்படிக்கையின் அடிப்படையில் பரத மாநாடு அமைதியாக நடைபெறும் என்ற நம்பிக்கை மணப்பாட்டு மாநாட்டின் வரவேற்புக் குழுவினருக்கு ஏற்பட்டது. 1925 அக்டோபர் 16ஆம் நாள் பரதவ மாநாடு தொடங்கியது. மேசைச்காரர்கள் சார்பான பரதமா ஜனசங்க நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தனியாகக் கூடி அமைதி உடன்பாட்டிற்கு எதிரான நடவடிக்கையை மேற்கொண்டனர். அதிகாரபூர்வ மற்ற கூட்டத்தில் முடிவு செய்யப்பட்ட அமைதி உடன் படிக்கையானது உண்மையில் ஒரு பரிந்துரையே என்று முடிவு செய்தனர். இது அதிகாரபூர்வமற்ற உடன்படிக்கை என்பதால் தாங்கள் இதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் கூறினர்.

மாநாடு தொடங்கியதும் மாநாட்டிற்குத் தலைமை வகித்தவர் அமைதி உடன்பாட்டிற்கு மாறான தீர்மானங்கள் மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்படாது என்று உறுதியாகக் கூறினார். இதை ஆதரித்தும் எதிர்த்தும் கூச்சல் கிளம்பியது. அமைதி உடன்படிக்கையை மேசைக்காரர்களின் பரதமகா ஜனசங்கம் ஏற்றுக்கொண்டாலொழியத் தங்களது பரத பாண்டிய சங்கத்தினர் மாநாட்டு நடவடிக்கைகளில் கலந்து கொள்ளமாட்டார்கள் என்று கம்மாரக்காரர்கள் உறுதியாகக் கூறிவிட்டனர். பரதமகா ஜன சங்கத்தினர் திருத்தப்பட்ட உடன்படிக்கை ஒன்றைக் கொண்டு வந்தனர். பின்னர் தாங்கள் விரும்பியபடி மேனுவல் லூயிஸ் டி. குரூஸ் அனஸ்தாசிஸ்தியா மோத்தா கொரைறாவைச் சாதித் தலைவராக உறுதி செய்யும் தீர்மானத்தை நிறைவேற்றினர்.

இதன் பின்னர், மேசை எதிர்ப்பு நீறு பூத்த நெருப்பாகவே விளங்கி வந்தது. அவ்வப்போது மேசை எதிர்ப்புப் பிரசுரங்களும் துண்டறிக்கைகளும் கம்மாரக்காரர்களால் வெளியிடப்பட்டன. கம்மாரக்காரச் செல்வர்களின் சுரண்டலால் பாதிக்கப்படும் பரதவர்களைத் தங்கள் பக்கம் ஈர்க்கும் வகையில் மேசைக்காரர்களும், சில அறிக்கைகளை வெளியிட்டனர்.

**போராட்டத்தின் இறுதிக் கட்டம்**

1947 ஆகஸ்ட் 5இல் பனிமயமாதா திருவிழாவையொட்டித் தேரோட்டம் நிகழவிருந்தது. இத்தேரோட்டத்தில் வழக்கம் போல் தேர் வடத்தை முதலில் தொட்டு இழுக்கும் சாதித் தலைவரின் சிறப்புரிமை கம்மாரக்காரர்களின் எதிர்ப்புக்குள்ளானது. தூத்துக்குடி மறைமாவட்டத்தின் ஆயராக இருந்த ரோச் ஆண்டவர் அமெரிக்கா சென்று விட்டார். இக்காலகட்டத்தில் மேசைக்காரர்களைவிடக் கம்மாரக்காரர்கள் வலுவான பொருளாதார நிலையில் இருந்தனர். இரண்டாவது உலக மகாயுத்தத்தையொட்டி, கொழும்புவிலிருந்த மேசைக்காரப் பரதவர்கள் குண்டு வீச்சுக்குப் பயந்து அங்கிருந்து இடம் பெயர்ந்து வந்திருந்தனர். மீண்டும் அவர்கள் தங்கள் பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்ளச் சிரமப்பட்டனர். இந்தியாவுக்கு விடுதலை கிடைக்கவிருந்த நிலையில் கம்மாரக்காரர்களிடம் மேசை எதிர்ப்புணர்வு உத்வேகம் பெற்றது. நேரிடையான மோதலுக்கு அவர்கள் தயாராக இருந்தார்கள். எனவே, தூத்துக்குடியிலிருந்த வருவாய் மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகள் சமாதான முயற்சியில் ஈடுபட்டனர். தேரோட்டம் தொடர்பாக ஒரு நெறிமுறையை

வகுத்துத் தரும்படி ரோச் ஆண்டகைக்கு வேண்டுகோள் விடுவிக்கப்பட்டது. அவர் அங்கிருந்து "Jati first pull after clergy" என்று ஒரு தந்தியை அனுப்பி வைத்தார். இருதரப்பினரும் தங்கள் விருப்பத்திற்கு ஏற்பப் பொருள் கொள்ளும் வகையில் தந்தி வாசகம் அமைந்திருந்தது. மேசைக்காரர்கள் 'Jati first pull' என்று நிறுத்தி 'after clergy' என்று படித்து, சாதித் தலைவர் தேர்வடத்தை முதலில் தொட்டு இழுக்க வேண்டும் என்பது ஆயரின் கட்டளை என்றனர். இவ்வாசகத்தைத் தொடர்ச்சியாகப் படித்து சமய குருவிற்குப் பின்னரே சாதித் தலைவர் வடம் தொடவேண்டும் என்று கம்மாரக்காரர் பொருள் கொண்டனர். ஆயரின் இத்தந்தி வாசகத்தால் பிரச்சினை மேலும் குழம்பியது.

இந்நிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் "ஒரே நேர இழுப்பு" (simultaneous pull) என்ற முறையை உருவாக்கினார். இதன்படி மூன்று தேர்வடங்களுள் நடுவிலுள்ள தேர் வடத்தை மதத் தலைவரும், ஒரு புறத்திலுள்ள தேர்வடத்தை சாதித் தலைவர் தலைமையிலுள்ள மேசைக்காரர்களும், மற்றொரு புறத்திலுள்ள தேர் வடத்தைக் கம்மாரக்காரர்களும் பிடித்துக் கொள்ள வேண்டும் என்றும், "மரியே மாதாவே" என்ற குரல் ஒலித்ததும் மூன்று தரப்பினரும் ஒரே நேரத்தில் தேரை இழுக்கவேண்டும் என்றும் முடிவு செய்தார். இம்முடிவு ஏற்கப்படாவிட்டால் தேரோட்டம் நிகழாது என்ற நிலையில் இரு தரப்பினரும் வேறு வழியின்றி இதனை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. இது ஒரு வகையில் கம்மாரக்காரர்களுக்கு வெற்றியாகவும் அமைந்தது.

மணப்பாடு பரத மாநாட்டில் சாதித்தலைவராக மேசைக்காரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மேனுவல் லூயிஸ் டி. குருஸ் அனஸ்தாசிஸ்தியா மோத்தா கொரைறா இந்தியாவின் முதல் பொதுத்தேர்தல் நடந்து முடிந்த பின்பு காலமானார். நாட்டில் ஏற்பட்ட மக்களாட்சி முறைக்கு மாறாகப் பரம்பரை உரிமையின் அடிப்படையில் மீண்டும் ஒரு சாதித் தலைவரை உருவாக்கும் துணிவும் வலிமையும் இல்லாத நிலையில் சாதித் தலைவர் பதவி முடிவு பெற்றது. அத்துடன் மேசையர் மேலாண்மையும் செல்வாக்கும் மறைந்தன.

# வ. உ. சி.யும் சைவ சித்தாந்தமும்

ஆ. இரா. வேங்கடாசலபதி

ஏறத்தாழ அறுபத்தைந்தாண்டுகளுக்குப் பிறகு, வ. உ. சிதம்பரம் பிள்ளை (1872-1936) அவர்கள் சிவஞான போதத்திற்கு எழுதிய உரை மறுபதிப்பாகின்றது. வ.உ.சி.யின் வீரஞ் செறிந்த தியாக வாழ்வுக்கு உருவகமாகக் கப்பலும் செக்கும் அமைந்துவிட்டன. ஆனால், உண்மையில், பன்முகத்தன்மை வாய்ந்த அவருடைய வாழ்க்கை இவ்வுருவகங்களுக்கு அப்பாற்பட்டும் விரிந்து நிற்கின்றது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைப் பதிற்றாண்டு, இருபதாம் நூற்றாண்டின் முதற்சில பதிற்றாண்டுகள் ஆகியவற்றில் தமிழ்ச் சமூகத்தில் தொழிற்பட்ட பல்வேறு கருத்தியல் போக்குகளும் வ.உ.சி.யின் வாழ்க்கையிலும் அவருடைய செயல்பாடுகளிலும் ஊடாடி நிற்கின்றன. இந்தியத் தேசிய இயக்கம் என்ற சட்டகம் மட்டுமே அவற்றை வரையறுத்துவிடப் போதுமானதன்று.

வ. உ. சி.க்குத் தமிழ்/சைவ உலகில் இருந்த இடம் இன்று பெரிதும் அறியப்படாதது. இதனை விளங்கிக் கொள்வதானது சிவஞான போதத்திற்கு அவர் இயற்றிய உரையைத் தக்க பின்புலத்தில் புரிந்துகொள்வதற்கு இன்றியமையாதது. அதனைச் சிறிது விரித்துப் புறப்பார்வையாக முன் வைப்பது இக்கட்டுரையின் நோக்கம்.

பதினெட்டாம் நூற்றாண்டின் கடைப்பகுதியிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் சமஸ்கிருத வழிப்பட்ட இந்திய மரபு பற்றிய ஒரு பெரும் தேடலும் விழிப்புணர்வும் ஐரோப்பிய அறிஞர்களிடம் ஏற்பட்டன. 'கீழைத்தேயவியம்' (Orientalism) எனப்படும் இந்த அறிவு மரபு, இன்று ஆதிக்கம் செலுத்தும் இந்து/இந்தியப் பண்பாடு என்பதைக் கட்டமைத்துள்ளது என்றே சொல்லவேண்டும். இது முன்னெடுத்த பார்ப்பனிய/வைதீக மரபுக்கு மாற்றாக, பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில், தமிழ்/திராவிட வழிப்பட்ட ஒரு மாற்று அறிவு மரபு முகிழ்த்தது. கால்டுவெல்லின் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' (1856) இதன் தொடக்கப்புள்ளியாகக் குறிக்கப்படும். ஆறுமுக நாவலர், சி. வை. தாமோதரம் பிள்ளை, உ. வே. சாமிநாதையர் முதலான

தமிழறிஞர்களின் அரும் பணியால், பல காலம் 'சமயக் கணக்கர் மதிவழி' சென்று, மைய நீரோட்டத் தமிழ் மரபி லிருந்து புறந்தள்ளி வைக்கப்பட்டிருந்த சங்க இலக்கியக் கருவூலம் மீண்டும் தமிழ்ச் சமூகத்தின் மையத்திற்கு வந்தது. வடமொழித் தளையிலிருந்து விடுபட்டு, தனித்து இயங்கும் தன்மையும் தொன்மையும் நிறைந்ததாக நிலைநிறுத்தப்பட்ட தமிழ் மொழியின் மூலம் தமிழர்களுக்கென ஒரு தனித்த அடை யாளம் சமைக்கப்பட்டது.

வடமொழி சார்ந்த வைதீக மரபை ஊற்றுக்கண்ணாகக் கொண்டு இந்தியத் தேசியம் அனைத்திந்திய அளவில் வளர்ந் தது. தமிழ் நாட்டில் இதன் அடித்தளமாகப் படித்த, நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்த பார்ப்பனர்கள் விளங்கினர். மரபுவழிப் பட்ட சாதிய மேலாண்மையை, காலனியாதிக்கத்தின்கீழ் நவீனமயமாகிவந்த சமூகத்திலும் தகவமைக்க இந்தியத் தேசியமும் அதன் கருத்தியல் மூலங்களும் பயன்படுத்தப் பட்டன.

அரசியல், சமூகக் களங்களில் இதற்குத் தமிழ் நாட்டில் அறைகூவல் விடுத்தவர்கள், பெரிதும் நிலவுடைமையைப் பொருளியல் பின்புலமாகக் கொண்டு, மேற்கத்திய கல்விமுறை யின் மூலம், நவீனச் சமூகத்தில் பார்ப்பனர்களுக்குப் போட்டி யாக வந்த பல்வேறு வேளாளச் சாதியினர் ஆவர். காலனிய ஆட்சிக்காலத்தில் இச்சாதிகள் பிறப்பித்த அறிவாளர்களின் எண்ணிக்கையும் அவர்களின் சாதனைகளும் இந்தியத் தேசிய அறிவாளர்களுக்கு எவ்வகையிலும் குறையாதன.[1]

இவர்கள் தமிழ் வழிப்பட்டதொரு மாற்று மரபை மீட்டுருவாக்கம் செய்ய முனைந்தனர். இதில் ஒரு போக்கு சாதி சமயங்களை முற்றாக மறுத்து, பொதுமையும் சமத்துவ மும் நிறைந்த தமிழ்ச் சமூகத்தை நிறுவி, அனைத்துப் பிரிவின ரையும் இணைத்துச் செல்ல முற்பட்டது (பெரியாரின் தலைமையிலான சுயமரியாதை இயக்கம்). இதன் இன்னொரு போக்கு, பெரிதும் பார்ப்பனரல்லாத, வேளாள உயர்சாதி யினரைச் சமூக அடித்தளமாகக் கொண்டிருந்தது. இப் போக்கு, தமிழைச் சைவத்தோடு இணைத்து நோக்கியது. சங்க காலத்தை வேளாளர் நாகரிகத்தின் உச்சமாகவும், சைவ சமயத்தைத் தமிழர் சமயமாகவும் கண்டது. சைவமும் தமிழும் ஒரு பொருட் பன்மொழியாகப் புரிந்துகொள்ளப்பட்டன என்றாலும் பொருத்தமானதே.

சமூக நோக்கில் இது விமரிசனத்திற்கு உரியதே எனினும், புதிதாக உருப்பெற்றுவந்த நவீனச் சமூகத்தில் பார்ப்பனிய மேலாண்மையை எதிர்த்தது என்பதாலும், கருத்தியல் நிலை

யில் வைதீக மரபுக்கு அறைகூவலாக அமைந்தது என்பதாலும், இதன் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிட்டுவிடக் கூடாது.

தமிழகமெங்கும் சைவ சபைகள் தொடங்கப்பட்டன: சைவ சித்தாந்த சபை, தூத்துக்குடி (1883); சைவ சித்தாந்த சபை, திருச்சி (1885); சைவ சபை, பாளையங்கோட்டை (1886). சைவ சபைகளின் ஒருங்கிணைப்பு மையமாகச் சைவ சித்தாந்த மகா சமாஜம் 1905இல் நிறுவப்பட்டது. சித்தாந்த சாத்திரங்கள் உரையோடும் விளக்கத்தோடும் ஆங்கில மொழிபெயர்ப்போடும் வெளியிடப்பட்டன. 1897இல் 'சித்தாந்த தீபிகை' வெளிவரத் தொடங்கியது. பெ. சுந்தரம் பிள்ளை, சூளை சோமசுந்தர நாயகர், வெ. ப. சுப்பிரமணிய முதலியார் மறைமலையடிகள், கா. சுப்பிரமணிய பிள்ளை என ஒரு பெரும் அறிஞர் வட்டம், பிரதேச எல்லைகளைக் கடந்து, தமிழகம் தழுவிய அறிவாளர்களாக எழுந்தனர்.

மேலும், அன்றைய தமிழ்ச் சமூகத்தின் சாதியக் கட்டமைப்பில் இடைநிலையில் இருந்த பல சாதிகள் மேனிலையாக்கம் பெறுவதற்கும் சைவம் பயன்பட்டது. இந்தியாவின் பிற பகுதிகளில் மேனிலையாக்கம், சமஸ்கிருதமயமாக்கம் என்ற வடிவத்தை எடுத்ததற்கு (அதாவது பார்ப்பன நிலையினை அடையும் இலக்கு) மாறாக, தமிழ்ச் சமூகத்தில் இடைநிலைச் சாதிகள் வேளாள நிலையை அடைய முற்பட்டன. 'கள்ளர், மறவர், அகமுடையார் மெள்ள மெள்ள மாறி வெள்ளாள ரானார்' என்ற பழமொழியும் இதனை நன்குணர்த்தும். பல சாதிகள் 'பிள்ளை' எனும் பட்டத்தைப் பெயருக்குப் பின்னொட்டாகப் பயன்படுத்துவதையும் இங்கு நினைவில் கொள்ளலாம். 'புதுவை முரசு' என்ற ஏடு 1931இல் குறிப்பிட்டவாறு,

> நாட்டார்கள் என்பவர்கள் யாரென்பது அநேகருக்குத் தெரியாது. அவர்கள்தான் சைவம் பரப்பப்படுவதற்கு முன்பு 'கள்ளர்கள்' என்று அழைக்கப்பட்டவர்கள்... 'அன்பு'மயமாகிய சைவம் பரவ ஆரம்பித்துப் பழைய 'கள்ளர்கள்' புது 'நாட்டார்கள்' ஆன பின் அநேக விஷயங்களில் அவர்கள் நாகரீகமடைந்துவிட்டார்கள்.[2]

வேளாளரே மிக உயர் சாதியாக விளங்கக்கூடிய யாழ்ப் பாணச் சமூகத்திலும் இதனையொத்த சமூக அசைவியக்கம் தொழிற்படுவதைப் பேராசிரியர் கா. சிவத்தம்பி சுட்டிக் காட்டியுள்ளார்.[3]

**வ.உ.சி.யும் சைவருலகும்**

இந்தப் பின்னணியில் வ. உ. சி.யின் சைவச் செயல்பாடுகளைப் புரிந்துகொள்ள வேண்டும். இந்தியத் தேசிய இயக்கம், தொழிலாளர் இயக்கம், ஜஸ்டிஸ் கட்சி, சுயமரியாதை இயக்கம் எனத் தம் சமகால அரசியல் இயக்கங்கள் எல்லாவற்றுடனும் வ.உ.சி. தொடர்பு கொண்டிருந்தவர்தான் எனினும், பொது வாழ்க்கையில் சைவருலகோடு இடையறாத ஈடுபாட்டை அவர் கொண்டவராய் இருந்திருக்கிறார்.

1872இல் இன்றைய தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரத்தில் பிறந்த வ. உ. சி., 1898இலேயே காங்கிரஸ் இயக்கத்தோடு தொடர்பு கொண்டிருந்தார் எனத் தெரிகிறது.[4] எனினும், அவரது ஆரம்ப கட்டப் பொது வாழ்க்கை சைவத்தோடு இணைந்திருந்திருக்கிறது. சைவக் கோலத்தில் பல அன்பர்களோடு சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படம் ஒன்றும் இந்தக் காலப்பகுதியில் காணக் கிடைக்கின்றது.[5]

1900இல் ஒட்டப்பிடாரத்திலிருந்து தூத்துக்குடி நகருக்குக் குடிபெயர்ந்த வ.உ.சி., அங்கு சைவ சித்தாந்த சபையுடன் நெருங்கிய உறவு வைத்துக் கொண்டிருந்திருக்கிறார். 1908இல் வ. உ. சி. கைது செய்யப்பட்டதையொட்டி இரகசியப் போலீசார் தயாரித்த வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பும் இதை உறுதி செய்கின்றது.[6]

> சைவசித் தாந்த சபையினுட் புகுந்து
> கைவரக் கொண்டேன் கருத்தினி துரைத்தலை

என்று அச்சபையில் உரையாற்றியதன் மூலம் தாம் பேச்சாற்றலை வளர்த்துக் கொண்டதை வ.உ.சி. தம் சுய சரிதையில் பதிந்துள்ளார்.[7] 1904 சூன் முதல் 1905 ஆகஸ்டு வரை மட்டும் அச்சபையில் எட்டுச் சொற்பொழிவுகளை ஆற்றியிருக்கிறார் வ.உ.சி.[8] மேலும், தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் ஆண்டுக் கூட்டங்கள் பலவற்றில் சிறப்பு அழைப்பாளர்களை வரவேற்று வ.உ.சி. வாழ்த்துப் பாக்களைப் பாடியிருக்கிறார்.[9] சிவஞான போத உரைக்குத் தொடக்கப் புள்ளியாக அமைந்த வ.உ.சியின் முதற் சொற்பொழிவு தூத்துக்குடி சபையிலே தான் நிகழ்த்தப் பெற்றது என்பதை அவரே தம் உரையின் பிற்சேர்க்கையில் குறித்துள்ளார் என்பதும் இங்குக் கருதத்தக்கது.

சைவருலகின் தனிப்பெரும் அறிஞராக விளங்கிய மறைமலையடிகளோடு 1903இலேயே வ.உ.சி.க்குத் தொடர்பு இருந்ததை முன்னவரின் நாட்குறிப்புகள் காட்டுகின்றன.[10]

1903இல் தம் ஆசிரியர் சூளை சோமசுந்தர நாயகரைப் பற்றி இயற்றி வந்த 'சோமசுந்தர விஜயம்' எனும் நூல் பற்றிய அறிக்கையைத் தூத்துக்குடியிலிருந்த வ. உ. சி.க்கு மறைமலையடிகள் அனுப்ப, அவர் அதற்குக் கையொப்பம் செலுத்தி இருக்கிறார்.[11] மறைமலையடிகளின் 'முல்லைப் பாட்டு ஆராய்ச்சியுரை'யினையும் வ.உ.சி. விலைக்கு வாங்கியிருக்கிறார்.[12] 1905 மே திங்களில், தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையில் உரையாற்ற வந்தபோது மறைமலையடிகள், வ.உ.சி.யின் இல்லத்தில் தங்கி உணவருந்தி இருக்கிறார்.[13] மறைமலையடிகள் நடத்தி வந்த 'ஞானசாகரம்' இதழின் இரண்டாம் தொகுதிக்கு (1904) 10 ரூபாய் நன்கொடை செலுத்தி, 'கௌரவாபிமான சீலர்' ஆக வ.உ.சி. விளங்கி இருக்கிறார்.[14] 1906 ஆம் ஆண்டில் ஒவ்வொரு நான்கு மாதத்திற்கும் கையொப்பம் செலுத்தி, சைவ சித்தாந்த மகாசமாஜத்திலும் வ.உ.சி. உறுப்பினராய் விளங்கியிருக்கிறார்.[15]

1906இல் வேகம் பெற்ற சுதேசி இயக்கக் காலத்தில் சுதேசிக் கப்பல் கம்பெனியை நிறுவியும், தொழிலாளர் வேலைநிறுத்தத்தை முன்னின்று நடத்தியும், தென் தமிழ்நாட்டில் பெருமளவு மக்களை அரசியல் ரீதியாகத் திரட்டியும் இந்தியத்தேசிய இயக்க வரலாற்றில் நீங்கா இடம் பெற்ற வ.உ.சி., 1908இல் கைது செய்யப்பட்டார். 1912ஆம் ஆண்டின் கடைசி நாள்களில் தான் சிறையிலிருந்து விடுதலை கிடைத்தது. இந்த வேகமான அரசியல் இயக்கச் செயல்பாடுகளுக்கிடையில் அவருடைய சைவச் செயல்பாடுகளுக்கு இடம் இருந்திருப்பது ஐயமே.

இதன் பிறகு சென்னையிலும் (1913-1920), கோயம்புத்தூரிலுமாக (1920 – 1924) அவருடைய வாழ்க்கைப் போராட்டம் தொடர்ந்திருக்கிறது. பொருள் வளம் குன்றிய நிலையிலும், அரசியல் வேலைகளோடு இலக்கியப் பணிகளும் தொடர்ந்திருக்கின்றன. தூத்துக்குடி சிவநேசச் செல்வர் சபையின் 10, 11 ஆம் ஆண்டு நிறைவுக் கூட்டங்களில் 1922, 1923ஆம் ஆண்டுகளில் வ.உ.சி. கலந்துகொண்டு உரையாற்றியமைக்குச் சான்று உள்ளது.[16]

1925இல் பெரியார் ஈ.வெ.ரா. சுயமரியாதை இயக்கம் கண்ட பிறகு, தமிழ்நாட்டின் அரசியல் வாழ்க்கையில் பெரு மாற்றம் ஏற்பட்டது. பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் திசைப் போக்கையும் இந்நிகழ்வு மாற்றிவிட்டது. பார்ப்பனரல்லாத மேல்சாதிகளின் நலன்களையே பெரிதும் பிரதிபலித்து வந்த நீதிக் கட்சியிலிருந்து விலகி, தமிழ்ச் சமூகத்தின் இடைத்தட்டுச் சாதிகளை உள்ளடக்கி, தீவிரமான கருத்தியல் முனைப்பைச் சுயமரியாதை இயக்கம் கொண்டிருந்தது. இப்

பண்பு மாற்றமும் அளவு மாற்றமும் பார்ப்பனரல்லாதார் இயக்கத்துக்குள் வேளாளரின் நிலையை ஆட்டங் காண வைத்தன. சமய மறுப்பு, சாதி எதிர்ப்பு, புராணக் கண்டனம், கடவுள் மறுப்புப் பிரசாரம் முதலான சுயமரியாதை இயக்கத் தீவிரக் கொள்கைப் பிரசாரம் சைவருலகுக்குப் பெரும் அறை கூவலாக விளங்கியது.[17]

இதை எதிர்கொள்ள முனைந்தபொழுது சைவருக்குள் பிளவுகள் தோன்றின. முதல் பிரிவினரான பொ. முத்தைய பிள்ளை, சுவாமிநாத பண்டிதர், ராம. சொ. சொக்கலிங்க ஐயா, பலவான்குடி இராமசாமி செட்டியார் போன்றோர் கடுஞ்சைவர் எனத் தக்கவர். இவர்கள் எந்தவிதமான மாற்றத்தையோ சீர்திருத்தத்தையோ விரும்பாத வரட்டுத்தனம் மிக்கவர்கள். திரு. வி. கலியாணசுந்தர முதலியார், ச. சச்சிதானந்தம் பிள்ளை, மா. பாலசுப்பிரமணிய முதலியார் முதலான பெரும்பான்மைச் சைவப் பெருமக்களை நடுத்தரச் சைவர் எனலாம். காலத்துக்கேற்றவாறு சில சீர்திருத்தங்களைச் செய்து, சைவத்தைத் தகவமைத்துக் கொண்டு, அதனைக் காப்பது இவர்கள் நோக்கம். வ. உ. சி. சொ. முருகப்பா, பொ. திரிகூடசுந்தரம் பிள்ளை, கே. எம். பாலசுப்பிரமணிய முதலியார் முதலானோரைச் சீர்திருத்தச் சைவர் எனக் குறிப்பிடலாம். இவர்கள் சுயமரியாதை இயக்கத்தின் பிரசாரத்தால் கவரப்பட்டு, சற்று தீவிரமான நிலைப்பாட்டை மேற்கொண்டனர். ஆனால், நடைமுறைகளில்தான் இவர்களுக்கும் நடுத்தரச் சைவர்களுக்கும் வேறுபாடேயொழிய, கருத்தியல் முறையில் பெருமளவு இடைவெளி இல்லையென்றே சொல்லவேண்டும்.

சைவருலகில் 1920களிலும் 1930களிலும் நிலவிய மேற்கண்ட பிரிவிகளினூடே வ.உ.சி.யின் சைவக் கருத்தியல் பார்வையில் ஏற்பட்ட மாற்றங்களை இனிப் புரிந்துகொள்ள முயல்வோம். 1928இல் செட்டிநாட்டில் அவர் ஆற்றிய சொற்பொழிவுகளில் பல சீர்திருத்தக் கருத்துகளைச் சற்று அழுத்தமாகவே வெளியிட்டார்.[18] பிறப்பின் அடிப்படையில் ஏற்றத்தாழ்வு கற்பித்தல், பெண்ணடிமைத்தனம், குழந்தை மணம், நீத்தார் நினைவு கடைப்பிடித்தல், 'சிறு' தெய்வங்களுக்கு உயிர்ப்பலியிடுதல் போன்றவற்றை அவ்வுரைகளில் கடிந்து பேசியதில் வ.உ.சி.யின் சீர்திருத்த உணர்வும், சுயமரியாதை இயக்கக் கொள்கைகளின் செல்வாக்கும் துலக்கமாக வெளிப்படுகின்றன.

"சிரார்த்தம் என்ற பெயரால் பார்ப்பாருக்கு அளிக்கப்படும் அரிசி, காய்கறி முதலியன பிதுர்களுக்குப் போய்ச்சேரு

மென்று கூறுவது பொய்யேயாகும்'' என்றும், ''மனுஸ்மிருதி கொடுமை நிறைந்த நூல்'' என்றும் வ.உ.சி. எடுத்துக் கூறினார். இவற்றுக்கும் மேலாக,

> எந்த நூலானாலும் குற்றமிருக்குமானால் அதனைத் தள்ளத் தயங்கக்கூடாது. நமக்குக் கடவுள் பகுத்தறிவைக் கொடுத்திருக்கிறார். அதனைக்கொண்டு ஆராய்வோம்... கடவுள் எழுதினார் என்று கூறப்படும் நூலிலும் பிழையிருக்குமானால் அதனையும் தள்ள வேண்டியதுதான்... பெரிய புராணத்தில் கூறப்பட்டிருக்கும் மனுஸ்மிருதி இப்பொழுது உள்ளதுதான் என்று கூறினால், சேக்கிழாருக்கும் பிராமணருக்கும் சம்பந்தமுண்டென்று கூறுவதைத் தவிர வேறென்ன சொல்வது? வேதத்தில் பிழைகளிருக்கலாம். திருத்த வேண்டியதுதான். சைவத்திலும் அப்படியேதான்...[19]

கடுஞ்சைவர்கள் இதற்காக வ.உ.சி.யை மிகக் கடுமையாகத் தாக்கியுள்ளனர். குறிப்பாக, பொ. முத்தைய பிள்ளை 'அரங்கின்றி வட்டாடல்' என்ற தலைப்பில் கடிந்து எழுதிய போது, வ.உ.சி. சிறை சென்றதை இழித்துக் கூறினார். இதற்கு மறுமொழியாக, 'அரங்கு வகுப்பார் யார்?' என்ற பொருள் பொதிந்த கேள்வியை வ.உ.சி. எழுப்பினார். இவ்விவாதம், செட்டிநாட்டிலிருந்து வெளியான 'சிவநேசன்' என்ற கடுஞ்சைவ இதழில் நடந்தது. இதில், சுயமரியாதைக் கொள்கைகளில் சீர்திருத்தச் சைவருக்கிருந்த உறுதிப்பாட்டின்மையைக் காண முடிகின்றது. செட்டிநாட்டுச் சொற்பொழிவுகளில் காணப்படும் தீவிரம், பொ. முத்தைய பிள்ளைக்கு எழுதிய விடையில் பெருமளவு நெகிழ்ந்திருப்பதைப் பார்க்க முடிகின்றது.

1929 மார்ச்சில் திருநெல்வேலியில் நடந்த சைவப் பெரியார் தனிக்கூட்டம் இங்கு முக்கியத்துவம் வாய்ந்தது. சைவருலகில் பெரும் புயலைக் கிளப்பி, சுயமரியாதை இயக்கத்தின் அறைகூவலுக்கு நடுத்தரச் சைவரின் விடையாக இக்கூட்டம் அமைந்தது. அதில் கலந்துகொண்ட வ. உ. சி. சீர்திருத்தச் சைவரின் அணியினையே சார்ந்திருந்தார்.

> [விஷயாலோசனைக் கூட்டத்தில்] சைவ சமயத்தைச் சீர்திருத்த வேண்டிய முறைகளைப் பற்றி திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் எடுத்துக் கூறினார்கள். ஆனால் அவர்களுடைய சீர்திருத்த முறைகளைப் பலர் ஒத்துக்கொள்ளவில்லையாதலால் திரு. பிள்ளையவர்கள் உடனேயே கமிட்டிக் கூட்டத்தினின்றும் வெளியேறினார்

என்று 'குமரன்' (11 ஏப்ரல் 1929) குறிப்பிட்டது. 'குடி அரசு' இதழ் (7 ஏப்ரல் 1929) இதனை உறுதிப்படுத்தும் வகையில்,

> ...விஷயாலோசனைக் கமிட்டியில் திருவாளர் வி.ஓ. சிதம்பரம் பிள்ளை, திரிகூடசுந்தரம் பிள்ளை முதலியவர்கள் கூட்டத்திற்கு அனுமதிக்கப்படவில்லையாம். இதனால் திரு. சிதம்பரம் பிள்ளை அவர்கள் சைவப் பெரியார் மகாநாட்டிற்கு வந்ததில் சைவத்தில் மற்றவர்களையும் பற்றுக்கொள்ளச் செய்வதற்குப் பதிலாகச் சைவத்தி லிருந்து பிரிந்துபோக நேரிட்டதுதான் சைவப் பெரியார் மகாநாட்டின் பலன் என்று சொல்லிக் கொண்டு வெளியேறி விட்டாராம்

என்று எழுதியது. சுயமரியாதை இயக்க ஏடுகளான 'குடி அரசு', 'குமரன்' ஆகியவற்றின் கூற்றுகளில் மிகை உள்ளது என்று தோன்றுகிறது. இவற்றுக்கு மறுப்பாக, ம. பால சுப்பிரமணிய முதலியார் எழுதிய பதிலில், சைவப் பெரியார் தனிக் கூட்டத்தில் வ. உ. சி.யின் பங்கைப் பற்றிப் பின்வருமாறு கூறியிருந்தார்.

> இனித் திருவாளர் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் கூட்டத்தில் நடந்து கொண்டதைப் பற்றிக் கூறுதும். முதல் நாள் இரவு விஷயாலோசனைக் கூட்டத்துக்கு அவர் வந்திருந்தார். ஒவ்வொரு தீர்மானத்தையும் நன்கு ஆராய்ந்து ஒவ்வொரு வார்த்தையையும் நன்றாய்க் கவனித்து, பல திருத்தங்களெல்லாம் சொன்னார். முதல் இரண்டு தீர்மானங்களை முழுவதும் ஒப்புக்கொண்டார். மூன்றாவது தீர்மானத்தில் சைவ உணவு கொள்ளுதல் அவசியம் என்பதை ஒப்புக்கொள்வதாகவும் சிவ சின்னங் களாகிய 'சாம்பல், கொட்டை'யால்தான் சைவர்கள் கெட்டுப்போகிறார்களென்றும் சின்னங்கள் அணிதல் அநுட்டானப் பகுதியென்றால் சைவர்கள் குறைந்து சைவமே அழியுமென்றும் வாது செய்தார். சின்னங்களணி வது இன்றியமையாதது என்று நான் வற்புறுத்தினேன். பிறகு தலைவரும் திருவாளர்கள் கே. சுப்பிரமணியப் பிள்ளையும், ந. மு. வேங்கடசாமி நாட்டாரும் கேட்டுக் கொண்டதின்மேல் இன்றியமையாதது என்ற சொல்லை நீக்கிப் பொது அநுட்டானமாகும் என்று முடித்தோம். அதற்கு திரு. வ. உ. சி. பிள்ளை ஒன்றும் குறைகூறவில்லை. மூன்றாவது நாள் பொதுக் கூட்டத்துக்கு வந்தபோதும் பட்டையாகத் திருநீறணிந்தே வந்தார். அன்று விஷயா லோசனைக் கூட்ட உறுப்பினர்களிடம் கையெழுத்து

வாங்கியபோதும் தாமும் கையெழுத்து செய்துள்ளார். சைவப் பெரியார் தனிக்கூட்டத்தினிறுதியில் புகைப்படம் எடுத்தபோதும் விபூதியணிந்து வந்து இப்பெரியார் உடனிருந்தார்.[20]

சீர்திருத்த நாட்டத்திற்கும் நடைமுறை ஒழுகலாறுகளுக்கும் இடையே தத்தளிக்கும் நிலை வ. உ. சி. யிடம் இருந்ததை இது புலப்படுத்துகின்றது. அவருடைய சிவஞான போத உரையைப் புரிந்து கொள்வதற்கு இந்தப் பின்னணி இன்றியமையாதது.

**சிவஞான போத உரை**

1934-35ஆம் ஆண்டளவில் சிவஞான போத உரையின் முன் வடிவை வ. உ. சி. எழுதியிருக்கிறார். அதனைத் 'தினமணி' யில் வெளியிட்டிருக்கிறார். அதன் பிறகு, அவ்வுரை தூத்துக்குடி—எட்டையபுரம் நெடுஞ்சாலையில் உள்ள குறுக்குச்சாலையில் அ. செ. சு. தர்மச் சத்திரத்தில் அரங்கேற்றப்பட்டுள்ளது. அவ்வரங்கேற்றத்தில் பெறப்பட்ட எதிர்வினைகளைக் கருத்தில்கொண்டு, தம் உரையைச் செப்பனிட்டு நூலாக்கியிருக்கிறார் வ.உ.சி. இதற்கு இடைப்பட்ட காலத்தில் 'ஞானவாசிட்டம்' என்ற வேதாந்த நூலை முறையாகப் பயின்றிருக்கிறார் எனத் தெரிகிறது. ச. சோமசுந்தர பாரதிக்கு எழுதிய ஒரு கடிதத்தில் (12-9-1935)

> ஒவ்வொரு காலையிலும் மணி 7 முதல் 9 வரையிலும் இவ்விடம் கீழூர் மகா-ா-ா-ஸ்ரீ பிரமானந்த சுவாமிகள் மடத்தின் தற்கால அதிபதி ஸ்ரீ சோமசுந்தர சுவாமிகள் துறவிகளும் இல்லாருமாகிய 25 பேர்களுக்கு 'ஞானவாசிட்டம்' சொல்லி வருகிறார்கள். அவ்விருபத்தைந்து பேர்களில் நான் ஒருவன்[21]

என்று வ. உ. சி. குறிப்பிட்டுள்ளார்.

ஒரு வாழ்நாள் முழுவதும் கொண்டிருந்த சைவ ஈடுபாட்டின் விளைவு வ.உ.சி.யின் சிவஞான போத உரை எனல் மிகையன்று. அதே வேளையில் மரபான சித்தாந்தப் புலமைக்கும், பொது வாழ்விலும் மக்கள் சார்ந்த அரசியல் இயக்கத்திலும் கொண்ட முனைப்புக்கும் இடைப்பட்ட ஒரு தத்தளிப்பை வ.உ.சி.யிடம் உணர முடிகின்றது.

புதுமை நாட்டமும் மக்கள் நலமும் மனத்தில் கொண்ட வ.உ.சி., கடுஞ்சைவத்தைக் கடுமையாக எதிர்கொண்டிருக்கிறார். இருப்பினும், ஒரு எல்லைக்குட்பட்ட அவருடைய

சீர்திருத்த எண்ணங்கள், வேதாந்தத்தோடு (வைதீகம்) சித்தாந்தத்தைச் சமரசம் காண வைத்துள்ளன என்பதைத் திரு. சி. சு. மணி தம் ஆய்வுரையில் நுட்பமாக விளக்கியுள்ளார். ஆனால், அதே வேளையில், சித்தாந்திகளால் கடுமையாக மறுக்கப்பட்ட நாத்திகக் கொள்கையினையும் அணைத்துச் செல்ல வ.உ.சி. முயன்றிருக்கிறார் என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது.

வ.உ.சி. தாம் வாழ்ந்த காலத்தின், உலகத்தின் கருத்தியல் எல்லைக்குட்பட்டே செயல்பட்டிருக்க முடிந்திருக்கின்றது. இதைச் சுட்டும்போது, இதற்கும்கூடக் கடுஞ்சைவர்களிடமிருந்து கடும் எதிர்ப்பு வந்ததை நாம் மறந்துவிடலாகாது. தீக்கை பெறாதவர் உரை எழுதக்கூடாது என்ற வசைக்கு விடையாக, நூல் அச்சிட்டு முடிந்த பிறகு, உள் அட்டையில் நான்கு வெண்பாக்களை வ.உ.சி. எழுதியிருக்கிறார். மேலும், இவ்வளவில் அமைந்த உரையும்கூட சிவஞான போதம் பற்றிய கடுஞ்சைவரின் புரிதலுடன் ஒப்பிட எத்துணை முற்போக்குடையதாக இருந்தது என்பதை வ.உ.சி.யின் சொற்களாலேயே அறிவோம்.

> சிவஞான போதத்திற்கு ஓர் உரை எழுதித் 'தினமணி' வருஷ அனுபந்தத்திற்கு அனுப்பியுள்ளேன். ஸ்ரீ சிவஞான சுவாமிகள் உரையைக் கண்டித்தால், சைவர், பலர் மனம் நோகுமென்று கருதி அது செய்யாது விடுத்துள்ளேன். என் உரை சுவாமிகள் உரைக்குப் பல இடங்களில் வேறுபட்டும் மாறுபட்டுமுள்ளது. இதற்கும் போலிச் சைவர் குழாம் என்னை நிந்தித்தல் கூடும். அந்நிந்தனையை வந்தனையாகவே கொள்ளும் மனநிலையுடையேன் தற்காலம்.[22]

### சான்றுக் குறிப்புகள்

1 இதேபோல் பெரிதும் புறக்கணிக்கப்பட்ட, அடிமட்ட சாதிகளின் அறிவாளர்களாக அயோத்திதாஸ் பண்டிதர், அத்திப்பாக்கம் வெங்கடாசல நாயகர் முதலானோரைக் குறிப்பிடலாம். இவர்களுடைய பங்களிப்புகளையும், இவர்கள் முன்வைத்த மாற்றுகளையும் அங்கீகரிக்கப்பட்ட அறிவு மரபு இப்பொழுதுதான் அறிந்துகொள்ளத் தலைப்பட்டுள்ளது. இதன் தொடர்பில், அயோத்திதாசரைப் பற்றி அறிய: G. Aloysius, *Religion as Emancipatory Identity: A*

*Buddhist Movement among the Tamils under Colonialism*, New Delhi, 1998.

2 **புதுவை முரசு**, 5 சனவரி 1931, தலையங்கம்.

3 கா. சிவத்தம்பி, **தமிழ்ச் சமூகமும் பண்பாட்டின் மீள் கண்டுபிடிப்பும்**, நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1994, ப. 73-4.

4 **சுதேசமித்திரன்**, 15 ஆகஸ்டு 1898 (**குமரிமலர்**, மே 1981 இல் மறுபதிப்பு).

5 இந்தப் படத்தை வ.உ.சி. கல்லூரி 1972 இல், அவரது நூற்றாண்டு விழாவின்போது வெளியிட்ட மலரில் காணலாம்.

6 'History Sheet of V. O. Chidambaram', G.O. No. 1542, 3 October 1911, Judicial & Confidential, Government of Madras.

7 **வ.உ.சி. சுயசரிதை**, பாரி நிலையம், சென்னை, 1976 (6 ஆம் பதிப்பு), ப. 41.

8 'தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் 22 ஆம் வருட அறிக்கைப் பத்திரமும் நிபந்தனைகளும், 1905' இன் அடிப்படையில் மா. ரா. அரசுவின் குறிப்பு. 'வ.உ.சி.யின் இலக்கியப் பணிகள்', **தமிழ்ப்பொழில்**, சூலை-ஆகஸ்டு 1982.

9 22ஆம் ஆண்டு நிறைவில், தலைவர் பாண்டித்துரைத் தேவர்க்கு வாழ்த்துப்பா (வ.உ.சி., **பாடற்றிரட்டு**, சென்னை, 1914, ப. 21-24); 29ஆம் ஆண்டு நிறைவு விழாவில் தலைவருக்கு வாழ்த்துப்பா (வ.உ.சி., **பாடற்றிரட்டு**, ப. 88-92); 49ஆம் ஆண்டு நிறைவு விழாவில் தலைவர் டி. கே. சிதம்பரநாத முதலியாருக்கு வாழ்த்துப்பா (வ.உ.சி. கையெழுத்துப் படிகள் — மறைந்த வ.உ.சி. சுப்பிரமணியம் பார்வையிடக் கொடுத்தவை).

10 மறைமலையடிகள் ஆங்கிலத்தில் எழுதிய நாட்குறிப்புகளின் தேர்ந்தெடுத்த சில பகுதிகள் தமிழாக்கப் பெற்று நூலுருப்பெற்றுள்ளன. ஆ. இரா. வேங்கடாசலபதி (ப-ர்), **மறைமலையடிகளார் நாட்குறிப்புகள்**, சென்னை, 1988.

11 மறைமலையடிகள் நாட்குறிப்பு, 4-7-1903, 14-7-1903.

12 மறைமலையடிகள் நாட்குறிப்பு, 25-10-1903.

13 மறைமலையடிகள் நாட்குறிப்பு, 29-5-1905; 30-5-1905.

14 **ஞானசாகரம்,** இரண்டாம் தொகுதியின் (1904) ஒவ்வொரு இதழிலும் 'கௌரவாபிமான சீலர்' பட்டியலில் வ.உ.சி.யின் பெயர் இடம் பெற்றுள்ளது.

15 **ஞானசாகரம்** 3(2), மாசி, விசுவாச; 3(7), ஆடி, பராபவ.

16 10ஆம் ஆண்டு நிறைவில் 'திருவள்ளுவர் பெருமை' என்பது பற்றி உரையாற்றி இருக்கிறார் (**சுதேசமித்திரன்,** 28 திசம்பர் 1922); 11ஆம் ஆண்டு நிறைவில் 'திருவள்ளுவர் திறம்' பற்றி உரை (**சுதேசமித்திரன்,** 15 சூன் 1923).

17 திராவிட இயக்கத்திற்கும் சைவருக்குமான உறவைப் பற்றி பிறிதோரிடத்தில் நான் விரிவாக எழுதியுள்ளேன்: **திராவிட இயக்கமும் வேளாளரும்,** சவுத் ஏசியன் புக்ஸ், சென்னை, 1994; 'Dravidian Movement and Saivites', *Economic and Political Weekly,* 8 April 1995; 'At the Margins: Saivite Intellectuals in the Dravidian Movement', in K.A. Manikumar (ed.) *History & Society: Essays in Honour of Professor S. Kadhirvel,* Madras, 1996.

18 **குமரன்,** 26 சனவரி 1928, 8 மார்ச் 1928; 15 மார்ச் 1928 (ஆ. இரா. வேங்கடாசலபதி, **திராவிட இயக்கமும் வேளாளரும்,** பிற்சேர்க்கை 3).

19 **குமரன்,** 26 சனவரி 1928.

20 'இதுவோ சுயமரியாதை', **சித்தாந்தம்,** மே 1929.

21 ஆ. இரா. வேங்கடாசலபதி (ப-ர்), **வ.உ.சி. கடிதங்கள்,** சேகர் பதிப்பகம், சென்னை, 1984, ப. 129.

22 ச. சோமசுந்தர பாரதிக்கு வ.உ.சி. எழுதிய கடிதம் (12-9-1935), **மேலது,** ப. 130.

(வ.உ.சி. சமூக அறிவியல் நிறுவனம், தூத்துக்குடி வெளியிடவிருக்கும் **வ.உ.சி.யின் சிவஞானபோத உரை** என்ற நூலுக்குப் பதிப்பாசிரியர் ஆ. இரா. வேங்கடாசலபதியின் முன்னுரை.)

# புதுமைப்பித்தனின் கனவோடை

## 'கபாடபுரம்' வழியில் ஃப்ராய்டிய விளக்கம்

**தி.கு. இரவிச்சந்திரன்**

நனவோடை (Stream of Consciousness) என்பது படைப்பாக்க உத்திகளில் ஒன்று. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் படைப்பாளிகள் இந்த உத்தியைக்கொண்டு பல படைப்புகளைப் படைத்துள்ளனர். ஏதேனும் ஒன்றைப் பற்றிப் படைக்கும்போது நனவு எண்ண ஓட்டங்களை முழுவதும் படைப்பிற்குள் கொண்டு வந்துவிடுகிற நனவோடை உத்தி இலக்கிய வட்டாரங்களில் குறிப்பிட்ட தாக்கத்தை ஏற்படுத்தியது. நனவோடை தாக்கத்தைத் தொடர்ந்து சில படைப்பாளிகள் 'நனவிலி ஓடை' (Stream of unconscious) என்கிற உத்தியை உருவாக்க முனைந்தனர். நனவுமன எண்ண ஓட்டங்களை நனவோடைப் படைப்புகளாக்குவதுபோல நனவிலி எண்ணங்களையும் படைப்புகளாக்க முற்பட்டனர். இரண்டு உத்திகளிலும் எண்ணவோட்டங்கள் முதன்மையாக இடம் பெற்றாலும் நனவு, நனவிலி என்கிற உளத்தளத்தின் அடிப்படையில் வேறுபட்டு விளங்குகின்றன. நனவோடை நனவுமனத்திலிருந்து வெளிப்படுவதால் இதில் மெய்ம்மை (Reality) அதிகம். அதனால் நனவோடை உத்தியை ரியலிசம் (Realism) என்கிற வகைக்குள் அடக்குவர். மாறாக நனவிலி மனதிலிருந்து வெளிப்படுகின்ற நனவிலி ஓடை உத்தியில் மெய்ம்மைக்குப் புறம்பான கற்பனைகள் நிறைந்திருக்கும். எனவே இதை சர்ரியலிசம் (Surrealism) என்கிற வகைக்குள் அடக்குவர். ரியலிசத்தில் மெய்ம்மையின் பாங்கு அதிகமாக இருக்கும். சர்ரியலிசத்தில் மெய்ம்மையற்ற பாங்கு அதிகமாக இருக்கும். இவற்றில் சர்ரியலிசம் பல புதுமைகளைப் படைத்தது.

சர்ரியலிசம் என்பது படைப்பாளியிடம் வியப்பை உருவாக்கின்ற உத்திமுறை என்று சொல்லலாம். இதில் இடம்பெறுகின்ற படிமங்கள், உருக்கள் ஆகியவை மெய்ம்மைக்குப் புறம்பானவை. பொதுவாகக் கனவுகளில் வருகின்ற படிமங்கள் சர்ரியலிசத்தில் வெளிப்படும். கனவு வெளிப்பாடு போல படைப்பாக்கமும் இயல்புத்தன்மையில் இருக்க வேண்டும் என்கிற வேட்கை காரணமாக சர்ரியலிசப் படைப்பாளிகள்

கனவுப் படிமங்களைத் தமது படைப்பில் வெளிப்படுத்த முனைந்தனர். அதாவது படைப்புச் செயலைக் கனவுச் செயலாக ஆக்கிக் கொண்டனர். இதனால் நனவுமனதின் உறுத்தல்கள், தடைகள் போன்றவற்றிலிருந்து விடுதலை பெற்று அல்லது விடுதலைப் பெற்றது போன்ற மன்நிலையில் இலக்கியங்களைப் படைத்தனர். நனவுமனக் குறுக்கீடுகள் இல்லாத காரணத்தினால் சர்ரியலிச உத்தி தானியங்கு உத்தியாக விளங்கியது. அதாவது உள்ளத்தின் தன்னியல் உருவாக்கமாக (autonomous formation) சர்ரியலிசம் விளங்கியது. அதனால் சர்ரியலிசத்தை உளத்தானியக்கம் (Psychic automation) என்றும் கூறுவர். நனவுமனத்தின் மரபு, தர்க்கம், அறிவியக்கம் போன்றவற்றைப் புறக்கணித்து விழிப்பு நிலையில் கனவு கண்டு, அதை சர்ரியலிஸ்டுகள் எழுத்துக்களாக்கினர். இவர்களின் எழுத்துக்களில் விநோதங்கள் (fantasy) அதிகம் இடம்பெறக் கனவே காரணமாகும். நனவின் தாக்கம் கனவில் வெளிப்படுவது போல் கனவின் தாக்கம் நனவில் வெளிப்படும். இந்த சர்ரியலிசம் கனவை இலக்கியமாக உருமாற்றியதால் வாசகனிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. 'இதை இதற்கு முன்பு எங்கோ பார்த்தது போல் உள்ளது' என்கிற உணர்வை வாசகனிடம் ஏற்படுத்திவிடுகிறது. இந்த உணர்வு கனவுடன் தொடர்புடையதாகும் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே சர்ரியலிசம் என்பது கனவுகளால் உருவாக்கப்பட்ட இலக்கிய வகைமையாகும். அதாவது கனவை மறுகனவு காண்பது போலாகும். எனவே சர்ரியலிசத்தை கனவோடை என்று கூறலாம்.

நனவோடைக்குக் குறிப்பிட்ட வரம்புகளுண்டு. நனவோடையில் எண்ணவோட்டங்கள் நனவடங்கு மனதைக் கடக்காது. கனவோடையின் வரம்பு நனவிலி வரை ஆழப்பட்டுள்ளது. மிக ஆழமான சிந்தனைகள் கனவோடையில் வெளிப்படுவதால் இவைகளில் 'உள்ளுணர்ச்சி சார்பு' அதிகம் இடம் பெறும். தன்னியல் உருவாக்கம் (Autonomous Formation), தானியங்கு படைப்பு (automatic writing), விநோதம் (Fantasy), தர்க்கமற்றதன்மை (ill logic), உள்ளுணர்ச்சி சார்பு (Instinctual) ஆகியவை கனவோடையின் முக்கியப் பண்புகளாகும். இவற்றை எல்லாம் ஒட்டுமொத்தமாகக் கொண்டு ஆந்தர் பிரெடன் (Andre Breton) என்கிற சர்ரியலிஸ முன்னோடி கொடுத்த வரையறை இங்குக் குறிப்பிடத்தக்கது:

> உள் மனதின் தடையற்ற சுய இயக்கம். எண்ணங்களின் செயல்முறையைச் சொல்லாமல் எழுத்தால் அல்லது வேறு முறைகளை வெளிப்படுத்துவதற்கான உள்மனதின் தடை

யற்ற சுய இயக்கம். அழகியல் மற்றும் தர்மார்த்த நெறி முறைகளைப் புறந்தள்ளிவைத்துவிட்டு அறிவு எந்தக் கட்டுப்பாடும் விதிக்காதபோது சிந்தனை போட்ட டிக்டேசன்.

இந்த வரையறை கனவு வரையறைக்கு இணையாக இருப்பதைக் காணலாம். எனவே சர்ரியலிசத்தைக் கனவின் கனவு என்று கூறலாம். அதாவது தூக்கக் கனவின் விழிப்புக் கனவு எனலாம்.

கனவு எந்த ரூபத்தில் வெளிப்பட்டாலும் அதில் கனவு உத்திகள் இடம் பெற்றிருக்கும். குறிப்பாக 'எண்ணங்களின் இணைவு' (association of thoughts) இடம் பெற்றிருக்கும். கனவில் வெளிப்படுகின்ற உருக்கள் அனைத்தும் எண்ணங்களை அடிப்படையாகக் கொண்டவையாகும். இதே அடிப்படையில் உள்ளத்திலிருந்து நனவோடையாகவோ கனவோடையாகவோ வெளிப்படுகின்ற எண்ணங்களில் தொடரியலான தொடர்பு அல்லது இணைவு இருக்கும். இந்த இணைவை நனவோடையில் நனவுமனம் செய்யும். ஆனால் கனவோடையில் எண்ணங்களே இணைவை ஏற்படுத்திக் கொள்ளும். அதாவது கனவோடையில் இடம் பெற்றுள்ள இணைவுகள் எண்ணங்கள் தாமாகவே ஏற்படுத்திக் கொண்டதாகும். இச்செயல் உளப்பகுப்பாய்வு கூறுகின்ற 'தடையில் இயைபு' (Free association) போன்றதாகும். கனவு வெளிப்பாட்டைத் தடையில் இயைபு முறையோடு ஃப்ராய்ட் இணைத்து விளக்கிய பிறகு சர்ரியலிஸ்டுகளிடம் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. அதன் விளைவாக ஃப்ராய்டின் கனவுக் கோட்பாடுகளை ஆதாரமாகக் கொண்டு சர்ரியலிஸ்டுகள் கனவுக்காகத் தவமிருந்தனர். கனவுகள் அனைத்தும் நனவிலியின் 'இறுக்கக் குறைப்பு' செயல் போன்றது என்று ஃப்ராய்ட் கூறியதால் சர்ரியலிஸ்டுகள் இன்னும் தீவிரமாகக் கனவோடை முறையைக் கையாண்டனர். தமிழில் கனவோடை உத்தியைக் கையாண்டு படைப்புக்களை வழங்கிய முழு சர்ரியலஸ்டு யாரும் இல்லை என்றாலும் பலரின் படைப்புகளில் கனவோடை உத்தி இடம் பெற்றிருப்பதைக் காண முடிகிறது.

தமிழ்ச் சிறுகதை மன்னராகிய புதுமைப்பித்தன் கனவோடை உத்திமுறையைக் கொண்டு சில கதைகளை வழங்கியுள்ளார். சித்தி, காஞ்சனை, கபாடபுரம் ஆகியவற்றில் கனவோடை உத்திகளைக் காணலாம். இது ஜேம்ஸ் ஜாய்ஸ் வழியில் பெற்ற தாக்கத்தின் விளைவாகவும் இருக்கலாம். புதுமைப்பித்தன் பல கதைகளை வேகமாக எழுதிய

தாகக் கூறப்படுகிறது. இந்தப் படைப்பாக்கச் செயலால் எண்ணவோட்டம் தன்னியலாக வெளிப்பட வழி ஏற்படுகிறது. அதாவது கனவோடைப் படைப்பாக்கமாக இவை விளங்குகின்றன. 'என் கதையை முதலில் படிக்கும் வாசகன் நான்தான். அவசரமாக எழுதியதனால் எனக்கே அதில் பல விஷயங்கள் புதுமையாக இருக்கும்' என்ற புதுமைப்பித்தன் கூற்றிலிருந்து அவர் கனவோடை உத்தியைக் கையாள்பவர் என்பது புலப்படும். புதுமைப்பித்தனின் கனவோடைப் படைப்பாக்கத்திற்குக் 'கபாடபுரம்' தக்க சான்று. கபாடபுரம் கதையைத் தன்னுடைய அனுபவ மொழியாகவே விவரித்துள்ளார். அதாவது இந்தக் கதையில் கதாநாயகன் புதுமைப்பித்தனே ஆவார். கதைச் சுருக்கம் வருமாறு:

'கபாடபுரம்' கதைப்படி கடற்கரையில் உள்ள ஒரு கோவிலுக்கு ஒருவன் சென்றிருந்தான். சாயுங்காலத்தில் அவன் உள்ளே இருப்பதை அறியாமல் பூசாரி கோவிலை சாத்தி சென்றுவிட்டார். அன்று இரவு முழுவதும் அவன் தனிமையாகப் பொழுதைக் கழிக்க வேண்டியதாகிவிட்டது. கோயிலின் திட்டி வாசல் வழியாகக் கடலைப் பார்க்கின்றான். பொழுது போகவில்லை. கோயில் உள்ளே இருக்கின்ற கன்னிச்சிலையைப் பார்க்கின்றான். வைர மூக்குத்தி சுடர்விட்டுக்கொண்டிருந்தது. ஒரு விழாவின் போது அலங்காரம் செய்து வைத்திருந்த கன்னிச்சிலையிடம் மனத்தைப் பறிகொடுத்து இருந்ததை நினைத்துப் பார்க்கின்றான். கொஞ்சம் நேரத்திற்குப் பிறகு உறங்கச் சென்றான். தொடக்கத்தில் யாரோ அழுக்குவது போல் இருக்கிறது. கண்களைத் திறக்க நினைத்தாலும் முடியவில்லை. மூச்சுத்திணறி அயர்ந்து போனான். மந்திர வலையிலிருந்து விடுபட்டவை போல் கண்கள் திறந்தன. எழுந்து திட்டி வாசல் வழியே வந்து பார்த்தான். கண்ணுக்கெட்டிய வரையில் கடல் காணவில்லை. கடல் படுகையில் கற்குன்றுகள் பல இருப்பதைப் பார்த்தான். ஒரு குன்றின்மீது கோவிலும் கோபுரமும் தென்பட்டன. அதைப் பார்க்க வேண்டுமென்று படிக்கட்டுகள் வழியே இறங்கினான். கடல் படுகையில் நடந்தபடி கோயில் இருக்கின்ற குன்றுக்கு வந்தான். இருட்டுப் பாதையில் செல்லப் பயமாக இருந்தது. ஆனால் அவன் மனத்தில் உள்ள வேகம்தான் இப்படி இழுத்துச் சென்றது.

ஒருவழியாகக் குன்றின்மீது ஏறி கோயிலுக்குள் சென்றான். ஒரே இருட்டாக இருந்ததால் உள்ளே செல்லப்

பயந்தான். பிறகு தயக்கத்துடன் உள்ளே நுழைந்ததும் கதவு தானாக சாத்திக் கொண்டது. அதனால் அவன் பீதி அடைந்தான். அப்போது கர்ப்பகிரகத்திற்குள் இருந்து ஓர் ஒளி தோன்றியது. ஒளியை நோக்கிச் சென்றான். குத்துவிளக்கு ஒன்றில் பதியவைத்துள்ள வைரம் ஒளி வீசிக் கொண்டிருந்தது. அதைத் தொடச் சென்றான். 'தொடாதே' என்று ஒரு குரல் அதட்டியது. குரல் வந்த திசைநோக்கிப் பார்த்தான். பலிபீடத்தில் ஒரு பெண் தலை இருப்பதைக் கண்டான். வியப்படைந்தான். காரணம் கடற்கரைக்கோயில் சிலையாக உள்ள கன்னியின் முகம் போல பலிபீடத்து கன்னி முகம் இருந்தது. பெண்ணின் கூந்தல் மயில் தோகை போல் விரிந்து கிடந்தது. 'நீ யார்?' என்று பெண்ணிடம் கேட்டான். அவள் 'தான் மூன்று கர்ப்ப காலங்களுக்கு முன்பிருந்து வாழ்ந்து வருபவள்' என்று கூறினாள். 'உடலிழந்து வாழ்வு எப்படி சாத்திய மாகும்?' என்று வினவினான். அது இரண்ய கர்ப்பத்தின் ரகசியம் என்றும் அதைத் தெரிந்துகொள்ளவேண்டுமென் றால் சித்தலோகம் செல்லவேண்டும் என்றும் கன்னித் தலை கூறியது. கூடவே சித்தலோகம் செல்கின்ற வழியையும் காட்டியது. அவ்வழியே நடந்து படிக்கட்டுகள் பல வற்றைக் கடந்து அவன் சென்றான். ஓரிடத்தில் உருவ மில்லாத ஆண் குரல் கேட்டது. பிறகு அக்குரல் அவனை இட்டுச் சென்றது. வழிநெடுக இருட்டாக இருப்பதால் பயத்துடன் சென்றான். கடைசியில் ஒரு நதியிடம் வந்து சேர்ந்தான். நதியில் நான்கு முண்டங்களால் ஆன மிதவை வந்தது. 'அதில் அமர்ந்து நதியைக் கடந்தால் சித்த லோகம் வரும்' என்று கூறிவிட்டு ஆண் குரல் மறைந்தது. தயக்கத்துடன் பிணத்தின்மீது அமர்ந்து கொண்டான். பிணமிதவை பயணமானது. வழிநெடுகப் பாம்புகள் சீற்றத் தால் அவன் பயந்து ஒடுங்கிப் போயிருந்தான். சிறிது நேரத்தில் கரை வந்துவிட்டது. இவன் கரையேறினான். உடனே முண்டங்களும் கரையேறின. கரையேறியதும் அவை தலைகள் பெற்றன. அவை மாட்டுத்தலைகளாக இருந்ததைக் கண்டு அதிசயப்பட்டான். தம்மை 'மாடர் கள்' என்று அவனுக்கு அறிமுகம் செய்துகொண்டன.

மாடர்கள் அவனைச் சித்தலோகத்திற்கு அழைத்துச் சென்றனர். பூமியின் தொடக்ககாலச் செடிகொடிகளைக் கண்டான். பாம்புகள் அவைகளினூடே சோம்பிக் கிடப் பதையும் கண்டான். மாடர்கள் குறிப்பிட்ட இடம்வரை வந்து மறைந்துவிட்டனர். அங்கே பதினெட்டுப் பேர்

ஒரே அச்சில் இருப்பதைப் பார்த்தான். அவர்கள் அனைவரும் அந்தரத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தனர். அவர்களுக்குத் தலைவனான சித்தபுருஷர் இவனை வரவேற்றார். இவனின் பசிக்காக நரமாம்சப் பட்சிணி மரத்தின் பாலைக் கொடுத்தார். 'கடல்கொண்ட கோவிலில் உள்ள கன்னி யார்?' என்று வினவினான். 'அந்தக் காலத்தில் உனக்கு வாழ்க்கைப்பட வேண்டியவள், பூசாரி சடையனின் மகள், இன்று காவல் தெய்வம்' என்றார் சித்த புருஷர். அதை அறியக் கால யாத்திரை செய்ய அழைத்தார். அவர்கள் முன்னே உள்ள ரசக் குளிகையின் சுழற்சியைப் பார்த்துக்கொண்டே இருக்கும்படி சித்த புருஷர் கூறினார். எரிமலைகள், குமரியாறு, பஃறுளியாறு ஆகியவை பற்றி விவரித்து வந்தார் சித்தபுருஷர். தென் மதுரை கடல் கொண்ட விதம், அதனைத் தொடர்ந்து கபாடபரம் கடல் கொண்டவிதம் போன்றவற்றை விவரித்துக்கொண்டிருந்தார். எரிமலையின் சீற்றத்தால் இரண்டும் கடல் கொண்டன என்பதை விவரித்துக் கொண்டிருக்கும்போது ரசக்குளிகையில் பிரகாசம் தெரிந்தது. அதை அவன் உற்று கவனித்தான். கொஞ்சம் கொஞ்சமாக அவன் மனம் கிறங்கியது. ரசக்குளிகையில் கபாடபுரத்துக் காட்சி ஓடிக்கொண்டிருந்தது.

மாலை நேரம். மரம் செறிந்த காடு. அதில் உயர்ந்த மரங்களும் நிறைந்திருந்தன. அதன் மேலே ஐந்நூறு அடி உயரமுள்ள கர்ப்பேந்திரம் ஒன்று தனது கொக்குத் தலையைத் தூக்கி நின்றபடி, தனது கைகளில் ஒரு யானையைப் பற்றிக் கிழித்துத் தின்று கொண்டிருந்தது. கோட்டையின் வாசலில் நின்றபடி அவன் பார்த்துக் கொண்டிருந்தான். மேற்கே எரிமலை ஒன்று புகைந்து கொண்டிருந்தது. அவ்வழியாக பேரியும் வாங்காவும் மணி சப்தமும் கேட்க ஆரம்பித்தது. தெற்கே உள்ள கோட்டைக் கதவுகள் திறந்தன. ஊர்வலத்தின் முன்னால் வைர வாளுடன் பூசாரி சென்று கொண்டிருந்தான். அவனுக்குப் பின் அவள் வந்தாள். அவளைப் பலியிடப் போகின்றார்கள். ஊர்வலத்தில் பாண்டியன் வந்தான். பாண்டியனுக்குப் பின்னே அவன். அதாவது அவனைப் போன்ற ஒருவன் வந்தான். கையில் வேல் இருந்தது. கர்ப்பேந்திரத்தைக் கண்டான். குறி தவறிக் கர்ப்பேந்திரத்தின் ஒற்றைக் கண்ணைக் குருடாக்கியது. மிரண்டுபோன மிருகம் பூசாரியைப் பற்றியது. பூசாரி தனது வாளால் மிருகத்தின் குரல் வளையைக் குத்தினான். பூசாரியின் தலை அறுபட்டது.

வலி பொறுக்காமல் மிருகம் ஓடியது. எரிமலையின் வாயிலில் விழுந்தது. கன்னியை அழைத்துக்கொண்டு கடற் கரைக்கு ஓடினான் அவன். எரிமலை நெருப்பு கக்கியது. கடல் கொந்தளித்தது. கபாடபுரம் அழிந்தது. பிறகு பழையபடி அலை சப்தம் கேட்கத் தொடங்கியது.

'லெமூரியா' கண்டம் இருந்ததாகவும் அது முதல், இரண் டாம் சங்க காலங்களில் கடல் கொண்டு அழிந்துவிட்டதாகவும் தமிழில் உள்ள தொன்மத்தின் அடிப்படையில் கபாடபுரம் எவ்வாறு அழிந்திருக்கும் என்பதைப் புதுமைப்பித்தன் கற்பனை செய்து அதைத் தனது கனவு போலவே படைத்துள்ளார். இக் கதை 'கனவுப்பனுவல்' போன்று விளங்குகிறது. புதுமைப் பித்தன் என்ற கனவாளன் தனது கனவைக் கதைத் தலைவன் வழியில் மொழியாக்கம் செய்திருக்கிறார். இதை வெள்ளிடைக் கனவு எனலாம். ஃப்ராய்ட் கூறும் கனவுக் கூறுகள் அனைத்தை யும் இக்கதையில் காண முடிகிறது. பொதுவாகக் கனவுச் செயலுக்கு மூலாதாரமாகத் 'தூண்டல் நிகழ்வு' இருப்பதாக ஃப்ராய்ட் கூறுவார். குறிப்பிட்ட நிகழ்வுகளால் தூண்டப் பட்ட நனவிலி எண்ணங்களே இரவில் கனவாக உருவாகின்றன. இந்தத் தூண்டல் நிகழ்வு கனவின் பொருண்மைகளோடு தொடர்புடையதாக இருக்கும் என்றும் ஃப்ராய்ட் கூறுகிறார். இத்தகைய உளப்பாங்கைக் கபாடபுரம் கதையில் காணலாம். கடற்கரைக் கோயிலில் தூங்குவதற்கு முன்பு அவன் கோயிலின் திட்டி வாசல் வழியாகக் கடலைப் பார்த்தான். அப்போது குன்றுகள் பல தெரிந்தன. அவைகளில் ஒன்றின் மீது கோயிலும் கோபுரமும் இருப்பதைப் பார்த்தான். 'குமரிக்கோடு பெருங் கடல் கொள்ள என எவனோ ஒருவன் ஏங்கியது' அவனுக்கு நினைவு வந்தது. 'நான் கண்ட கோயில், அழிந்து போன, கடல் உண்டு பசியாறின சமுதாயத்தின் கோவிலா?' என்று எண்ணினான். இதுதான் அவனின் தூண்டல் நிகழ்வாகும். இந்த நிகழ்வால் தூண்டப்பட்டு அவன் உள்ளத்திலிருந்து கனவுப் படிமங்கள் தொடரியலாக வடிவெடுத்தன. கடல் கோயிலில் உறங்கும்போது அச்சூழல் தொடர்பான படிமங்கள் அதிகமாக வெளிப்பட்டன. 'கடல் கோயில்-கடலலை ஓசை-கடல் கொண்ட கபாடபுரம்' ஆகிய இணைவுகள் (associations) இக்கதையில் (கனவில்) இருப்பதைக் காணமுடிகிறது. இத்தகைய இணைவுகள் மூலமாக அவன் விழிப்பு நிலையி லிருந்து தூக்க நிலைக்குக் கொஞ்சம் கொஞ்சமாக இறங்கி னான். அதாவது நனவுப் புலனுணர்விலிருந்து (Conscious Perception) நனவிலிப்புலனுணர்வுக்கு (Unconscious Perception)

மனம் மாறத் தொடங்கியது. இத்தகைய புலனுணர்வு மாற்றத்தின் காரணமாகப் பழைய நனவிலி எண்ணங்கள் கனவாக்கம் பெற்று வெளிப்பட்டுள்ளன.

படைப்பாக்க உத்திகளில் நனவோடைக்கும் கனவோடைக்கும் இத்தகு உளச் செயல் அடிப்படையாக உள்ளது. மேல் மட்ட மனத்திலிருந்து படிப்படியாக உள்முகமாகச் செல்கின்ற உளச்செயலைப் பின்னோக்கம் என்பார் ஃப்ராய்ட். நனவோடையில் பின்னோக்கம் நனவடங்கு மனம் வரை செல்லும். ஆனால் கனவோடையில் நனவிலி வரை செல்லும். கபாடபுரம் கதையில் நனவிலிவரை பின்னோக்கம் நிகழ்ந்திருக்கிறது. அதேபோல் கபாடபுரம் ஒரு கனவாக மட்டுமில்லாமல் கனவின் கனவாகவும் விளங்குகிறது. அதாவது 'கனவுக்குள் கனவு' என்கிற கனவுச் செயலும் பொதிந்து கிடக்கிறது. கனவு காண்பதுபோல கனவு வந்தால் அதற்கான கனவுத் தொழில் முன்கூட்டியே நடந்துவிட்டதாக ஃப்ராய்ட் கூறுவார். அதாவது கனவுத் தொழில்களாக உறைவு (condensation), இடப்பெயர்வு, குறியீட்டாக்கம் ஆகியவை விழிப்பு நிலையிலேயே நிகழ்ந்து விடுகின்றன. கனவின் கனவு என்று சொல்லப்படுகின்ற 'உள்கனவு' என்பது கனவுச் செயலின் ஒரு உத்தி. இது கபாடபுரத்தில் இடம் பெற்றிருக்கின்றது. சித்தபுருஷரிடம் கதைத் தலைவன் உரையாடிக் கொண்டிருக்கின்றபோது ரசக்குளிகை வழியில் தன்னுடைய முந்திய வாழ்க்கையைப் பார்க்கின்ற கட்டம் உள்கனவுப் பனுவல் போன்றதாகும். காலத்தில் யாத்திரை செய்து பழைய வாழ்க்கையைப் பார்ப்பது ஒரு விதத்தில் 'பின்னோக்கம்' ஆகும். இந்தப் பின்னோக்கம் கனவின் பண்பாகும். அனைத்துக் கனவுச் செயல்களும், பின்னோக்கத்தின் வழியில்தான் நனவிலி மற்றும் நனவடங்குக் கூறுகளைக் கனவுப்படிமங்களாக வெளிப்படுத்துகின்றன. எனவே பின்னோக்கத்தின் கோணத்தில் பார்க்கும்போது கபாடபுரம் கதையானது 'மையக்கனவு' (Main dream) போலவும் ரசக்குளிகையில் தெரிகின்ற கபாடபுரக் காட்சிகள் 'உள் கனவு' (Inner dream) போலவும் இருப்பதை உணரலாம். இந்த உள் கனவு உருவாவதற்கான கனவுத்தொழில் அக்கனவுக்கு முந்தியே நிகழ்ந்துவிடுகிறது. எனவே மையக் கனவின் பொருண்மையும் உள்கனவின் பொருண்மையும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்த வண்ணம் இக்கதையில் பொதிந்து கிடக்கின்றன. இதனால் ஒன்றின் கனவுப் பொருண்மையை மற்றொன்றின் வழியில்தான் உணர்ந்து கொள்ள முடியும். அதில் உள்கனவு உணர்த்த வருகின்ற பொருண்மையே ஆணிவேராகும். அதாவது உள்கனவில்தான் நனவிலிக்

கூறு பொதிந்து கிடக்கிறது. மற்ற இடங்களில் நனவடங்குக் கூறுகளாக மாறுவேடங்களில் பரவிக் கிடக்கின்றன. நனவடங்குக் கூறுகளை ஆராயாமல் நனவிலிப் பொருண்மையை உணர்ந்து கொள்ள முடியாது. அதனால், உள் கனவின் பொருண்மையை அறிய வேண்டுமென்றால் மொத்தக் கனவுப் பனுவலைக் கொண்டுதான் அறிந்து கொள்ள முடியும்.

கபாடபுரம் என்ற கனவில் அச்ச உணர்வு அடிக்கருத்தாக உள்ளது. தனிமை அச்சம், இருட்டு அச்சம், தண்ணீர் அச்சம், சாவு அச்சம், விலங்கு அச்சம், காய அச்சம், பிண அச்சம் என்று அச்ச உணர்வே வியாபித்து இருக்கிறது. ஒரு கனவு முழுவதும் அச்ச உணர்வு பரவிக் கிடந்தால் அதைப் பதற்றக் கனவு (anxiety dream) என்று கூறுவார் ஃப்ராய்ட். இதனடிப் படையில் கபாடபுரம் என்பது ஒரு பதற்றக் கனவு போன்ற தாகும். எனவே இக்கதையைப் பதற்றக்கனவை அணுகுவது போல் அணுக வேண்டியுள்ளது. அதற்கு முன்னர் கதையின் முக்கிய அம்சங்கள் சிலவற்றைக் காணவேண்டும்.

கபாடபுரம் ஒரு 'பின்னை நவீனத்துவப் புனைவு' போன்று விளங்குவதைக் காணலாம். இதில் மெய்ம்மைக்குப் புறம்பான கற்பனைகள் நிரம்பியிருக்கின்றன.

கதையின் ஒவ்வொரு வரியிலும் ஃப்ராய்டியப் பொருண்மை கள் இருக்கின்றன — சொல்லப்போனால் கதையின் பெயரிலே கூட இருக்கின்றது. கபாடபுரம் கடலால் அழிந்துபோன நகரைக் குறிக்கும். உள்ளம் என்ற கடலின் அடியில் மறைந்து கிடக்கின்ற நனவிலி கபாடபுரத்துடன் ஒத்திருக்கின்றது. எனவே கபாடபுரத்தில் நனவிலிப் பொருண்மை நிறைந்திருக் கும் என்பதில் ஐயமில்லை. அடுத்தது கபாடபுரத்துக் கதை யின் இழை முக்கியமானதாகும். கடல் கன்னியைப் பார்த்த பிறகு 'யார் அந்தப் பெண்?' என்கிற தேடல்தான் கதையின் ஊடே செல்கின்ற இழையாகும். இத்தேடல் புறத்தேடல் போன்ற அகத்தேடல் ஆகும். கபாடபுரம் என்பது ஒரு கனவாக இருப்பதால் கனவில் வருகின்ற தேடல்கள் அகத் தேடலாகத்தான் இருக்கும் என்பதில் ஐயமில்லை. படைப்பாளி யின் உள் மனத்திற்குள் பொதிந்து கிடக்கின்ற படிமமாகச் கன்னியின் தலை விளங்குகிறது. ஏனென்றால் பின்னோக்கத்திற் குக் கன்னித்தலை முக்கியக் காரணியாகத் திகழ்கிறது. இன்னும் சொல்லப் போனால் கதை ஓட்டமே கன்னித்தலையை மையமாகக் கொண்டுதான் நிகழ்கிறது. 'பலிபீடத்தில் உள்ள கன்னி யார் என்பதை அறியவேண்டும் என்கிற வேகம்தான்' கதைத்தலைவனைக் கபாடபுரம் வரையில் இட்டுச் செல்கிறது. எனவே கன்னித்தலை என்கிற கனவுப் படிமம் நனவிலியின்

பொருண்மைகளை உள்ளடக்கிக்கொண்டு இருப்பதை உளப் பகுப்பாய்வு வழியில் அறிய முடிகிறது. அந்த நனவிலிப் பொருண்மைகள் என்ன என்பதைத் தெரிந்து கொள்வதற்கு முன் கபாடபுரத்திற்கும் கனவுக்கும் இடையே உள்ள நெருக்கங்களைக் கணக்கிட வேண்டியுள்ளது.

கனவு காண்பதற்கு முந்திய விழிப்பு நிலை அனுபவங்கள் முக்கியமானவையாகும். கதையின்படி கதைத் தலைவன் ஒரு கோயிலுக்குள் அடைபட்டு விடுகின்றான். கடலோசை, இருட்டு, தனிமை ஆகிய சூழல் அவனைப் பதற்றமுறச் செய்கிறது. இதனால் 'அமுக்கான்' **(Night mare)** என்கிற துயரை அனுபவிக்கிறான். இந்தச் சூழலில் பல தூண்டல் நிகழ்வுகள் நிகழ்ந்துள்ளன. குறிப்பாக, கோயில் பிரவாகத்தில் உள்ள கன்னிச் சிலையின் அழகில் அவன் மனம் லயித்துவிடுவதைக் கூறலாம். அதற்குக் காரணம் அவனது நனவு மனதிற்கு எட்டாத தொலைவில் உள்ள உருப்படிமமாகும். கதைப்படி கடலுக்குள் உள்ள பலிபீடத்தில் கண்ட பெண்தலையின் முகம் கடற்கரைக் கோயில் கன்னிச்சிலை போன்று இருப்பதைக் கண்டு அவன் வியந்துள்ளான். இது அவனின் நனவு மனதிற்கு அப்பால் உள்ள உருப்படிமத்தின் வெளிப்பாடு என்பதில் ஐயமில்லை. இந்தத் தலைதான் கபாடபுரத்தில் பூசாரி சடையனின் மகளாக வருகின்றது. கபாடபுரத்தில் வருகின்ற கன்னியே காவல் தெய்வமாகவும் கடற்கரைக் கோயில் சிலையாகவும் வந்துள்ளது. எனவே இக்கனவுப் பனுவலில் இடப் பெயர்வு நிகழ்ந்துள்ளதை அறியலாம். இதற்கு 'வைரம்' என்கிற படிமம் பக்கத்துணையாக வந்துள்ளது. கடற்கரைக்கோயில் கன்னிச் சிலை முகத்தில் வைரம் இருப்பது போல் கன்னித் தலை பக்கத்தில் உள்ள குத்துவிளக்கில் வைரம் வந்துள்ளது. அதேபோல் கபாடபுரத்தில் வருகின்ற கன்னியின் பக்கத்தில் வைரவாளுடன் பூசாரி வருவதாகக் காட்டப்பட்டுள்ளது. எண்ணங்களின் இணைவு நிகழ்ந்திருப்பதை இவற்றின் மூலம் அறிய முடிகிறது.

பின்னோக்கமும் இணைவுகளும் நெருங்கிய தொடர்பு கொண்டவையாகும். நனவு மனதிலிருந்து நனவடங்கு மனம் கடந்து நனவிலி சென்றடைய இணைவுகள் பெரும் பங்கு வகிக்கின்றன. நனவுப் புலனுணர்வில் தொடங்கிய எண்ணவோட்டங்கள் நனவிலியைச் சென்றவுடன் நனவிலி வரையிலான உள இயக்கங்கள் கனவுச் செயலுக்கு உட்படுகின்றன. நனவிலி எண்ணங்கள்தான் கனவின் மூலப் பொருட்கள் ஆகும். வெள்ளிடைக் கனவுகளின் உள்ளுறைக் கனவுகள் நனவிலிக்குள் பொதிந்து கிடக்கின்றன. இவை குழந்தைப் பருவத்து

அனுபவ எண்ணங்களின் தொகுப்புகளாக உள்ளன. இவையே கனவுகளுக்கு ஆதாரங்களாகின்றன. கபாடபுரம் கதையில் பதற்றச் சூழலில் கதைத் தலைவன் இருப்பதால் அவன் கண்ட கனவில் பதற்ற எண்ணங்கள் வெளிப்பட்டிருக்கின்றன. அதனால் இப்பதற்றங்களுக்கு நனவிலிப் பதற்ற அனுபவங்கள் மூலக்காரணியாக உள்ளன. 'அதிர்ச்சி' நிகழ்வுகளே (Traumatic events) பதற்றக் கனவுகளுக்கும் ஆதாரம். இவை நனவிலியில் பாதிப்புச் சூழ்நிலையில் அமைந்து விடுகின்றன. படைப்பாளியின் நனவிலியில் உள்ள 'பாதிப்பு' கபாடபுரத்தின் அழிவு என்கிற பாதிப்பினால் பாதிப்பிற்குள்ளாகி தாக்கம் ஏற்பட்டு கபாடபுரம் என்கிற 'பதற்றக் கனவு' வெளிப்பட்டுள்ளது.

பின்னோக்கம் என்கிற உளச் செயல் கதையில் இரண்டு வினைப் படிமங்களாக வெளிப்பட்டுள்ளன. முதலாவதாகக் கதைத்தலைவன் பல படிக்கட்டுகளைக் கடந்து செல்வதுபோல் வந்துள்ளது. இரண்டாவதாகப் பல இடங்களில் 'இப்படியாக எண்ணமிட்டுக் கொண்டே சென்றேன்' என்பது வந்துள்ளது. இவை இரண்டும் உள்ளத்தின் வழியே எண்ணங்களைக் கடந்து செல்வதைக் குறிப்பிடுகின்றன. அப்படிச் சென்று கடைசியில் கபாடபுரம் வந்தடைகின்றன. கபாடபுரத்தை வெளிப்படுத்துவது கடல் அகழ்வாய்வு எனலாம். அகழ்வாய்வுக்கும் நனவிலிப் பொருண்மைக்கும் ஒப்புமைகள் இருப்பதை Delusions and Dreams in Jensions 'Gradiva' (1907) எனும் கட்டுரையில் விவரிக்கிறார் ஃப்ராய்ட். 'கிராடிவா' என்ற நாவலின் கதைத் தலைவன் ஓர் அகழ்வாய்வாளன். ஒரு முறை அவன் அகழ்வாய்வு செய்த ஒரு பெண் வடிவச் சிற்சிலை மீது ஒட்டுதல் கொண்டான். அதன் பிறகு இப்பெண் வடிவத்தைப் போல பெண்ணைத் தேடி, அது போன்ற ஒரு பெண்ணைக் கண்டான். அவள் வேறு யாருமல்ல. குழந்தைப் பருவ விளையாட்டுத் தோழியாக இருந்தவள்தான். இந்தக் கதையின் சாயல் கபாடபுரத்தில் இருப்பதைக் காணமுடிகிறது. கிராடிவாவில் ஒரு பெண்ணைத் தேடி தலைவன் செல்வது போல் (இதை பீடிப்புத் தேடல் (Obsessive search) என்பர் ஃப்ராய்ட்) கபாடபுரத்தில் பலிபீடத்தின் மீதுள்ள கன்னி யார் என்று தேடிக் கதைத்தலைவன் செல்கிறான். எனவே இரண்டிலும் குழந்தைப் பருவ அனுபவத்தின் வெளிப்பாடுகள் இடம் பெற்றிருக்கின்றன. அகழ்வாய்வு, பின்னோக்கம், நனவிலி மனம், குழந்தைப்பருவ அனுபவங்கள் ஆகியவை ஒன்றை விட்டு மற்றொன்றைப் பிரிக்க முடியாதவையாகும்.

பின்னோக்கத்தின்போது குழந்தைப் பருவ அனுபவங்கள் வெளிப்படுவதைத் தவிர்க்க முடியாது. கபாடபுரத்தில்

குழந்தைப் பருவ அனுபவங்கள் பெருமளவில் வெளிப்பட்டுள்ளன. குறிப்பாகத் தர்க்கமற்ற (ill-logical) காட்சிகளும் தர்க்கத்திற்கு முரணான எண்ணங்களும் வெளிப்பட்டிருப்பதைக் கூறலாம். உடலற்ற தலை பேசுதல், உடம்பற்ற குரல் வருதல், தலையற்ற பிணங்கள் புணையாதல், கடல் வற்றிப் போதல், பிணந்தின்னி மரம் பால் சுரத்தல், பிணங்கள் உயிர்த்தெழுதல் ஆகிய கற்பனைகள் தர்க்கத்திற்கு முரணான வையாகும். மெய்ம்மைகளற்ற இக்கற்பனைகளுக்குக் குழந்தை மனநிலையே (infantile mentality) மூலாதாரமாகிறது. இந்தக் காட்சிகள் தர்க்க ரீதியிலானதா இல்லையா என்பது முக்கிய மல்ல. காட்சிப்படிமங்களின் (அல்லது கற்பனைகளின்) வெளிப் பாடுகளும் அப்படிமங்கள் உணர்த்துகின்ற பொருண்மைகளும் மட்டுமே உளப்பகுப்பாய்வில் முக்கியமானவையாகக் கருதப் படுகின்றன. நனவிலி மொழி ஒரு தர்க்கமற்ற மொழி (ill-logic language) என்று ஃப்ராய்டியம் உணர்த்துகிறது. அதனால் நனவிலியை 'முன்னைத் தர்க்க மனம்' (Pre-logic mind) என்று கூறலாம். முன்னைத் தர்க்க மனம் என்பது குழந்தை மன நிலையைக் கொண்டதாகும். கபாடபுரத்தில் முன்னைத் தர்க்க மனத்தின் வெளிப்பாடுகள் அதிகம் காணப்படுகின்றன.

இவை அனைத்தும் குழந்தைப் பருவத்தில் ஏற்பட்ட பாதிப்பிலிருந்து வெளிப்படுகின்ற கற்பனைகளாகும். வளர்ந்த பிறகு முன்னைத் தர்க்கக் கற்பனைகள் தோன்றினால் அது நோயைக் குறிக்கும். ஒருவன் தன்னுடைய எண்ணங்களைப் புறவுலக மெய்ம்மையிலிருந்து தன்னை விடுவித்து அகநிலைக் குத் திருப்பிக் கொள்வதால் ஏற்படுகின்ற உளமாறாட்டம் (Physical disorder) இத்தகு தர்க்கமற்ற கற்பனைகளை உரு வாக்குகின்றது. இதை ஒரு நரம்புநோய்க்குறியாக ஃப்ராய்ட் காண்கிறார். தர்க்கமற்ற கற்பனைகள் தொடர்ந்து உருவாகிக் கொண்டிருந்தால் அது மனநோய்க் குறியைக் (Psychotic symptom) காட்டும். மாறாக எப்போதாவது வெளிப்பட்டால் அது நரம்பு நோய்க்குறியைக் (Neurotic symptom) காட்டும். புதுமைப்பித்தன் படைப்புகளில் காஞ்சனை, சித்தி, ஞானக் குகை, கட்டிலை விட்டிறங்கா கதை, பிரம்ம ராட்சஸ் ஆகிய வற்றில் தர்க்கத்திற்குப் புறம்பான கற்பனைகள் வெளிப் பட்டுள்ளன. அவ்வரிசையில் கபாடபுரமும் அடங்கும். எனவே புதுமைப்பித்தனிடம் இருந்து உருவாகின்ற தர்க்கமற்ற கற்பனைகள் நரம்பு நோய்க் குறிகளையே குறிக்கும். பொது வாக முன்னைத் தர்க்க எண்ணங்கள் அனைவரின் நனவிலிக்குள் ளேயும் பொதிந்து கிடக்கின்றன. அவை வெளிப்படுவதற்கு ஏற்ற சூழல் கிடைக்கும்போது வெளிப்பட்டுவிடுகின்றன.

பெரும்பாலும் கனவுகளிலும் படைப்பாக்கங்களிலும் தோன்றங்களிலும் இவை வெளிப்படும். நனவிலிக்குள் இவை பொதிந்து கிடப்பதால் வலிமையுடையவையாகவும் திகழ்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. அதனால் முன்னைத் தர்க்க எண்ணங்களோடு தொடர்புடைய கற்பனைகள் மீது, நனவு மனம் அறியாத ஈர்ப்பு அனைவரிடத்திலும் ஏற்படுகின்றது. மாயாஜாலக் கதைகள், மாயாஜாலச் செயல்கள் போன்றவை மீது ஈர்ப்பு ஏற்படக் காரணம் இதுவே ஆகும். தர்க்கமற்ற எண்ணங்கள் அனைத்தையும் ஃப்ராய்ட் 'மாயை' (Uncanny) என்கிற வட்டத்திற்குள் அமைக்கிறார். The uncanny என்கிற கட்டுரையில் முருகியல் தன்மையைப்பற்றி (aesthetic) விவரிக்கும்போது மாயயக் கோட்பாட்டை அறிமுகப்படுத்துகிறார். ஃப்ராய்டைப் பொருத்தவரையில் முருகியல் என்பது 'அழகைப்' பொருத்ததல்ல. மாறாக 'உணர்தலைப்' பொருத்ததாகும். அதிலும் குறிப்பாகத் துன்பம் சார்ந்த உணர்த்தலாகிய அச்சம், திகில், பீதி ஆகிய பதற்ற உணர்வுகளைப் பொருத்ததாகும். நனவிலிக்குள் இருக்கின்ற இந்த உணர்வுகள் நனவு மனதிற்கும் தெரியாதபடி முருகியல் உணர்தலை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. கடந்த காலப் பீதிகள் அச்சங்கள் நடுக்கங்கள் ஆகியவை நனவிலிக்குள் இருந்துகொண்டு நடப்பு வாழ்வில் பதற்றச் சூழலோடு இணக்கம் கொள்கின்றபோது முருகியல் உணர்தல் நிகழ்கின்றது. இதனால் நடப்பு வாழ்வில் ஏற்படுகின்ற சில பதற்ற சூழல்கள் 'இதற்கு முன் என்றோ அனுபவித்த உணர்வை' ஏற்படுத்துகின்றன. அப்படிப்பட்ட உணர்த்தல் நனவிலி முருகியல் ஆகும். இத்தகைய நனவிலி உணர்த்தலை ஃப்ராய்ட் மாயை உணர்தலுடன் தொடர்புபடுத்திப் பேசுகிறார்.

மாயை உணர்தலுக்கு ஃப்ராய்ட் கூறுகின்ற முதன்மைப் பண்பு, 'பழக்கம் அல்லது நெருக்கம்' (Familiar) ஆகும். அதாவது பல காலமாக அனுபவித்துக் கொண்டிருக்கின்ற, அதே நேரத்தில் நனவு மனதிற்குத் தெரியாத உணர்தலையே மாயை உணர்தல் என்கிறார் அவர். இத்தகைய மாயை உணர்தலை நடப்பு வாழ்வில் மூடநம்பிக்கைகள் பிறழ் நம்பிக்கைகள் சடங்குகள் போன்றவற்றின் மூலம் நனவு மனம் பழக்கத்திற்கு உட்படுத்திக் கொள்கிறது. ஆனால் அவற்றுக்கான காரணிகளை நனவு மனம் அறியாது. எனவே மாயை உணர்தலானது ஒவ்வொரு அக நிலைக்குள்ளேயும் 'சுயரகசியங்களாக' விளங்குகின்றது. நனவிலிக்குள் கிடக்கின்ற இந்த ரகசியங்கள் தம்மை அப்படியே வெளிப்படுத்தாமல் குறியீட்டுத்தன்மையில் கனவுகள், கற்பனைகள், மூடநம்பிக்கைகள், சடங்குகள் எனப் பல

சூழல்களில் அடிக்கடி வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. கபாடபுரம் முழுவதும் தர்க்கமற்ற கற்பனைகள், அச்சங்கள், பீதிகள், வியப்புக்கள் போன்றவை நிறைந்திருப்பதால் இதை மாயைப்பனுவல் என்று கூறலாம். கபாடபுரத்தில் இடம் பெற்றுள்ள பெரும்பாலான நிகழ்வுகள் தர்க்கமற்ற முறையில் அமைந்திருப்பதாலும் பதற்றங்கள் நிறைந்திருப்பதாலும் இதை மாயையின் பனுவல் எனலாம். இக்கதையைப் படிப்பவனிடம் ஏற்படுகின்ற விளைவு மாயை விளைவு ஆகும்.

கபாடபுரத்தில் கன்னியின் தலை, கதையோட்டத்திற்கு மூலக் காரணியாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் கனவின் விநோதக் குறியாகவும் விளங்குகிறது. இதைக் கதைத் தலைவன் கன்னித் தலையைச் சந்திக்கின்ற நிகழ்வின் மூலம் அறியலாம். 'கன்னித்தலை பேசியதில் அதிசயம் தோன்றாதது எனக்கே வியப்பாக இருந்தது' என்கிற வரி ஆழமான பொருண்மைகளைக் கொண்டதாகும். கதை முழுவதும் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கும் கதைத் தலைவன் கன்னித் தலை பேசும்போது வியக்காமல் இருந்துள்ளான். அதுவே அவனுக்கு வியப்பாக உள்ளது. தன்னிலையை எண்ணி வியக்கின்ற 'தன்னை வியத்தல்' என்பது நார்சிச மனநிலையைக் குறிக்கும். அடுத்தது, அவன் தன்னை வியப்பதற்குக் காரணம் கன்னியின் தலையாகும். துண்டிக்கப்பட்ட கன்னியின் தலை உயிருடன் இருந்து கொண்டு பேசுவதைப் பார்த்து வியக்க வேண்டிய இவன் வியக்காமல் இருப்பதற்கு இரண்டு காரணிகள் உள்ளன. ஒன்று, அக்கன்னியின் முகம் கடற்கரை கோயில் கன்னிச் சிலையின் முகத்தைப் போல் இருப்பதாகும். தொடக்கத்திலேயே அக்கன்னிச்சிலையிடம் லயித்துவிட்டதால் கன்னித் தலை அவனுக்கு இன்ப அதிர்ச்சியாக அமைந்துவிட்டது. மற்றொன்று, கன்னித்தலை என்ற படிமம் அவனின் நனவு மனம் அறியாத நிலையில் நீண்ட நாள் பழக்கத்திற்கு உள்ளார்ந்த உணர்வோடு தொடர்புடையதாக இருப்பதைக் குறிக்கிறது. கன்னியின் முகம், துண்டிக்கப்பட்ட தலை ஆகிய இரண்டும் கலந்து கலவைப் படிமமாக அமைந்திருக்கிறது. இதுதான் இக்கனவில் நிகழ்ந்துள்ள முக்கியமான உறைவுச் செயல் ஆகும்.

கன்னித்தலை என்பது கதைத்தலைவனின் அல்லது படைப்பாளியின் நனவிலிப் படிமமாகும். நனவுமனம் அறியாத நிலையில் பலகாலமாகப் பழக்கத்திற்கு உள்ளார்ந்த படிமமாக இக்கன்னித்தலை விளங்குவதால் இது படைப்பாளியின் சுயரகசியமாக விளங்குகிறது. எனவே கன்னித்தலை ஒரு மாயைப் படிமம் ஆகும். 'உயர்ந்த அளவிலான மாயைத்தன்மை' என்பது ஒரு பிணம் உயிர்பெறுதலில் உள்ளது. இத்தகு

மாயைத்தன்மை துண்டிக்கப்பட்ட கன்னித்தலை பேசுவதில் அடங்கியுள்ளது. அது மட்டுமல்லாமல் படைப்பாளியின் மாயை எண்ணங்களால் உருவாக்கப்பட்ட இப்படிமம் நனவிலிப் பொருண்மைகளைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது. எனவே கன்னித்தலை பற்றிய உளப்பகுப்பாய்வு விளக்கத்தைக் கண்டுவிட்டால் கதையின் அல்லது கனவுப்பனுவலின் பொருண்மையை அறிந்துகொள்ளலாம். பலிபீடத்தில் கன்னித்தலை அமைந்திருப்பதைப் பார்த்த கதைத் தலைவன் மயில் தோகை போல கூந்தல் விரிந்து கிடந்தது' என்று எண்ணுகின்றான். இந்தப் படிமம்தான் கன்னித்தலையை விநோதக் குறியாக ஆக்கிவிடுகிறது. மயில் தோகைக்கும் கூந்தலுக்கும் இடையே உள்ள ஒப்புமை இங்கு நோக்கத்தக்கது. மயில்தோகை என்பது ஆண் மயிலுக்கே உரியது. சேவல் கொண்டை, மான் கொம்பு, சிங்கப் பிடறி, யானைத் தந்தம் போன்றவை பாலின வேறுபாடுகளை அறிந்து கொள்கின்ற பாலின அடையாளங்கள் ஆகின்றன. பாலுறுப்பு அடையாளங்களாக விளங்கும் இவை அனைத்தும் படைப்பாக்கக் கற்பனையில் ஆண்குறிக் குறியீடுகளைக் (Phallic symbol) குறித்து நிற்கும். எனவே 'கன்னித்தலையின் கூந்தல் மயில் தோகை மாதிரி இருக்கிறது' என்கிற உவமையில் கூந்தல் என்பது ஆண்குறிக் குறியீடாகிறது. பொதுவாகக் கூந்தல் என்பது பெண்குறிக் குறியீடாக விளங்கினாலும் சிலரிடம் ஆண் குறிக் குறியீடாக வருவதும் உண்டு. இது ஆண் குறி ஏக்கத்தின் (Penis envy) வெளிப்பாடு எனலாம். கன்னித்தலையில் உள்ள கூந்தல் ஆண்குறிக் குறியீடு என்பதை மயில்தோகை என்கிற உவம உருபைக் கொண்டு அறிந்து கொள்ளலாம்.

பெண் படிமமும் ஆண்குறிப் படிமமும் இணைந்து கிடக்கின்ற கலவைப்படிமம் நனவிலிக்குள் ஒன்று இருக்கிறது என உளப்பகுப்பாய்வு கூறுகிறது. அதுதான் 'தாய்ப் படிமம்' ஆகும். குழந்தைப் பாலியல் வளர்ச்சியின் மூன்றாவது கட்டமாகிய ஆண்குறிப்பருவத்தில் (Phallic phase) அனைவருக்கும் ஆண்குறி இருக்கிறது என்று குழந்தை எண்ணுகிறது. அதன்படி தாய்க்கும் இருக்கிறது என்று போலி நம்பிக்கை கொள்கிறது. ஒரு கட்டத்தில் தாய்க்கு இல்லை என்பதை உணர்ந்து பதற்றம் கொள்கிறது. அதன் பிறகு போலி நம்பிக்கை நனவிலிக்குள் புதைந்து விடுகிறது. இதுதான் 'ஆண்குறித் தாய்' (Phallic mother) என்கிற படிமமாக உருவெடுக்கிறது என்று ஃப்ராய்டும் அவரைத் தொடர்ந்து லக்கானும் விவரிக்கின்றனர். ஆண்குறிப்படிமம் கொண்ட பெண் உருக்கள் அனைத்தும் ஆண்குறித் தாய் என்கிற நனவிலிக்

கூறு உருவாக்கிய உருக்களாகும். கிரேக்கப் புராணத்தில் பாம்பு களைத் தலைமயிர்களாகக் கொண்ட 'மெடூசா தலை' (Medussa head), இந்தியப் புராணங்களில் வேல், சூலாயுதம் போன்றவை கொண்ட பெண் தெய்வ உருக்கள் ஆகியவை அனைத்தும் ஆண்குறித்தாயின் பிம்பங்களாகும். கபாடபுரம் கதையில் கன்னித் தலை காவல் தெய்வமாகச் சித்தரிக்கப்பட்டிருப்பது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. பொதுவாக ஆண்குறித்தாய் என்கிற படிமம் தகாப்புணர்ச்சி நடுக்கத்தோடு (horror of incest) தொடர்புடையது என்று ஃப்ராய்டும் லக்கானும் விவரிக் கின்றனர். கபாடபுரம் கதையில் பரவிக்கிடக்கின்ற அச்சங் கள் அனைத்தும் தகாப்புணர்ச்சி அச்சத்தோடு தொடர் புடையவை என்று இதன் மூலம் அறியலாம்.

அனைவரிடத்திலும் மாயை எண்ணங்களில் தகாப்புணர்ச்சி அச்சங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. காரணம் தகாப் புணர்ச்சி வேட்கைகள் ஈகோவின் வளர்ச்சியோடு சேர்ந்து மறைமுகமாக வளர்ச்சி பெறுகின்றன. அதே சமயம் நனவு மனம் அறியாத நிலையில் புறநிலை உறவின்போது (object relation) பங்கு கொள்கின்றன. தகாப்புணர்ச்சி வேட்கைகள் முன்னோக்கி வளரும்போது அவை தொடர்புடைய அச்சங் களும் இணைந்து வரும். இதன் காரணமாக நனவுமனதில் 'இனம் புரியாத அச்சங்கள்' வெளிப்படும். புதுமைப்பித்தனி டம் இத்தகைய அச்ச உணர்வுகள் வெளிப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. 'காஞ்சனை' என்கிற கதை பற்றி ஒருவர் புதுமைப்பித்தனிடம் விவாதிக்கும்போது 'பேய் நம்பிக்கை இருக்கிறதா?' என்று கேட்க, அதற்குப் புதுமைப்பித்தன் 'பேய் நம்பிக்கை இல்லை ஆனால் பயம் உள்ளதே' என்று பதிலளித் துள்ளார். இத்தகைய அச்சம்தான் மாயை உணர்தல் ஆகும். ஆவி, தேவதை, பேய், கோரவுரு ஆகியவை மாயை உணர் தலின் 'புறத்தறிவுகள்'. அதாவது அகநிலையின் பதற்றத்தைப் புறநிலையாக்கம் செய்வதன் விளைவு ஆகும். எனவே புற நிலையைக் கொண்டுதான் அகநிலையின் மாயைத்தன்மையை உணர்ந்து கொள்ளமுடியும். அந்த அளவிற்கு இருண்மைத் தன்மை வாய்ந்ததாக மாயை உணர்தல் விளங்குகின்றது. மாயை உணர்தலில் அதிகமாக ஆழ்ந்துபோன மனதில் மாயை எண்ணங்கள் எளிதாக வெளிப்படும். புதுமைப்பித்தனிடம் இது சிறப்பாக அமைந்துள்ளது. 'வார்த்தைகளை வைத்துக் கொண்டு ஜனங்களைப் பயங்காட்டுவது ரொம்ப லேசு' என்று ஓரிடத்தில் புதுமைப்பித்தன் கூறுகிறார். இது வாசகனிடத்தில் மாயை விளைவை ஏற்படுத்துகின்ற செயலாகும். இப்படிப் பட்ட விளைவு கபாடபுரம் வழியிலும் நிகழ்ந்துள்ளது.

கபாடபுரம ஒரு மாயைப் பனுவல் என்பதை அதில் வரும் கற்பனைகள், பதற்றங்கள், மாயாஜாலங்கள் ஆகியவை கொண்டு விளங்கிக் கொள்ளலாம். இருட்டு, தனிமை, அமைதி ஆகியவை மாயை விளைவுகளின் மூலங்கள். ஃப்ராய்டிய முருகியல் கொள்கைப்படி மாயை விளைவுகள் நனவு நிலைக்கு எட்டாத ஆழ்மன உலகத்தோடு தொடர்புடையவையாகும். கபாடபுரம் என்ற கதையும் அவ்வாறே தொடர்புற்றிருக்கிறது.

> ...தற்செயலாக நடந்த காரியமா...அல்லது அதற்கும் அப்பால் அதற்கும் அப்பால் என வெங்காயத் தோல் உரிந்துகொண்டே போவது போல மனித அறிவு என்கிற ஸ்பரிசம் படப்பட மற்றொரு திரையிட்டு விட்டு, அதற்கும் அப்பால் அகன்று சென்று கொண்டே இருக்கும், அந்த விவகாரத்தைச் சேர்ந்த ஒரு நிகழ்ச்சியா என என்னால் நிர்ணயிக்க முடியவில்லை

என்று கதைத்தலைவன் வழியில புதுமைப்பித்தன் பேசுவது மாயைத்தன்மையுடைய சுய ர்கசியத்தோடு தொடர்புடைய கதை என்பது புலப்படும். அதனால்தான் பதற்றங்கள் நிறைந்த கற்பனைப் புனைவாகக் கபாடபுரம் விளங்குகிறது.

பதற்றங்கள் நிறைந்த கனவும் கற்பனைப்புனைவும் பதற்ற நரம்பு நோய்க்குறியைக் (anxiety neurosis) குறிக்கும் என்கிறது ஃப்ராய்டியம். பதற்ற நரம்பு நோய் என்பது உள நரம்பு நோய்களில் ஒன்றாகும். உளப்பகுப்பாய்வு, பதற்றத்தைப் பாலியல் வேட்கைகளின் மடைமாற்றமாகக் காண்கிறது. பாலியல் கிளர்ச்சிகள் அமுக்கத்திலிருந்து விடுபட்டு வெளிப்பட வேண்டி தன்னுடைய இயல்புத் தன்மையான இன்ப உணர்வைத் துன்ப உணர்வாக மாற்றம் செய்துகொண்டு பதற்றம் மூலமாக வெளிப்படுகின்றன. இது எதிர்வழிப் பிரதிநிதித்துவம் எனும் உளச்செயல் அடிப்படையில் நிகழ்வதாகும். இதன் அடிப்படையில் நனவிலி வேட்கைகளில் பல பதற்ற உணர்வுகளாக வெளிப்படுகின்றன. பதற்றக் கனவுகள், பதற்றப் புனைகதைகள் ஆகியவற்றில் இத்தகு உளச்செயல் நிகழ்கின்றது. நனவிலியின் சில வேட்கைகள் பதற்ற வெளிப்பாடுகளாக வெளிப்படுவதற்குப் பதற்றநிலையே (anxiety state) காரணமாகும். அகநிலை பதற்றநிலையாக அமைவதற்குக் குழந்தைப்பருவ அனுபவங்கள் காரணமாகின்றன. குறிப்பாகப் பெற்றோர் மீது ஒட்டுதல் வைத்துக் கொள்வதில் தோல்வி ஏற்பட்டால் பதற்ற நிலை உருவாகிவிடுகிறது. இதன் காரணமாகப் பாலியல் வேட்கைகள் பதற்ற உணர்வுகளாக வெளிப்பட வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகின்றன. புதுமைப்

பித்தனிடத்தில் 'ஒட்டுதல் தோல்வி' நனவிலிக் கூறாக இருப்பதைக் கதையைப் பகுப்பாய்வு செய்வதன் வழியில் அறிய முடிகிறது. எனவே புதுமைப்பித்தனின் பதற்ற ஆளுமை கபாடபுரம் கதையில் வெளிப்பட்டிருப்பதைக் காணலாம்.

புதுமைப்பித்தனின் பதற்ற ஆளுமை 'ஆண்குறித்தாய்' என்கிற படிமத்தோடு தொடர்புடையதாகும். காரணம் கபாடபுரம் கதையின் விநோதப் படிமம் கன்னித்தலையாகும். கன்னித்தலை தொடர்புடைய அச்சம்தான் கதை முழுவதும் பரவிக்கிடக்கின்றது. அது என்ன அச்சம் என்பது கன்னித் தலையை அறிமுகப்படுத்துகின்ற நிகழ்வில் குறிப்பிடப்பட வில்லை. எனவே இதைக் கன்னித்தலையோடு தொடர்புடைய வேறொரு நிகழ்வினைக் கொண்டுதான் விளங்கிக் கொள்ள முடியும். கன்னித்தலை தொடர்புடைய படிமங்கள் கதையில் இரண்டு இடங்களில் வருகின்றன. கன்னித்தலை நிகழ்விற்கு முன்னால், அதாவது கதையின் தொடக்கத்தில் கடற்கரைக் கோயில் சிலையாக ஒன்று வருகிறது. கன்னித்தலை நிகழ்விற்குப் பின்னால், அதாவது கதையின் முடிவில் கபாடபுரக் காட்சியில் நரபலி கொடுக்கப்போகின்ற கன்னியாக மற்றொன்று வந்துள் ளது. 'கடற்கரைக்கோயில் சிலை-கன்னித்தலை-கபாடபுரக் கன்னி' ஆகிய மூன்றும் ஒரேபடிமத்தின் பிரதிநிதிகளாகும். அதா வது இடப்பெயர்வுகள் ஆகும். இன்னும் துல்லியமாகச் சொல்ல வேண்டுமென்றால் கன்னித்தலை தாயோடு தொடர்புடையது என்பதால் தாய்ப்படிமத்தின் இடப்பெயர்வுகள் ஆகும்.

மூன்று படிமங்களில் முதல் படிமமான கடற்கரைக் கோயில் சிலை நனவு மனதோடு தொடர்புடையதாக உள்ளது. இரண்டாவது படிமமான கன்னித்தலை நனவடங்கு மனதோடு தொடர்புடையதாக உள்ளது. மூன்றாவது படிமமான கபாட புரக் கன்னி நனவிலி மனதோடு தொடர்புடையதாக உள்ளது. கனவின் கனவாக இருக்கின்ற கபாடபுரத்து நிகழ்வுகள்தான் படைப்பாளி மனதின் அடிமட்டப் பகுதியாகவும் விளங்கு கின்றன. ரசக் குளிகையில் கால யாத்திரை செய்து கொண்டி ருக்கும்போது கதைத்தலைவன் கபாடபுரம் வந்தடைகிறான். அதாவது கதைத்தலைவன் வழியில் புதுமைப்பித்தனின் எண்ணவோட்டம் நனவிலியின் அடித்தளத்தை வந்தடைகிறது. இரண்டிலும் உள்ள பின்னோக்க ஒப்புமையே இத்தகு உளச் செயலுக்குக் காரணியாக உள்ளது. எனவே கதையின் மூலக் கரு கபாடபுரத்து நிகழ்வுகளில் பொதிந்து கிடக்கிறது.

கபாடபுரத்து நிகழ்வுகளின் விவரணைதான் கதையின் உள்கனவு. இந்த உள்கனவு, மாயைத்தன்மை கொண்ட நனவிலிப் பொருண்மையுடைய பகுதியாகும். உள் கனவில்

பொதிந்து கிடக்கின்ற உளக்கூறு, கதையின் ஆக்கத்திற்கு அல்லது கனவுச் செயலாக்கத்திற்கு மூலாதாரமாக அமைந் துள்ளது. அந்தக் கூறு என்ன என்பதைக் கண்டுபிடித்துவிட் டால் கதையின் அடிக்கருத்தைப் புரிந்துகொள்ளலாம். அதில் தான் கனவின் மூலக்கூறு இருக்கின்றது. அதைக் காண உள் கனவுப் படிமங்களைக் கனவுப்பகுப்பாய்வு செய்யவேண்டி யுள்ளது. உள் கனவில் வெளிப்பட்டுள்ள படிமங்கள் அனைத் தும் பதற்ற உணர்வுகளோடு தொடர்புடையவையாகும். அதற்குக் 'கபாடபுரத்தின் அழிவு' என்கிற அடிக்கருத்து காரண மாக உள்ளது. உள்கனவுப் படிமங்களில் குறிப்பிடத்தக்கவை கர்ப்பேந்திரம், நரபலி, கர்ப்பேந்திரத்தின் கண் குருடாதல், பூசாரி தலை அறுபடுதல் ஆகியவையாகும். இவை அடிக் கருத்துக்குள் இயங்குகின்ற மூலக்கூறுகள்.

கர்ப்பேந்திரம் என்பது ஃப்ராய்டின் மாயைத்தன்மை யுடைய கோரவுரு வகையைச் சார்ந்ததாகும். இந்த உரு ஆக்கம் அல்லது உருவெளித்தோற்றம் (hallucination) மெய்ம் மைக்குப் புறம்பானதால் தர்க்கமற்ற கற்பனை வகையைச் சார்ந்ததாக அமைகிறது. அதாவது கர்ப்பேந்திரத்தை மாயைப் படிமம் எனலாம். உள் கனவு மாயைத்தளத்திலிருந்து வெளிப்பட்டது என்பதற்குக் கர்ப்பேந்திரம் படிமம் சான்று பகர்கிறது. அடுத்தது உள்கனவின் மையக்கரு பெண் ஆவாள். காரணம் 'கடல்கோயிலில் உள்ள கன்னித்தலை யார்?' என் பதை அறியத்தான் கதைத்தலைவன் சித்தலோகம் வழி யாகக் கபாடபுரம் வருகின்றான். எனவே கபாடபுரத்தில் பெண்ணைப் பற்றி அறிவதுதான் மையக்கருவாக உள்ளது. கபாடபுரம் வந்த கதைத்தலைவன் பூசாரி, பாண்டியன் ஆகியோரோடு பெண் செல்வதைப் பார்க்கின்றான். அவளை நரபலி கொடுக்கப்போகின்றார்கள் என்பதை அறிகின்றான். 'நரபலி' என்பது உள்கனவின் முக்கியப் படிமங்களில் ஒன்றா கும். மனிதத் தலையைத் துண்டித்துவிடுகின்ற இந்த வினைப் படிமம் உயிர்ப்பலிக்கு இணைவரையானது. 'உயிர்ப்பலி' என்பது காயடிப்புச் சிக்கலின் (castration complex) வெளிப்பாடு என்று ரெய்க் தனது 'Rituals: Psychoanalytic Studies' என்கிற நூலில் விவரித்துள்ளார். அதனால் பெண்ணின் காயடிப்புதான் இந்நிகழ்வில் பொதிந்து கிடக்கிறது.

கபாடபுரத்தில் வருகின்ற பெண் கடல் கோயிலில் உள்ள கன்னித்தலையோடு தொடர்புடையதாக இருப்பதால் இப்பெண் தாயின் குறியீடு ஆவாள். தாய் என்கிற படிமமும் காயடிப்பு என்கிற படிமமும் ஒன்றாக இப்பெண்ணிடம் உறைவுத்தன்மை (Condensed form) பெற்று அமைந்துள்ளன.

உளப்பகுப்பாய்வுக் கோட்பாட்டின்படி இத்தகைய உறைவு 'காயடிக்கப்பட்ட தாய்' (castrated mother) என்பதைக் குறிக்கும். ஆண்குறித்தாய் என்கிற படிமம் வருகின்ற இட மெல்லாம் காயடிக்கப்பட்ட தாய் என்கிற படிமமும் இணைந்து வரும். இரண்டு படிமங்களும் இரட்டைப் போக்குடையவை என்பது குறிப்பிடத்தக்கது. கதைப்படி கபாடபுரத்துப் பெண் நரபலி கொடுக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படவில்லை. ஆனால் நரபலி கொடுத்துவிட்ட குறிப்பைப் பலிபீடத்தில் உள்ள கன்னித்தலை மூலம் அறிய முடிகிறது. கனவுச் செயலின் 'நாடகமாக்கம்' இங்கே நிகழ்ந்துள்ளது. அதாவது கனவைச் சொல்லும் போது விட்டப்பட்ட கனவுப் படிமங்களைப் பகுப்பாய்வு மூலம் அறிகின்ற கனவு உத்தியை நாடகமாக்கம் என்று ஃப்ராய்ட் குறிப்பிடுகிறார். கபாடபுரத்து நிகழ்வில் காயடிப்புத் தொடர் புடைய நரபலி நிகழ்ந்திருப்பதற்கு மற்ற படிமங்கள் சான்று பகர்கின்றன. குறிப்பாக, கர்ப்பேந்திரத்தின் ஒற்றைக்கண் வேல் வீச்சால் குருடாகிப்போதல், பூசாரித்தலை அறுபட்டு விடுதல் ஆகிய காயடிப்புப் படிமங்களைக் கொண்டு உள் கனவில் நாடகமாக்கம் நிகழ்ந்திருப்பதை அறியலாம். மேற் கூறிய விளக்கங்களின்படி உள்கனவில் பொதிந்து கிடக்கின்ற கூறு 'காயடிப்புச் சிக்கல்' ஆகும்.

நனவிலியின் மாயைத்தளத்திலிருந்து காயடிப்புச் சிக்கல் வெளிப்படுவதால் கதையின் உள்கனவுக்கு மூலக்கூறாக அமை கின்றது. உள்கனவை மையமாகக் கொண்டு கதை அமைந் திருப்பதால் கதை முழுவதும் காயடிப்புச் சிக்கல் தொடர்பான எண்ணங்கள், உணர்வுகள் மற்றும் படிமங்கள் வெளிப்பட் டிருக்கின்றன. தலையற்ற முண்டம், ஒரே அச்சில் வார்த்த உருவங்கள், கோபுரம் இல்லாத கோயில், முக்கியமாக பலி பீடத்தில் உள்ள கன்னித்தலை போன்ற படிமங்கள் காயடிப் புக் குறியீடுகளாக விளங்குகின்றன. கதைத்தலைவனின் இருட்டு அச்சம், காய அச்சம், இறப்பு அச்சம், விலங்கு அச்சம் போன்ற அச்சங்கள் காயடிப்பு அச்சத்தின் இடப்பெயர்வுகளா கின்றன. எனவே படைப்பாளியின் பதற்ற ஆளுமைக்குக் காயடிப்புச் சிக்கல் முதன்மைக் காரணியாக விளங்குகின்றது என்பதை உளப்பகுப்பாய்வு வழியில் அறியலாம்.

(மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் தின் தமிழியல் துறை, ஜனவரி 1999இல் நடத்திய புதுமைப்பித்தன் ஐம்பதாமாண்டு நினைவுக் கருத்தரங்கில் அளிக்கப்பட்ட கட்டுரை)

# உழைப்பில் பங்குபெறாதவர்களுக்கு நில உரிமை மாற்றம்

(வேள்விகுடி—தளவாய்புரச் செப்பேடுகளில் ஆய்வு)

த. வசந்தா

தமிழ் நாட்டில் நிலங்கள் கொடையாக வழங்கப்பட்ட விவரங்கள் இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் கூறப்பட்டுள்ளன. இந்த நிலங்கள் உற்பத்திக்கு ஏற்ற வளமிக்க விளைநிலங்களாகவும் பண்படுத்தப்படாத நிலங்களாகவும் காட்டு நிலங்களாகவும் அமைந்திருந்தன. இந்த நிலங்கள் பிராமணர்களுக்கும் அதிகாரிகளுக்கும் படையினருக்கும் மற்றையோருக்கும் வழங்கப்பட்டிருக்கின்றன.

இந்த நிலக்கொடையின் தொடக்கநிலை எவ்வாறு இருந்தது, எந்தச் சூழ்நிலையில் நிலங்கள் கொடையாக வழங்கப்பெற்றன, உற்பத்திக்கேற்ற நிலங்கள் எப்படி விளைச்சலில் ஈடுபடாதவர்களுக்குக் கொடை என்ற பெயரால் உரிமை மாற்றம் செய்யப்பட்டன என்ற விவரங்களை ஆய்வது இன்றியமையாததாகும். பாண்டியர் காலத்திய வேள்விகுடிச் செப்பேடுகளும் (கி. பி. 770) தளவாய்புரச் செப்பேடுகளும் (கி. பி 905) இது தொடர்பாகச் சில விவரங்களை நமக்கு அளிக்கின்றன. எனவே, இந்த இரண்டு செப்பேடுகளின் அடிப்படையில், நில உரிமை மாற்றத்தின் சில தன்மைகளை மட்டும் இங்கு ஆராயலாம்.

சங்க காலத்தைச் சேர்ந்த பாண்டிய மன்னன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்பவனால் வேள்விகுடி என்று பெயரிட்டுக் கொடையாகத் தரப்பட்ட ஊர், பின்னர் களப்பிரர்களால் கைப்பற்றப்பட்டது என்று ஒருவன் கி.பி. 770இல் ஆட்சி செய்த பாண்டியன் நெடுஞ்சடையனிடம் முறையிடுகின்றான்; தன் முன்னோர்க்குக் கொடையாகத் தரப்பட்ட அந்த ஊரின் உரிமையைத் தனக்கு மாற்றித் தருமாறு அவன் வேண்டுகின்றான்; இதைக் கேட்ட அரசன், ஊரின் உரிமைக்கான பழைய ஆவணத்தைக் காட்டி, நிலத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கூறுகிறான்; அவ்வாறே அவன் தனது உரிமையைக் காட்ட, அரசன் அதனை ஏற்று,

அந்த ஊரினை மீண்டும் அவனுக்கு அளிக்கிறான் என்று வேள்விகுடிச் செப்பேடு குறிப்பிடுகிறது.

> மலர்ச் சோலைப் பாகனூர்க் கூற்றத்துப்படுவது ஆள்வ தானை யடல்வேந்தே வேள்விகுடியென்னும் பெயருடை யது ஒல்காத வேற்றானையொடோதவேலி யுடன் காத்த பல்யாக முதுகுடுமிப் பெருவழுதியென்னும் பரமேச்வர னால் வேள்விகுடி யென்னப்பட்டது கேள்வியிற்றரப்பட்ட தனைத் துளக்கமில்லாக் கடற்றானையாய் களப்பிரரால் இறக்கப்பட்டது என்று நின்றவன் விக்ஞாப்யஞ் செய்ய நன்று நன்றென்று முறுவலித்து நாட்டானின் பழமை யாதல் காட்டி நீ கொள்கவென்ன நாட்டாற்றன் பழமை யாதல் காட்டினான் அங்கப்பொழுதே காட்டமேனா ளெங்குரவராற் பான்முறையிற் றரப்பட்டதை எம்மாலுந் தரப்பட்டதென்று செம்மாந்தவன் எடுத்தருளி விற்கைத் தடக்கை விறல் வேந்தன் கொற்கை கிழான் காமக்காணி நற்சிங்கற்குக் தேரோடுங் கடற்றானையான் நீரோட்டிக் கொடுத்தமையின்...[1]

பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்ற பாண்டியன் சங்க காலத்தைச் சார்ந்தவன். சற்றேறக்குறைய எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர் கொடையாகத் தரப்பட்டதாகக் கூறப் படும் நிலத்தின் ஆவணங்களைக் காட்டி, இழந்துவிட்ட ஊரினை மீண்டும் பெற்றான் என்பது பல ஐயங்களை எழுப்பு கின்றது.

சங்க கால இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப் பாட்டு ஆகியன பழந்தமிழர் வாழ்க்கையினை விரிவாக எடுத்துக் கூறுவனவாகும். குறிப்பாக, புறநானூறு, பதிற்றுப் பத்து ஆகியன மன்னர்களைப் பற்றிய செய்திகளைக் கூறு கின்றன. இந்த இலக்கியங்கள் குதிரை, யானை, தேர், பொன், அணிகலன் போன்ற பொருள்கள் இரவலர்களுக்கும் புலவர் களுக்கும் கொடையாக வழங்கப்பட்டதாகக் குறிக்கின்றனவே யன்றி, நிலம் அல்லது ஊர் கொடையாகக் கொடுக்கப் பட்டதை எங்கும் குறிப்பிடவில்லை. பாரி மன்னன், தன்னைப் பாடிய புலவர்களுக்குத் தன் நாட்டைக் கூறுகூறாகப் பகுத்துக் கொடுத்துவிட்டதால் பறம்புநாடு அவர்களுக்கு உரிய தாக ஆகிவிட்டது என்ற மறைமுகமான சான்றினை வைத்துக்கொண்டு ஊரினைக் கொடையாகத் தரும் வழக்கம் இருந்தது என்று கூற இயலாது.[2] இது புலவர்களால் புகழ்ந்து கூறப்பட்ட கூற்றேயாகும். பாரி தன் நாட்டைக் கூறிட்டுக் கொடுத்த பின்னரும், பகைவேந்தர் பாரியை எதிர்த்துத்தான்

படை தொடுத்தனர் என்பதால், பாரியின் நாடு அவன் கட்டுப்பாட்டிலேயே இருந்தது என்பது புலனாகிறது.

மேலும், பயன் மிகுந்த குதிரை, களிறு, தேர், விளை நிலம், ஊர் போன்றவை புலவருக்குத் தரப்பட்டதாக ஆய் இறந்தபின் பாடப்பட்ட பாடல் குறிப்பிட்டாலும் புகழ்ச்சி நிலையாகவே இது கொள்ளப்படவேண்டும்.[3] இரவலர்களும் புலவர்களும் இவற்றைக் கொண்டிருந்ததையோ துய்த் ததையோ எப்பாடலும் கூறவில்லை. உணவு, உடை, அணி கலன்கள் போன்றவற்றுடன் பேணப்பட்ட விருந்தோம்பலே அன்று சாலச்சிறந்ததாகக் கொள்ளப்பட்டதையும் பல புற நானூற்றுப் பாடல்களில் காண முடிகின்றது. ஆனால், போரில் ஈடுபட்ட வீரர்களுக்கு அவர்கள் கைப்பற்ற உதவிய வளமற்ற 'கரம்பைச் சீறூர்'களும்[4] வயல் நிலங்களும்[5] பங்காகப் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவை கொடை என்ற அளவில் அல்லாது பங்குரிமையாகவே அமைந்துள்ளன.

பதிற்றுப்பத்து ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் உள்ள பதிகக் குறிப்புப் பகுதியில் கூறப்படும் சில செய்திகள்தாம் புலவர்களுக்கு நிலம் கொடையாக வழங்கப்பட்டதற்கான நேரடிச் சான்றாக அமைகின்றன. ஐந்நூறு ஊர்கள் பிரமதாய மாகக் கொடுக்கப்பட்டதைப் பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்துப் பதிகம் குறிப்பிடுகின்றது.

> உம்பற்காட்டுஐந்நூறு ஊர் பிரமதாயமாகக் கொடுத்து...[6]

ஒரு குன்றின் மீது ஏறி நின்று, தன் கண்ணில் கண்ட நாடு எல்லாம் காட்டி அவற்றைக் கொடையாகக் கொடுத்ததாக ஏழாம் பத்தின் பதிகம் குறிப்பிடுகிறது.

> சிறுபுறம் என நூறாயிரம் காணம் கொடுத்து, 'நன்றா' என்னும் குன்று ஏறி நின்று, தன் கண்ணில் கண்ட நாடு எல்லாம் காட்டிக் கொடுத்தான் அக்கோ.[7]

இந்த இரண்டு வகையான கொடைகளும் ஆழ்ந்த ஆய்வுக் குரியன. பல்லவர் காலத்திலும் அதற்கடுத்த காலங்களிலும் நில உற்பத்தி வளர்ச்சி விரிவடைந்த நிலையில், வீரர்கள் அல்லாது பிராமணர் போன்ற பிறருக்கும் நிலங்கள் கொடை யளிக்கப்படும் வழக்கு மிகுந்தது. அப்போது வழங்கப்பட்ட நிலங்கள் பெரும்பாலும் விளை நிலங்களாகவே இருந்திருக் கின்றன. கிழக்கெல்லை, மேற்கெல்லை, தெற்கெல்லை, வடக்கெல்லை என்றெல்லாம் தெளிவாக நான்கெல்லைகளும் வகுக்கப்பெற்று, குறித்த நிலங்களைக் கொடையளிப்பதாகவே அவை அமைந்திருக்கின்றன. அத்துடன், நிலங்களின் பரப்பும்

அளவும் உரிய அளவைகளால் குறித்துக் கூறப்பட்டிருக்கின்றன. காடுகள், விளைநிலங்களாக மாற்றம் பெற்ற பிறகுதான், வேலி போட்டுக் காவல் செய்வதும் எல்லை வகுப்பதும் அளவு கொள்வதும் யாருடைய உரிமையென நிலைநாட்டுவதும் வேண்டியதாயிற்று. ஆனால், பதிற்றுப்பத்துப் பதிகங்களில் கூறப்பட்டுள்ள கொடை நிலங்கள் யாவும் எல்லை வகுக்கப்படாமலும் அளவை குறிக்கப்படாமலும் காட்டப்படுகின்றன. எனவே, ஐந்நூறு ஊர்கள் என்பதும் கண்ணில் கண்ட பகுதிகள் யாவும் என்பதும் இவை விளைநிலங்கள் அல்ல என்பதையே சுட்டிக்காட்டுகின்றன. "நிலன் அளப்பன்ன"[8] என்று புறநானூறு கூறியிருந்தாலும் எல்லை வகுத்து, அளவைகளால் வரையறுக்கப்பட்ட நிலங்களைப் பற்றிய குறிப்புகள் பிற சங்கப் பாடல்களிலும் இல்லை என்றே கூறலாம். இந்த நிலையில், பதிற்றுப்பத்துப் பதிகங்கள் சிலவற்றில் கூறப்படுவன எல்லைகள் வகுக்கப்படாத நிலங்களாக இருப்பதே, இவை தனி ஒருவருக்கு உரிமையுடையனவல்ல எனக் காட்டிவிடுகிறது.

மேலும், ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் அமைந்துள்ள பதிகம் சங்க காலத்தை அடுத்த காலப்பகுதியைச் சார்ந்ததாகவே ஆய்வாளர்களால் கருதப்படுகின்றது. எனவே, சங்க காலத்தை அடுத்த காலப்பகுதியில் பண்படுத்தப்படாமல், பயன்படுத்தப்படாமல் யாருக்கு உரிமையுள்ளது என்ற வரையறை இல்லாததால் ஏற்பாரின்றிப் பரந்துகிடந்த காட்டு நிலங்கள் கொடையாக ஒருவேளை வழங்கப்பட்டிருக்கலாம். ஆயினும், சங்க காலப் பாண்டிய மன்னன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி காலத்தில் வேள்விகுடி என்ற ஊர் கொடையாக வழங்கப்பட்டிருக்க வாய்ப்பே இல்லை. விலக்காக அத்தகையதொரு கொடை வழங்கப்பட்டிருபபினும், அது விளை நிலமாக இருந்திருக்க இயலாது. ஆனால், வேள்விகுடிச் செப்பேட்டில் விளக்கப்பட்டுள்ள நான்கு எல்லைகளும், உரிமை கொண்டாடப்பட்டபொழுது அவை விளைநிலங்களென்பதையே உறுதிப்படுத்துகின்றன. அதாவது, கொடையளிக்கப்பட்டபோது, விளைநிலமாக இல்லாதிருந்தாலும், பின்னர் விளைநிலமாகப் பண்படுத்தப்பட்டுவிட்டது.

> மற்றிதற்குப் பெருநான்கெல்லை தெற்கென விரித்துரைப்பிற் புகரறுபொழின் மருங்குடுத்த நகரூரெல்லைக்கு மேற்கும் மற்றிதற்கு தென்னெல்லை குளத்தை வங்கூழ் வந்தெசைக்குங் களத்தைக் குளத்தி லாலுக்கு வடக்கும் மற்றிதற்கு மேலெல்லை யற்ற மில்லாக் கொற்றன்றத்

தூரொடு மையிருப்பைச் செய்யிடை மேற்றலைப் பெருப் பிற்குக் கிழக்கும் மற்றிதற்கு வடபாலெல்லை காயலுட் கமல மலரும் பாயலுள் வடபாலைப் பெருப்பிற்குத் தெற்கும் இல்லியைத்த பெருநான்கெல்லையிற் பட்ட பூமி காராண்மை மீயாட்சியுள்ளடங்க மேலென் குரவராற் கொடுக்கப்பட்ட பரிசே யெம்மாலும் கொடுக்கப்பட் டது...[9]

மேலும், நில உரிமைக்கான ஆவணங்கள் கொள்ளும் நடைமுறை சங்க காலத்தில் இருந்ததா என்ற வினாவும் எழுகின்றது. இந்த ஆவணம் எவ்வடிவில் அமைந்திருந்தது என்பதும் ஆய்வுக்குரியதாகும். அப்படியிருப்பினும், எண்ணூறு ஆண்டுகளில் ஏற்பட்ட சமூக—பொருளாதார—அரசியல் மாற்றங்களுக்கு எதிர்நின்று அத்தகையதொரு ஆவணம் நிலைபெற்றிருக்க இயலுமா?

வேள்விகுடிச் செப்பேட்டின் காலம் கி. பி. 770 ஆகும். களப்பிரர்களால் ஊர் கைப்பற்றப்பட்டதாகவே கொண்டாலும், அவர்களுக்குப் பிறகு பல நூற்றாண்டுகள் கழித்தே ஊரினுடைய உரிமை வேண்டப்படுகிறது. களப்பிரர் முறியடிக்கப்பட்ட பிறகு பல நூறு ஆண்டுகள் உரிமை கொண்டாடாமல் விடப்பட்டது ஏன் என்று விளங்கவில்லை. அத்துடன், அந்த ஊருக்கு உரிமை உள்ள ஆவணம் உரிமை கொண்டாடுவோன் கையில் இருந்திருக்குமேயானால், அதை முதலிலேயே அரசனிடம் அளிக்காது, அரசன் கேட்ட பிறகே காட்டுவது ஏன் என்பதும் விளக்கப்படவில்லை. அரசனும் காட்டப்பட்ட ஆவணத்தின் உண்மைத் தன்மையை ஆய்ந்ததாகவோ, உடனிருப்போரைக் கேட்டு விவரங்களைத் தெரிந்துகொண்டதாகவோ, நிலத்தைப் பயன்படுத்தி வந்தவனுடைய நிலை யாது என அழைத்து விசாரித்ததாகவோ செப்பேட்டில் எதுவும் குறிக்கப்படவில்லை. ஒரு பக்கத்தின் வேண்டுகோளை மட்டுமே ஏற்று முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவை யாவற்றுக்கும் விளக்கங்களாக இல்லாவிட்டாலும், சில உண்மைகளை உறுதிசெய்யத் தளவாய்புரச் செப்பேடு உதவுகின்றது.

முன்னர் மேடுகளும் மரங்களும் நிறைந்து, கேட்பாரற்றுக் கிடந்த காட்டு நிலத்தைப் பண்படுத்தி வளம் நிறைந்த நிலமாக மாற்றிப் பயன்படுத்தி வருகிறான் ஒருவன். அந்த நிலம் பயன்தருவதாக மாறிவிட்டது. இந்த நிலையில், பண்படுத்தப்பட்ட அந்த நிலம் தனக்கு உரியது என்றும், தன்னிடமிருந்த செப்பேட்டு ஆவணம் தவறிவிட்டதால் அதைக் காட்ட இயல

வில்லை என்றும் ஒரு பிராமணன், அரசனிடம் விண்ணப்பம் செய்தான். அரசன், அந்த பிராமணனின் கூற்றை அப்படியே ஏற்றுக்கொண்டு, அப்போது விளைவித்து வந்தவனிடமிருந்து அந்த நிலத்தைப் பறித்து, உழவிலும் உற்பத்தியிலும் எத்தகைய பங்கும் பணியும் பெற்றிராத பிராமணனிடம் நில உரிமையை மாற்றி வழங்கினான். தளவாய்புரச் செப்பேடு கூறுகிறது:

> பிரமதேயம் கன்னிடக்கைத் தேசமலி திருமங்கலமிது பண்டு பெருநல்லூர்ப்படுவதனைப் பாங்கமைந்த குடிகளது காராண்மை மோடெழுந்த முதுகொம்பர்க் கோடெழுந்து கிடந்ததனை...
> ஏகபோகமதுவாக எழிற்செப்பேட்டொடு கொடுத்தனன் ஆகிய இவ்வூரிரண்டின் செப்பேடு மறக்கேட்டில் இழந்து போயின வென்றும் ஏதமில் சோமாசி குறிச்சிச் செழுந்தகைய நிலத்துப்படும் நிலத்தைக் கடற்றிருக்கை கிழவன் மதிதரு பெரு நான்கெல்லை இட்டுக்கொண்டு மற்றதனை மதுரதரநல்லூரென்று பெயரிட்டுக் குடிநிலனாகக் கொண்ட நிலமதுவும் அவன் குடிநிலனாகை தவிர்ந்து தொண்டு சோமாசி குறிச்சி மேலைபுரவேறப் பெறுவதென்றும் சொல்லிய ஊரிரண்டும் தம்மிலெல்லை கலந்து கிடக்குமாதலில் ஒன்றாகவுடன்கூட்டிப் புரவெழுதிப் பிடிசூழ்ந்து நன்றாகிய சாசனஞ் செய்து நன்கருளவேண்டுமென்றும்...[10]

கொடையளித்ததாகக் கூறும்போது, மேடுகளும் மரங்களும் நிறைந்த காட்டு நிலங்களாக அவை இருந்தன என்பதும், இதற்கான ஆவணம் தொலைந்துவிட்டது என்பதும், உரிமை கொண்டாடும்போது நிலங்கள் விளைச்சலுக்கு ஏற்றதாகப் பண்படுத்தப்பட்டுவிட்டன என்பதும் இச்செப்பேட்டில் தெளிவாக வரையறுத்துக் கூறப்படுகின்றன. தளவாய்புரச் செப்பேட்டினை அடிப்படையாகக் கொண்டு வேள்விகுடிச் செப்பேட்டினை நோக்கினால், உள்ளே புதைந்து கிடக்கும் உண்மைகள் வெளிவரும். வேள்விகுடிச் செப்பேட்டில் எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னதான ஆவணம் என்று காட்டப்படுவது பொருத்தமானதல்ல என்பதை எளிதில் அறிந்து கொள்ளலாம். அதேபோன்று, தளவாய்புரச் செப்பேட்டில் உள்ளவாறு, நில உரிமை ஆவணம் தவறிவிட்டது என்றாலும்கூட, அந்த நிலத்தைக் கொடையாகப் பெற்றவருக்கு அல்லது அவரது வழித்தோன்றலுக்கு அந்நிலம் தனக்குத்தான் உரியது என்று தெரிந்துதானே இருந்திருக்கவேண்டும்? அப்படியிருக்க, வேறு

ஒருவன், நான்கெல்லை வகுத்து, அந்த நிலத்தைப் பண்படுத்தி உற்பத்திக்கு உரியதாக்கிப் பயன்கொள்ளும் வரை ஏன் பொறுத்திருக்க வேண்டும்? நான்கெல்லைகளையும் பார்க்கும் போது, செழுமைமிக்க—வளமிக்க நிலமாக மாற்றப்பட்டிருப்பதும் தெளிவாகிறது. இது குறுகிய கால உழைப்பினால் ஆகக் கூடியதல்ல; நீண்ட நாளைய உழைப்பும் முயற்சியும் இதற்கு வேண்டப்பட்டிருக்கும். ஆக, நிலம் காடாக—மேடாகக் கிடந்த போதும், பயன்படுத்தப்பட்டபோதும் உரிமை கொண்டாடாதவர்கள், வளம் கண்டதும் வளைத்துப்போட முயன்றார்கள். இங்குகூட, ஆவணம் தவறிவிட்டது என்பது ஏற்கக் கூடியதாக இல்லை.

நில உரிமை மாற்றம் தொடர்பாக இச் செப்பேடுகள் இரண்டும் பல விவரங்களை நமக்குத் தெளிவாக்குகின்றன.

இரண்டிலும் உள்ள சில ஒப்புமைகளையும் புறக்கணித்து விடமுடியாது. ஒன்றில் ஆவணம் தவறிவிட்டது என்று கூறப்படுகிறது; மற்றதில், பொய்யானதொரு ஆவணம் உருவாக்கப் பெறுகிறது. இரண்டு நிகழ்வுகளிலும், நிலத்தை நடைமுறையில் பயன்படுத்திவந்த உற்பத்தியாளர்களிடம் கருத்துக் கேட்கப்படாமலேயே ஒரு சார்பாக முடிவு மேற்கொள்ளப் படுகிறது. தொடக்கத்தில் இரண்டு நிலங்களும் காட்டு நிலங்களாகவே உள்ளன; நில உற்பத்திக்கு ஏற்ற வகையில் வளம் பெற்ற பிறகே உரிமை கொண்டாடப்படுகின்றன. ஆவணம் தவறிய பின்னரும் உரிமை கொண்டாடாமல் ஒன்றில் காலம் தாழ்த்தப்படுகிறது; மற்றொன்றில் ஆவணம் 'இருந்தும்' உரிமை கேட்பதில் காலம் கடத்தப்படுகிறது. இரு நிகழ்வுகளிலும் உள்ள இந்தக் கால இடைவெளிதான் குறிக்கத்தக்கது' உற்பத்திக்கு உதவாத நிலையிலிருந்து, உற்பத்திக்கு ஏற்றதாக மாறும் கால இடைவெளி இரண்டிலும் இருப்பதுதான் உண்மைகளை வெளிப்படுத்திவிடுகின்றன. இதனால், பண்படுத்தப்படாத நிலம், பயன்பாட்டுக்கு வந்ததும், அதில் பங்கையோ உழைப்பையோ செலுத்தாத சில பிரிவினர் உரிமை கொண்டாட ஓடிவந்ததையும், மன்னனின் துணையோடு உரிமை மாற்றம் பெற முனைந்ததையும், உற்பத்தியில் ஈடுபட்டிருந்தோரை வலிமையில் வெளியேற்றி வெற்றி பெற்றதையும் புரிந்துகொள்ள முடிகின்றது.

தனக்கு வேண்டிய உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யத் தொடங்கிய பிறகு, மனிதன் மேலும் மேலும் நிலங்களை விளைச்சலுக்குக் கொண்டு வந்தான். பெரும்பாலும் இனக்குழுக்களாக வாழ்ந்து கொண்டிருந்த தொடக்க நிலையில், தான் வாழ்ந்து கொண்டிருந்த குடியிருப்பை அடுத்துள்ள

பகுதிகளையும் உற்பத்திக்கு ஏற்ற நீர்ப்பாசன வாய்ப்புகள் நிறைந்த பகுதிகளையும் முதலில் பண்படுத்தினான். ஆனாலும் அக்காலத்தில் உற்பத்திக்குக் கொண்டுவரப்படாத பகுதிகளும் காட்டு நிலங்களும் மிகுதியாக இருந்தன. "காடு இடைக் கிடந்த நாடு" என்று கூறப்படுவதிலும் இது தெளிவாகிறது.[11] இந்தக் காட்டுப் பகுதிகள் தனி ஒருவருக்கு அல்லது தனி ஒரு குழுவுக்கு உரிமையுடையதாக எல்லை வகுத்துக் கொள்ளப்படாமல் பரந்து விரிந்து கிடந்தன. தமது தேவைக்கேற்ப புதிய நிலங்களை உற்பத்திக்கு ஏற்ப உருமாற்றம் செய்வதைத் தடுப்பவர்களோ, அந்த நிலத்தில் உரிமை கொண்டாடுபவர்களோ அப்போது யாரும் இருக்கவில்லை. எனவே, தடையெதுவும் இல்லாமல் மக்கள் தங்கள் தேவைகளுக்கும் முயற்சிகளுக்கும் உழைப்புக்கும் ஏற்பப் புதிய நிலங்களைப் பண்படுத்தினர். இருப்பினும், பண்படுத்தப்படாத நிலங்கள் இன்னும் உரிமை கொண்டாடப்படாமல் மிகுந்தே கிடந்தன.

இவ்வாறு பரவலாக விரிந்து கிடந்த பண்படுத்தப்படாத நிலப்பகுதிகளில், மனிதக் குடியிருப்புகளோ, ஆட்சியாளரின் ஆளுமையோ ஏற்படாத வரை, ஊக்கமும் முயற்சியும் துணிவும் கொண்ட மக்கள் பகுதியினர், தங்களுடைய உழைப்பின்வழி இவற்றைத் திருத்தி உணவு உற்பத்தியில் ஈடுபட்டு வந்தனர். யாருடைய இடையீடும் இல்லாமல் இருந்ததால், இத்தகைய மனித முயற்சிகள் தொடர்ந்து நடந்து வந்தன இது போன்ற நிலை வட இந்தியப் பகுதிகளிலும் நிலவி இருந்ததை அறிஞர் டி. டி. கோசாம்பி எடுத்துக்காட்டுகிறார்.[12]

இப்படி மனித முயற்சிகளினால், உற்பத்திக்குக் கொண்டு வரப்பட்ட நிலப்பகுதிகள், அவற்றில் உழைப்பைச் செலுத்திய குழுவினரின் பயன்பாட்டில் இருந்தன; காலப்போக்கில் அவர்களுடைய உடைமைகளுமாயின.

இந்தக் காலகட்டத்தில் ஏற்பட்ட சமூக—பொருளாதார மாற்றங்களால், இனக்குழுத் தலைவர்களாக இருந்தவர்கள் மன்னர்களாகவும் பேரரசர்களாகவும் வளர்ச்சியுற்றனர். இவர்களது சிறப்பும் வலிமையும் மிகுந்தது. பின்னர், நில உற்பத்தி வளர்ச்சி நிலையில்தான், பிராமணர்களுக்கும் பிறருக்கும் கொடைகள் தருகின்ற வழக்கம் தோன்றியது. இத்தகைய கொடைகள் பெரும்பாலும் பயன் மிகுந்த பொருள்களாகவே இருந்திருக்கின்றன. பொன், அணிகலன்கள், காசுகள், ஆடு, மாடுகள். நிலங்கள் என்று பலதரப்பட்டவையும், அந்தந்தச் சமூக—பொருளாதார அமைப்பில் சிறப்புப் பெற்றிருந்த பொருள்களாகவே இருக்கக் காண்கின்றோம். ஆடு, மாடுகள் போன்ற பொருள்கள் கொடையாகக் கொடுக்கப்

படுவதுகூடச் சங்க இலக்கியங்களில் பரந்து காணப்பட வில்லை.[13] அவை சங்க காலத்தையடுத்த காலப்பகுதியிலும் பல்லவர் காலத்திலும்தான் மிகுதியாகக் காணப்படுகின்றன. சங்ககால முல்லை நில வாழ்க்கை முறை மேய்ச்சல் தொழிலை அடிப்படையாகக் கொண்டிருந்தபோதும், ஆடு மாடுகளைக் கொடையளிக்கின்ற முறை சற்றுப் பின்னரே நடைமுறைக்கு வந்தது. அதே போன்று, நில உற்பத்தி வளர்ச்சி ஏற்படாத அல்லது வளர்ச்சி கட்டத்தில் இருந்தபோது, நிலக்கொடைஎன்பது மிகுந்த அளவில் அமைந்திருக்க வாய்ப்பில்லை. அப்படி நிலக் கொடை தருகின்ற பழக்கம் சிறிதளவு இருந்திருப்பினும் அவை பெரும்பாலும் உற்பத்திக்குக் கொண்டுவரப்படாத காட்டு நிலங்களாக இருந்திருக்கவேண்டுமேயன்றி, உற்பத்திக்கேற்ற விளைநிலங்களாக இருந்திருக்க இயலாது. "காடு கொன்று நாடாக்கி"[14] மேலும் மேலும் புதிய நிலங்களைப் பண்படுத்தும் பணி தொடர்ந்து நடந்து கொண்டிருந்தபோது, உற்பத்திக் கேற்ற விளை நிலங்களை வாரி வழங்குமளவிற்கு அன்றைய நிலையில் பரவலான விளைநிலப்பரப்பு இருந்திருக்காது. இவ்வாறு வழங்கப்பட்ட காட்டு நிலங்களும் மிகப் பரந்த அளவில் இருப்பதைப் பார்க்கும்போது, இவற்றை ஒரு தனி மனிதன் அல்லது அவனது குடும்பம் மட்டுமே பண்படுத்திப் பயன் கொள்ள இயலாது என்பது தெளிவாகும். எனவே, இந்தப் பண்படுத்தப்படாத காடுகளுக்கு எவரும் உரிமை கொண்டாட வில்லை. அத்துடன், கொடையளிக்கப்பட்டிருந்தாலும் இந்த நிலங்கள், கொடுக்கப்பட்டவர்களின் உண்மையான கட்டுப் பாட்டிலும் இருந்திருக்க இயலாது; அவர்களுக்கு உரிமை யுடையதாகவும் இருந்திருக்க முடியாது. தெளிவாக வரை யறுத்துச் சொல்லவேண்டுமெனில் அவை யாருடைய கட்டுப் பாட்டிலும் இருக்கவில்லை; எவருமே அவற்றிற்கு உரிமை கேட்கவுமில்லை.

ஆனால், இவை பண்படுத்தப்பட்டு, செம்மைப்படுத்தப் பட்டு, விளை நிலங்களாக உருப்பெற்றுப் பயன்தரத் தொடங்கி யதும், இந்த உற்பத்திதரும் நிலங்களில் உரிமை கொண்டாடப் பலர் ஓடிவந்தனர். இதனைத் தளவாய்புரச் செப்பேட்டில் நன்றாகக் காணலாம். மேடும் மரங்களும் நிறைந்த நிலமாக இருந்தபோது யாரும் அதற்கு உரிமை கொண்டாடவில்லை. ஆனால், அந்த நிலம் உற்பத்திக்கு ஏற்றதாக மாறிய பிறகு அதில் உரிமை கொண்டாட ஒருவன் முற்படுகிறான். அந்த நிலத்தை உற்பத்திக்குக் கொண்டு வந்ததில் அவன் எத்தகைய பங்கும் ஆற்றாதவன் என்பதுதான் இங்குச் சிறப்பாகக் குறிப் பிடத்தக்கது.

உரிமை மாற்றத்தின் பின்னணியைத் தளவாய்புரச் செப்பேடு கீழ்க்கண்டவாறு கூறுகின்றது:

> நாராயணங் கேசவன் கல்விக்கடல் கரைகண்டும் க்ஷத்ரி யாநு மதமுணர்ந்து சொல்வித்தகம் தனதாக்கி சுத்த சீலாசாரனாகி மீனவன் வீரநாரணற்கு விச்வாச கர்மங் கட்கான தன்மையனாதலில் அருளறிந்து விண்ணப்பஞ் செய.........உலகறியக் கொடுத்தருளின்ன்[15]

அதாவது மன்னனது போக்கு அறிந்து, உரிய காலம் பார்த்து, சொற்களைத் திரித்துப் பேசி, நில உரிமை மாற்றம் நடத்தப்பட்டிருக்கிறது என்று தெளிவாகச் செப்பேடு தெரிவிக் கிறது. அரசனுக்குச் சேவகனாக இருப்பவனுடைய உதவியுடன் இது நடத்தப்பட்டதால், அரசனுடைய இயல்பும் மனநிலையும் அறிந்து, ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. வேள்விகுடிச் செப் பேட்டில், ஆவணத்தைக் காட்டி உரிமை பெறுமாறு கேட்டுக் கொண்டதுபோல, தளவாய்புரச் செப்பேட்டில் அரசன் ஆவணத்தைப் பற்றிக் கேட்கவேயில்லை. அது காணாமல் போய்விட்டது என்பதை அப்படியே ஏற்றுக் கொள்கிறான். பிராமணர்களுக்கு அன்றைய நிலையில் இருந்த செல்வாக்கையே இது காட்டுகிறது. நிலத்தைப் பண் படுத்தி உழுது வந்தவனுடைய கருத்து யாது என்பது பற்றியும் பொருட்படுத்தவே இல்லை. அவனிடம் ஏதாவது ஆவணம் இருக்கிறதா என்பதையும் தெரிந்துகொள்ள முயலவில்லை. அதாவது, ஒரு சூழ்ச்சி போன்றே இது நடத்தப்பட்டிருக் கிறது.

நிலம் பண்படுத்தப்படுவதற்கு முன் அந்த நிலம் ஒருவருக்குக் கொடையாகத் தரப்பட்டிருந்ததா இல்லையா என்பது இங்கு வேண்டுவதல்ல. ஆனால், நிலம் பண்படுத்தப்படுவதற்கு முன் உற்பத்திக்கு உதவாத நிலத்தில் உரிமை கொண்டாடாத பகுதி யினர், பண்படுத்தப்பட்ட பிறகு உற்பத்திக்கேற்ற நிலத்தில் உரிமை கொண்டாடினர் என்பதுதான் இங்குக் குறிப்பிடத் தக்கது.

இடைக் காலத்துக்கு முன்னரே உற்பத்தியில் நேரிடையாக ஈடுபடாதவர்களுக்கு நிலம் உரிமையாகின்ற நிலை ஏற்பட்டு விட்டதையும் மறுக்க இயலாது. நில உற்பத்தியில் உழைப் பினைச் செலுத்தாத பிராமணர் போன்றவர்கள், வளமான நிலப்பகுதிகளுக்கு இடம்பெயரத் தலைப்பட்டுவிட்டதையும், நிலம் போன்ற உற்பத்திச் சக்திகளை உடைமை கொள்ளத் தொடங்கிவிட்டதையும் தொடக்க நிலையாகப் பண்டைக் காலத்திலேயே காண்கின்றோம்.[16]

நில உற்பத்தி வளர்ச்சி, உழைப்பில் ஈடுபடாத ஒரு புதிய பகுதியினரை சங்க காலத்திலேயே உருவாக்கிவிட்டது. இவர்கள், ஒரு கட்டத்தில் போர் போன்ற மன்னைது வினைகளில்கூட ஈடுபடவில்லை—உதவவில்லை. ஆனால், அச்சமூக அமைப்பில் கிடைத்த பயன் யாவற்றையும் எடுத்துக்கொண்டார்கள்.[17]

நிலத்தை உற்பத்திக்கு ஏற்றதாக உருவாக்கி, பண்படுத்தி விளைச்சல் நிலமாக மாற்றுவதற்கு உழைப்பைச் செலுத்திய உழவர்களின் பயன்பாட்டிலிருந்த நிலம், வல்லாண்மையுடன் பிடுங்கப்பட்டு, நில மேம்பாட்டில் எவ்வகையான உழைப்பும் பங்கும் செலுத்தாத வேறு ஒருவருக்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. இது, காலத்துக்கு ஏற்ப, நில உரிமை ஆவணங்களின் வழியாக உற்பத்திச் சக்திகளைக் கைக்கொள்ளும் முயற்சியாகவே அமைகின்றது. நிலத்தைப் பண்படுத்துவதில் மட்டுமல்ல, நில உரிமை பெற்ற பிறகு நிலத்தில் உற்பத்தியை மேற்கொள்ளவும் இத்தகைய பிரிவினர் பங்களிக்கவில்லை என்பதும் உடன் நோக்கத்தக்கது.

வேள்விகுடிச் செப்பேடுகளும் தளவாய்புரச் செப்பேடுகளும் தரும் இந்த உண்மைகளுக்குப் பிற செப்பேடுகளும் கல்வெட்டுகளும் உறுதுணையாக நிற்கின்றன. கசாக்குடிச் செப்பேடு கீழ்க்கண்டவாறு கூறுகிறது:

> முன் பெற்றாரை மாற்றி பிரம்மதுவராசன் விண்ணப்பத்தால் கோரசர்மன் ஆணத்தியாக தேவதானப் பிரம்மதேயம் நீக்கி குடிநீக்கி[18]

புல்லூர்ச் செப்பேடு:

> பல்குன்றக் கொட்டத்துக் கீழ்வேணாட்டு நெல்லியும் புல்லூரும், குடியூரும் மணலைகுளநாட்டுத் தக்காறும் இந் நான்கு ஊரும் கோவும் பொறியும் தீர்த்து முன் பெற்றாரை மாற்றி குடிநீக்கி பிரம்மதேயமாகப் பெற்ற நல்கூர் நற் பார்ப்பார்[19]

பாகூர்ச் செப்பேடு:

> தம் நாட்டுச் சேட்டுப் பாக்கமும் விளாங்காட்டங் கடுவனூரும் இறைப்புணைச் சேரியுமாக இம்மூன்றூரும் பழய அறமும் பிரம்மதேயமும் நீக்கி முன் பெற்றாரை மாற்றி.[20]

'முன்னுடையாரை மாற்றி,' 'முன் பெற்றாரை மாற்றி,' 'குடி நீக்கி' என்று வரும் இவை யாவும் வலிந்து செய்யப்பட்ட நில உரிமை மாற்றங்களையே உறுதிப்படுத்துகின்றன.

உழைப்பிலோ, உற்பத்தியிலோ சிறிதளவும் பங்கு பெறாத சில பிரிவினரின் பிடிக்குள் விளை நிலங்கள் எப்படி அடங்கின என்பதற்கு இவை வரலாற்றுச் சான்றுகளாக அமைந்திருக்கின்றன. அதே போன்று, நிலத்தில் கடும் உழைப்பைச் செலுத்தி, பெரும் உற்பத்தியைக் குவித்து, வளமான செல்வத்தை உருவாக்கிய எளிய மக்கள் எவ்வாறு நிலமற்றவர்களாகவும் வெறும் உழுது பயிரிடுபவர்களாகவும் விவசாயக் கூலிகளாகவும் மாற்றப்பட்டார்கள் என்பதையும் இதே சான்றுகள் தெளிவாகக் காட்டியிருக்கின்றன.

இந்த நோக்கில், இடைக்காலத்தில் ஏற்பட்ட உரிமை—உடைமை மாற்றங்களின் பின்னணிகளை முழுமையாக ஆய்ந்தால், அவற்றின் தெளிவான தன்மைகளைப் புரிந்துகொள்ள முடியும்.

## குறிப்புகள்

1 பாண்டியர் செப்பேடுகள் பத்து, தமிழ் வரலாற்றுக் கழகம், சென்னை, 1967, ப. 42.
2 புறநானூறு 108, 110.
3 புறநானூறு 240.
4 புறநானூறு 285, 302.
5 புறநானூறு 29, 254, 287, 312.
6 பதிற்றுப்பத்து, இரண்டாம் பத்துப் பதிகக் குறிப்பு.
7 பதிற்றுப்பத்து, ஏழாம் பத்துப் பதிகக் குறிப்பு.
8 புறநானூறு 301.
9 பாண்டியர் செப்பேடுகள் பத்து, ப. 42.
10 பாண்டியர் செப்பேடுகள் பத்து, பக். 126-127.
11 புறநானூறு 31.
12 டி. டி. கோசாம்பி, பண்டைய இந்தியா—அதன் பண்பாடும் நாகரிகமும் பற்றிய வரலாறு (மொழிபெயர்ப்பு), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1989, ப. 283.
13 எடுத்துக்காட்டாகப் புறநானூறு 171.
14 பட்டினப்பாலை 283.
15 பாண்டியர் செப்பேடுகள் பத்து, ப. 127.
16 புறநானூறு 166.
17 புறநானூறு 190.
18 பல்லவர் செப்பேடுகள் முப்பது, தமிழ் வரலாற்றுக் கழகம், சென்னை, ப. 179.
19 மேலது, ப. 198.
20 மேலது, ப. 276.

# இடைக்காலத் தமிழகத்தில் வேளாண் வளர்ச்சியினால் ஏற்பட்ட சமூக-பொருளாதார மாற்றங்கள்

மே.து. ராசு குமார்

ஒரு நாட்டின் குறிப்பிட்டதொரு காலச் சமூக-பொருளாதாரக் கட்டமைப்புக்கு, அந்நாட்டில் அப்போது நிலவும் உற்பத்தி முறைகளும் உறவுகளும் அடிப்படையாக விளங்குகின்றன மக்களின் வாழ்க்கை முறைகளும் சமூக-பொருளாதார நிறுவனங்களும் இந்த உற்பத்தி முறைகளது உறவுகளின் விளைவுகளாகவே உருவாக்கம் பெற்று, அதற்கேற்ப விரிவாக்கம் பெறுகின்றன. ஒரு குறிப்பிட்ட வகையிலான உற்பத்தி முறை மாறி, வேறு ஒரு வகை உற்பத்தி முறை உருவாகும்போது, இந்த மாறுதல், முன்னிருந்ததைவிட முன்னேற்றமான ஒரு நிலைக்கு மனித இனத்தை இட்டுச் செல்கிறது.

மனித இன வரலாறு, இது போன்ற பல அடுத்தடுத்த சமூக-பொருளாதாரக் கட்டமைப்பு மாறுதல்களைக் கண்டு வந்திருக்கின்றது. உணவு சேகரித்துண்ணும் கால மக்களின் வாழ்க்கை முறைக்கும் உணவு உற்பத்திக் கால மக்களின் வாழ்க்கை முறைக்கும் அடிப்படையான பல வேறுபாடுகள் இருப்பதைக் காண்கின்றோம். உணவு உற்பத்தியின் அறிமுகமே, பல சமூக-பொருளாதார நிறுவனங்களின் தொடக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் தோற்றுவாயாக அமைந்து நிற்கின்றது. இதேபோன்று, உற்பத்தி முறைகளின் வளர்ச்சியும் உற்பத்திக் கருவிகளின் முன்னேற்றமும் இந்தச் சமூக-பொருளாதார நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் விரிவுக்கும் வழியமைத்துக் கொடுத்திருக்கின்றன.

இனக்குழுக்களாக வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் வேளாண்மையில் ஈடுபடும் நிலை ஏற்பட்ட பிறகு, தமிழ் நாட்டு மக்களின் வாழ்வில் பல சமூக-பொருளாதார மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதைப் பண்டைக் கால இலக்கியங்களில் காண முடியும். புதிய மாற்றங்களை ஏற்காமல், பகைவரின் நிலங்களை அழித்து, மறு உற்பத்திக்குப் பயன்

படாமல் ஆக்கிய நிலை மாறி, உற்பத்திப் பொருள்களைக் கொள்ளையிட்டுப் பயன்கொள்ளும் நிலைக்கு வந்து, பின்னர் போரிலும்கூட, பகைவரின் நிலங்களைப் பாதுகாக்கும் கட்டம் உருவானது, உற்பத்திக்குக் கொடுக்கப்பட்ட முதன்மையை உணர்த்துகின்றது.[1] காடுகளாகக் கிடந்த நிலங்கள் பண்படுத்தப்பட்டு, மேலும் மேலும் உற்பத்திக்கான விளைநிலங்கள் உருவாக்கப்பட்டன.

இயற்கையாகக் கிடைத்த நீரினைப் பயன்படுத்திச் செய்த வேளாண்மை முதலில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. உணவு உற்பத்தி செய்யும் முறை வழக்கிற்கு வந்த பிறகு, மக்களின் வாழ்க்கை முறை மாறியதைப் போன்று, உணவுப் பழக்கமும் மாறியது. இதனால் இயற்கையாகக் கிடைத்த நீரிலிருந்து பெறப்பட்ட வேளாண் உற்பத்தி மக்களின் தேவைகளுக்குப் போதுமானதாக இருக்கவில்லை. எனவே, உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டிய தேவை ஏற்பட்டது. அதனால், புதிய விளைநிலங்களை மேலும் மேலும் உருவாக்க வேண்டிய இன்றியமையாத நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டனர்.

இந்த நிலை வேறு ஒரு சிக்கலையும் தன்னகத்தே கொண்டிருந்தது. புதிதாக உற்பத்திக்குக் கொண்டுவரப்பட்ட அல்லது கொண்டுவரப்பட இருந்த விளைநிலங்களுக்குத் தேவையான நீர் வாய்ப்புக்கள் தொடர்ந்து, நிலையாக வேண்டப்பட்டன. இந்த நீர் வாய்ப்புகளுக்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியது முழு முதற்கடமையாயிற்று. அதனால் அடுத்து, ஆறுகள், காட்டாறுகள் போன்றவற்றில் பாய்ந்தோடும் நீர் பயன்படுத்தப்பட்டு வேளாண்மை செய்யப்பட்டது. பின்னர், கிணறு, குளம் போன்றவை வேளாண்மை உற்பத்திக்குப் பெருமளவில் துணைநின்றன. இந்தச் சூழ்நிலையில், தமிழகத்தில் இடைக் காலத்தின் முற்பகுதியில் ஏரி, குளங்கள் அமைப்பது பெருமளவில் நடைபெற்றது. ஏரி, குளங்களின் பெருக்கம் வேளாண் வளர்ச்சியினை உச்சகட்டத்துக்குக் கொண்டு வந்தது.

வேளாண் உற்பத்தியின் தொடக்கம், முன்னரே இனக் குழுத் தலைவர்களைக் குறுநிலத் தலைவர்களாக வளர்ச்சி பெறச் செய்திருந்தது. இந்தக் குறுநிலத் தலைவர்கள், இனக் குழுத் தலைவர்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவர்களாகவே இருந்தனர். வேளாண் உற்பத்தியின் தொடர்ந்த வளர்ச்சி, ஏரி குளங்களைப் பழுதுபார்க்கவும், உற்பத்திப் பொருள்களைப் பாதுகாக்கவும் தனித்தனி அமைப்புகளின் தேவைகளை உருவாக்கின. அதனால், அரசும் அதனையொட்டிய

பிற அமைப்புகளும் புதிய சூழ்நிலையில் வளர்ச்சி பெற்ற சமூக—பொருளாதார நிறுவனங்களாக உருப்பெறத் தொடங்கின.

இந்த நிலையில், தமிழகத்தின் புவியியல் அமைப்பு வேளாண் வளர்ச்சியில் ஏற்படுத்திய தாக்கத்தையும் குறிப்பிட வேண்டும். கி.பி. பத்தாம் நூற்றாண்டு அளவில் தமிழகத்தின் ஒரு பகுதியில் வேளாண் வளர்ச்சியும் அதனையொட்டிய மாற்றங்களும் மக்களின் சமூக-பொருளாதார வாழ்வில் புதிய எல்லைகளை ஏற்படுத்திய நிலையினைக் காண்கிறோம். ஆனால், அதே காலத்தில் தமிழகத்தின் மற்றொரு பகுதியில் வேளாண்மை வளர்ச்சி ஏற்பட வாய்ப்பு இல்லாத நிலையில், அவர்கள் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டிருந்த தொடக்க நிலையே தொடர்ந்தது.

தஞ்சை, திருச்சி, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, செங்கற்பட்டு ஆகிய பகுதிகளில் காவிரி மற்றும் கிளை ஆறுகளின் கொடையாலும் ஏரி, குளங்களின் பயன்களாலும் ஏற்பட்டிருந்த பெரும் வளர்ச்சியினைக் கல்வெட்டுகள் பதிந்திருக்கின்றன. ஆனால், செங்கம், தர்மபுரி போன்ற பாசன வாய்ப்பற்ற பகுதிகளில் கால்நடைகளைக் காத்து நின்ற நடுகல் வீரர்களையே வீரக்கல் பதிவுகள் குறிப்பிடுகின்றன.[2] அதே போன்று, தமிழ் மண்ணில் சமவெளி நில அமைப்பு பரந்துபட்டதாக இருக்கவில்லை. வைகை, தாமிரபரணி போன்ற பிற ஆறுகளின் பாசனப் பகுதிகளில் குறிப்பிடத்தக்க அளவில் சமவெளிகள் அமையவில்லை. தஞ்சை, புதுக்கோட்டை, தென் ஆர்க்காடு கடற்கரை ஓரங்களில் அமைந்த—காவிரியின் பயனைப் பெறும் சிறு பகுதியாகவே தமிழகத்தின் சமவெளி குறுகிக் கிடக்கிறது.

இந்தக் குறுகிய சமவெளிப் பகுதிகளின் விவரங்கள் மட்டுமே தமிழகம் முழுமைக்குமான வரலாறாகக் கொள்ளப் படுகின்ற மயக்கம் இன்றும் தொடர்கிறது. சமவெளிப் பகுதிகளுக்கு அப்பாற்பட்டும் தமிழகம் விரிந்து பரந்து கிடக்கிறது. அதற்கென வேறுவேறான வரலாற்று நிகழ்வுகளும் சான்றுகளுடன் குவிந்திருக்கின்றன. இவையெல்லாம், ஒரு தனித் தன்மையிலேயோ, ஒரு குறிப்பிட்ட போக்கிலேயோ மட்டும் அமைந்திருக்கின்றன என்றும் கூறிவிட முடியாது. இவை முறையாக—முற்றாக வெளிக்கொணரப்பட்டு, தமிழக வரலாறு செழுமைப்படுத்தப்படவேண்டும்—முழுமைப்படுத்தப்படவேண்டும். தமிழகத்தின் பல பகுதிகளுக்கும், வளர்ச்சியின் பல கட்டங்களுக்கும் வரலாறு விரித்து எழுதப்படவேண்டும். அத்துடன், இதுவரை எழுதப்பட்ட வரலாற்று வரைவுகள்கூட, கிடைத்திருக்கின்ற புதிய சான்றுகளைக் கணக்கில் கொண்டும், வெளி

வந்திருக்கின்ற தெளிவான ஆய்வு முடிவுகளை மனத்தில் இருத்தியும் வேறுபட்ட நோக்குகளில்—மாறுபட்ட பார்வைகளில் செப்பமிடப்படவேண்டும். இலக்கியம் மட்டுமன்றி, மொழியியல், தத்துவம், கல்வெட்டியல், அகழ்வாய்வியல், கடலியல், மானிடவியல், சமூகவியல் போன்ற பல துறைகளின் பணியும் பங்கும் ஒருங்கிணைக்கப்பட்டால்தான், தமிழகத்தின் வளர்ச்சிக் கட்டங்களில் நிலவிய வெவ்வேறான உற்பத்தி முறைகளையும் அவற்றோடு மக்கள் கொண்டிருந்த உறவுகளையும் ஆய்ந்தறிந்து, அவற்றுக்கு அடித்தளமான கோட்பாடுகளின் பின்னணியினை விளங்கிக்கொண்டு, பல்வேறான சமூக-பொருளாதார—அரசியல் கட்டமைப்புகளைத் துள்ளியமாகவும் தெளிவாகவும் வரையறுத்து முழுமையான வரலாற்றினை வடித்தெடுக்க முடியும்.[3]

இந்த வகையில், தமிழகத்தின் சமவெளிகளிலும் அதனையொட்டிய பாசனப் பகுதிகளிலும், இடைக்காலத்தில் வேளாண் வளர்ச்சியினால் ஏற்பட்ட சமூக-பொருளாதார மாற்றங்களின் சில கூறுகளை மட்டும் இங்கு ஆராயலாம்.

வேளாண் வளர்ச்சியினால், நாட்டின் பரந்துபட்ட இடங்களில் நில உற்பத்தி ஏற்பட்டது. எங்கெங்கு நீர்ப்பாசன வசதியைப் பெருக்க இயலுமோ அங்கெல்லாம் பாசன வசதிகளை ஏற்படுத்தியும் ஏரி குளங்களை வெட்டியும் நில உற்பத்திக்கான ஏற்பாடுகள் மேலும் முடுக்கிவிடப்பட்டன. குழுக்களாகச் சுற்றித்திரிந்தும் பின்னர் ஓரிடத்தில் குழுமி வாழ்ந்தும் இருந்த குடியினர், "காடு கொன்று நாடாக்கி, குளம் தொட்டு வளம் பெருக்கி"[4] பரந்த நிலப்பகுதிகளில் குடியேறி நில உற்பத்தியில் ஈடுபட்டனர். இத்தகைய நிலங்கள் குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும் குவிந்து கிடக்காமல் பரந்து விரிந்து கிடந்ததால், வேண்டிய இடங்களைத் தேடிச் செல்லும் நிலை ஏற்பட்டது. இது குழுக்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் உண்டாகவும் வழிவகுத்து, குழு வாழ்க்கையின் சமூக-பொருளாதாரக் கட்டமைப்பைக் குலைத்தது. ஆனால், மறுபுறம், மற்றொரு மாற்றமும் நிகழ்ந்துவந்தது. நில உற்பத்தியின் பெருக்கத்தாலும் உற்பத்தியில் கிடைத்த எச்சத்தாலும் மக்களது சமூக-பொருளாதார நிலை உயர்ந்தது. இதனால், நகரத்துக்கு வெளியே ஆங்காங்கே வலிமையும் செல்வமும் செல்வாக்கும் கொண்ட புதிய உயர்குடிகளாக வேளாண் மக்கள் உருவாகி வந்தனர்.

குழுக்களின் சிதைவாலும், உற்பத்தி தந்த பயனாலும், வாழ்க்கை முறையில் ஏற்பட்ட மாற்றங்களால், பயன்படு பொருள்களின் தேவை மிகத் தொடங்கியது. உற்பத்திப்

பொருள்களும் மணிகள், அணிகலன்கள் போன்ற ஒப்பனைப் பொருள்களும் மிகுதியாக வேண்டப்பட்டன. தொடக்கத்தில் தாங்கள் உற்பத்தி செய்த உப்பினைத் தாங்களே வண்டியில் ஏற்றிச் சென்று, வேண்டியோருக்குக் கொடுத்து, அவர்தம் உற்பத்திப் பொருள்களை மாற்றாக—விலையாகக் கொண்டு வந்த உமணர்கள் இருந்தனர். இந்த நிலை மாறியது. உற்பத்தி செய்வோரிடம் பொருள்களைப் பெற்று, பயன் படுத்துவோருக்குக் கைமாற்றும், உற்பத்தியில் எவ்வகையிலும் ஈடுபடாத—பங்களிப்பைச் செலுத்தாத, வணிகர் என்ற புதிய பிரிவினர் தோன்றினர்.

உற்பத்தியில் நேரிடையாக ஈடுபட்டிருந்தோரைவிட இந்த வணிகர் விரைவில் ஏற்றம் பெற்றனர். நாட்டின் வளம், சிறப்பு என யாவும் வேளாண் உற்பத்தியைப் பின்புலமாகக் கொண்டிருந்தாலும், புதிதாக எழுந்த வணிகர் முன்னிடத்தைப் பிடிக்க முயன்றனர். சங்க காலத்தையொட்டிய காலப்பகுதியில் மன்னர்களுக்கு அடுத்த நிலையில் சில வணிகப் பெருங்குடி மக்கள் இருந்தனர் என்று கூறும் அளவில் அவர்கள் செல்வத்துடன் விளங்கினர்.[5] ஆனால், அப்போது புதிதாக வலுப் பெற்று வந்த வேளாண் மக்களோ வளர்ச்சி நிலையிலேயேதான் இருந்தார்கள். முயற்சிகள் தொடர்ந்தாலும், விளைச்சலுக்கு ஏற்ற பெரும்பகுதி நிலங்கள் இன்னும் உற்பத்திக்குக் கொண்டு வரப்படவில்லை. வேளாண் தொழில் நுட்பமும் தொடக்க நிலையிலேயே நீடித்தது. வேளாண் உற்பத்தியோடு தொடர்புள்ளவர்களே ஆட்சித் தலைவர்களாகக் காலூன்றியிருந்த போதிலும், அருகருகே தொடர்ந்த இனக்குழுக்களிடமிருந்தும் குறுநிலத் தலைவர்களிடமிருந்தும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள இடைவிடாது போரிட வேண்டிய சூழலிலும் அவர்கள் இருந்தார்கள். மன்னர்களாக விளங்கியவர்கள் மட்டு மன்றி, வேந்தர் நிலைக்கு உயர்ந்தவர்களான சேர, சோழ, பாண்டியர்கள்கூட, அவ்வப்போது முரண்பட்ட இனக்குழு மற்றும் குறுநிலத் தலைவர்களைப் படைகொண்டு அடக்கி நின்றதைச் சங்கப் பாடல்கள் காட்டுகின்றன.[6] தங்களைக் காத்துக்கொள்வதோடு, புதிய நிலப்பரப்புகளை இணைத்துக் கொள்ளவும், நீர் வாய்ப்புகளைத் தன்னகப்படுத்திக்கொள்ளவும் போர் முனைப்புகள் வேண்டப்பட்டிருக்கலாம். அதோடு, புதிதாக எழுந்த வேந்தர்கள், தொல்குடியினரான சிறு வேளாண் தலைவர்களின் நிலங்களையும் தங்கள் பிடிக்குள் கொண்டுவர, 'மகட்கொடை' கேட்டு நின்றனர்.[7] மாறுதல்கள் நடந்துகொண்டிருந்தனவேயன்றி, அவை முழுமையாக நிலைப்படவில்லை. இந்தப் பின்னணியில், வேளாண் மக்கள்,

தங்களை அப்போது முற்றாக வலுப்படுத்தி, நிலைப்படுத்திக் கொண்டிருக்கவில்லை என்றே தோன்றுகிறது. ஆனால், அனைத்துப் பிரிவினருக்குமான பொருள்களைக் கைமாற்றிக் கொடுக்கின்ற பணியினைச் செய்து வந்த வணிகர்களுக்கு இத் தகைய நேரடிச் சிக்கல்கள் இருக்கவில்லை.

இயற்கை வளமும் குடிச்சிறப்பும் கொண்டு, கொடை, உயர்ந்தோரை ஏற்றுதல் போன்ற மாண்புகளையும் பிற பண்பு நலன்களையும் பெற்றிருந்தாலும், வேளாண் மக்கள் மருத நிலத்தில் தமது உழைப்பைச் செலுத்தி, எளிய வாழ்வே வாழ்ந் தனர்.[8] அவர்கள் களியாட்டத்தில் மூழ்கித் திளைத்தோ ராகவோ நுகரின்பத்தில் ஈடுபட்டுக் கிடந்தோராகவோ, ஆடம்பர வாழ்வில் நாட்டம் கொண்டோராகவோ, ஆடை-அணிகலன் போன்ற ஒப்பனைப் பொருள்களை வாங்கிக் குவித்தோராகவோ சங்க இலக்கியங்களில் காணப்பெற வில்லை.

ஆனால், வணிகர்தம் வாழ்க்கை நிலை செல்வ வளம்மிக்க தாயிருந்தது. "தொல் கொண்டித் துவன்றிருக்கை"[9] என்று வணிகரின் பழையதாகிய கொள்ளையினையும் நெருங்கிய குடி யிருப்பினையும் பட்டினப்பாலை சுட்டுகிறது. இதற்கு உரை யெழுதிய நச்சினார்க்கினியர் "கொள்ளையென்றார், இந் நெறியை நடத்தினாரிடத்தல்லது பொருட்திரள் உண்டாகா தென்றற்கு" என்று வணிகக் கொள்ளையை வரவேற்கிறார்.[10] மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை, சற்றுப் பின்னர் தோன்றிய சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்களில் வணிகர் அறிமுகப் படுத்தப்பெறும் திறமே இவற்றைக் கூறுகின்றன.[11] வணிகர் கள் வாழ்ந்த மாளிகைகள், "வான் தோய் மாடங்"களையும்[12] "வானம் மூழ்கி சில்காற்று இசைக்கும் பல்புழை நல் இல்"லங் களையும்[13] அகன்ற முற்றங்களையும்[14] கொண்டிருந்ததால், அதற்கேற்பக் காவல் பணியாளர்களும் இருந்தனர்.[15] வான வண்கை வளம்கெழு செல்வராக, செல்வச் செழிப்போடு வாழ்ந்த வணிகர்தம் இருப்பிடங்கள் வளமனைகளாகவே இருந்தன.[16] நகரத்து மக்கள் திளைத்து வாழ்ந்தமையும் விரி வாகக் காட்டப்பட்டிருக்கின்றன.[17] ஆயினும், வேளாண் மக்களின் மனைகளோ, தென்னை ஓலைகளால் வேயப்பட்ட குடில்களாகவே விளங்கின.[18]

ஆனால், அடுத்த கட்டத்தைச் சார்ந்த பல்லவர், சோழர் காலக் கல்வெட்டுகள் வேறு வகையான காட்சி களைக் காட்டுகின்றன. அவை வேளாண் வளர்ச்சியையும் வேளாண் வளர்ச்சிக்காக ஏரி, குளங்கள் வெட்டப்பட்டதையும் உள்ளாட்சி அமைப்புகளின் பணிகளையும் கோயில் ஒரு

பெரும் நிறுவனமாக வளர்ந்தோங்கியதையும் நில உற்பத்தி பெருகி, நிலவுரிமை அமைப்பு முறை வலுவுடன் நிலைப்படுத்தப் பட்டதையும் விரிவாக எடுத்துரைக்கின்றன. இந்த மாற்றத்தின் பயனாக, கி. பி. ஐந்தாம் நூற்றாண்டுக்குப் பிறகு பல்லவர்-சோழர் காலப் பகுதியில் வேளாண் மக்கள் உயர் குடியாக—செல்வக் குடியாக—பெருங்குடியாக வளர்ச்சி பெற்றனர்.

இவ்வாறு வளர்ச்சியும் வலிமையும் பெற்ற வேளாண் குடியினர் ஓரிடத்தில் சேர்ந்து வாழ முடியவில்லை. பண்டைய எட்டுத்தொகை, பத்துப்பாட்டு போன்றவற்றிலும், அடுத்த கட்டத்தைச் சார்ந்த சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற வற்றிலும் காணக்கிடைக்கின்றவாறு காவிரிப்பூம்பட்டினம், மதுரை போன்ற நகரங்களில் வணிகர் பெருங்குடியினர் பல ராக இருந்ததுபோல, ஓரிடத்தில் வேளாண் குடியினர் மிகப்பல ராகக் குவிந்துகிடக்க இயலவில்லை. வணிக மையங்களாக மாறியிருந்த தலைநகரங்களிலும் துறைமுகப்பட்டினங்களி லும் வணிகர்கள் ஒன்றாகக் குழுமியிருந்து தொழிலாற்றி யதைப் போன்று, வேளாண் மக்களுடைய உற்பத்தி முறை மையப்படுத்தப்பட்டதல்ல. அதனால்தான், சங்க காலத்தை அடுத்து வேளாண் உற்பத்தி பெருகிய பின்னர் காவிரிப்பூம் பட்டினம், மதுரை ஆகியவற்றையொத்த பெரும் நகரங்கள் எதுவும் உருப்பெறவில்லை.[19] இந்நிலையில், நிலமும் நீரும் உள்ள வேறுவேறான பல இடங்களிலும் வேளாண் மக்கள் பரந்து கிடந்தார்கள். ஆனால், இவ்வாறு பரவியிருந்தபோதி லும், புதிய செல்வக்குடியாக—உயர்குடியாக உருப்பெற்றிருந்த வேளாளர்கள்—நிலவுடைமையாளர்கள், தங்கள் இருப்பிடங் களிலேயே வேளாண் உற்பத்தி வளர்ச்சியின் உறுபயனால் ஏற்பட்ட வளத்தின் பயன் முழுமையையும் பெற விழைந்தார் கள். வளம் நிறைந்து வாழ்ந்த இவர்கள், தங்கள் வலிமைக்கும் வளத்துக்கும் ஏற்ப அனைத்து வசதிகளையும் வாய்ப்புகளையும் தாங்கள் வாழுகின்ற இடத்துக்குக் கொண்டுவரவும் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ளவும் முற்பட்டார்கள். இதன் எதிரொலிதான் கோயில் என்னும் பன்முகத்தன்மை கொண்ட அமைப்பு எழுந்து நிற்க அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தது எனலாம்.

இதன் சமூக-பொருளாதார விளைவுகளைப் பல முனை களில் காணமுடியும். புதிய பெருங்குடியாக வளர்ந்து, செல்வச் செழிப்புப் பெற்ற இந்த வேளாளர் குடியினர், அன்று மனித இனம் பெற்றிருந்த அனைத்துச் சமூகச் செல்வங்களையும் தாங்கள் வாழ்கின்ற இடத்துக்குக் கொண்டு வந்தனர். கல்வி, கலை, மருத்துவம், அறிவியல், தொழில் நுட்பம் போன்ற,

அன்று சமூகம் பெற்றிருந்த பயன் யாவற்றையும் அப்படியே எடுத்துவந்து பயன் கொள்ளக் கோயில் என்ற அமைப்பு உறுதுணையாக நின்றது. இன்னும் துல்லியமாகக் கூற வேண்டுமெனில், கல்வி, கலை, மருத்துவம், அறிவியல், தொழில் நுட்பம் போன்ற பல்துறை வளர்ச்சிக்கும் ஏற்றத்துக்கும் சிறப்புக்கும் பெருமைக்கும், வேளாண் வளர்ச்சியும் வளமும் கோயில் என்ற நிறுவனமுமே துணையாக—தூண்டுதலாக இருந்து, இவற்றையெல்லாம் காக்கும் களமாகவும் அமைந்தன எனலாம்.

அத்துடன், வேளாண் வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்களுக்கேற்பச் சமூக-பொருளாதார நடவடிக்கைகளையும் கோயில் தன்னகத்தே இணைத்துக் கொண்டது. கடன் தரும் வங்கியாக, இலக்கியங்களைப் போற்றும் நூலகமாக, கலைகளை ஏற்றும் காட்சிசாலையாக, நில உரிமைபெற்ற நிறுவனமாக, பொருள்களைப் பாதுகாக்கும் கிடங்காக, இன்னும் பல பணிகளை மேற்கொள்ளும் அமைப்பாக அது தன்னை உருவாக்கிக்கொண்டது.

இதில் குறிப்பிடத்தக்க ஒன்று கலை வளர்ச்சியாகும். தொடக்கத்தில், இனக்குழு வாழ்க்கையின் இணைந்த முயற்சிகளின் வெளிப்பாடாக அமைந்த கூட்டு நடன முறையில், குழு உறுப்பினர்கள் அனைவரும் பங்கு கொண்டனர். இனக்குழுத் தலைவனும், குழுவில் ஓர் உறுப்பினன் என்ற வகையில் இந்தக் கூட்டு நடனங்களில் பங்கு கொண்டான்.[20] இதில் ஆண்களும் பெண்களும் இணைந்து ஆடினர். அடுத்து, இனக்குழுத் தலைவர்கள், அரசர்களாக—மன்னர்களாக உயர்ந்த பின்னர், அவர்கள் மக்களில் மேம்பட்டவர்களாகக் கொள்ளப்பட்டனர். அவர்கள் குழு நடனங்களைப் பார்வையிட்டு மகிழ்வோராக—போற்றுவோராக—பரிசளிப்போராக இருந்தனரேயன்றி, குழு நடனங்களில் எவ்வகையிலும் பங்கு பெறவில்லை. உணவு உற்பத்தி நிலை தோன்றியிருந்த இக்காலகட்டத்தில், மக்கள் அனைவரும் பங்குகொள்ளும் கலைப் போக்குகள் ஒரு புறம் தொடர்ந்தாலும், தனிக் கலைக்குழுக்கள் பல தோன்றின. பாணர், விறலியர், கூத்தர் போன்ற தொழில் முறைக் கலைக் குழுக்கள், இனக்குழு வாழ்க்கை முறையின் முறிவில் எழுந்து, கூட்டு நடன முறையில் மாறுதல்களை ஏற்படுத்தின. இருந்தாலும், தொழில் முறைக் கலைஞர்கள் பலராகப் பங்கு பெறும் குழு நடன முறையே தொடர்ந்து நீடித்தது. ஆனால், அடுத்த கட்டத்தில் ஏற்பட்ட நில உற்பத்தி வளர்ச்சியின் விளைவுகளால் தோன்றிய தனியுடைமையின் தாக்கத்தால், தனி ஒருவர் நிகழ்த்தும் கலைப்பான்மைகள் அறிமுகமாயின. அப்போது

தொழில் முறை நடனக் குழுக்கள் தமது சிறப்பையும் செல்வாக்கையும் இழந்தன. அத்துடன், தனி மனிதத்திறமைகளை—உணர்வுகளை வெளிப்படுத்தும் புதிய போக்குகள் உயர்நிலைக் கலைகளாகவும் வளர்ச்சி பெற்றன.[21] மேலும் மன்னர், செல்வக் குடிகளாக இருந்த வணிகர்—வேளாளர் போன்றோருக்கான தனித்தன்மை கொண்ட கலையாக 'வேத்தியல்' என்ற பெயரில் அவை சிறப்பிடம் பெற்றன. இருப்பினும், வேறு கலைப் போக்குகளும் மற்றொரு புறம் 'பொதுவிய'லாகத் தொடர்ந்துகொண்டிருந்தன.

காலப்போக்கில் செல்வக் குடிகளாக—உயர் குடிகளாக மேன்மை பெற்ற நிலவுடைமையாளர்கள் தங்களோடு, தங்களைச் சார்ந்தோரும் காணக்கூடிய கலையாக வேத்தியலைக் கோயில்களுக்குக் கொண்டு வந்தனர். வேத்தியல், தனது தன்மைகளில் சில மாறுதல்களுக்கு உட்பட்டு, பொதுவியலின் பண்புகளையும் பெற்றிருக்கவேண்டும். தஞ்சைக் கோயிலில் இருந்த 400 நடன மகளிரும் தனி மனித உணர்வுகளை வெளிப்படுத்தக்கூடியவர்களாக மட்டுமே இருந்திருக்க முடியாது. பொதுவியலின் பண்புகளான குழு நடன முறைகளும் இதில் இணைக்கப்பட்டிருக்கவேண்டும். தஞ்சைக் கோயில் திருவிழாக்களின்போது 'ராஜராஜேஸ்வர நாடகம்' என்ற நாடகத்தினை நடத்துதற்காகக் கொடைகள் வழங்கப்பட்டிருந்ததைக் கல்வெட்டுகள் குறிப்பிடுவதும் நோக்கத்தக்கது.[22]

இவ்வாறு, வேத்தியல், பொதுவியல் என்று சிலப்பதிகார காலத்தில்[23] தனித்தனியாகப் பிரிந்து நின்ற கலை, இடைக்காலத்தில் கோயில் என்ற அமைப்பில் இணைந்து நின்றதைக் காண்கிறோம். மன்னர்களும் பெரு வணிகர்களும் மட்டும் காணுகின்ற கலையாகச் சிலப்பதிகாரத்தில் காட்டப்படுகின்ற வேத்தியல், இங்கு வேளாண் குடியினரும் அவர்களைச் சார்ந்தோரும் கோயிலில் எளிதில் காணக்கூடிய கலையானது. மன்னனுடைய அவையில் மட்டுமே ஆடக்கூடிய உயர்நிலை நடனங்கள், சற்று மாறுதல்களுடன்தான் கோயில்களில் அறிமுகப்படுத்தப்பட்டன என்று கூறப்பட்டாலும்,[24] நடனக் கலையில் பயிற்சியும் வல்லமையும் பெற்ற நடன மகளிர், கோயில்களில் தங்களது கலைத் திறனைக் காட்டக்கூடிய நிலை ஏற்பட்டதை வேறு வகையாகக் குறைத்துக் கூறிவிட முடியாது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் தஞ்சை, கும்பகோணம், சிதம்பரம், திருவண்ணாமலை, விருத்தாசலம் போன்ற கோயில்களிலும்[25] காஞ்சி (கைலாசநாதர்), திருபுவனம், தாராசுரம் போன்ற கோயில்களிலும் வெவ்வேறான நடனத் தோற்றங்களைக் கொண்ட பல நுணுக்கமான

கலைச் சிற்பங்கள் அமைந்திருக்கின்ற நிலை குறிப்பிடத்தக்கது. மேலும், நாடெங்கும் பரவிக்கிடந்த பல்வேறு கோயில்களில், நடன மகளிரும் பிற கலைஞர்களும் குடிப்படுத்தப்பட்ட செய்திகளை விரிவாகக் கல்வெட்டுகள் காட்டுகின்றன. பின்னர், சோழப் பேரரசு உருவாகி, முதலாம் ராசராசன் தஞ்சைப் பெரிய கோயிலை அமைத்தபோது, மீண்டும் இந்தக் கலைஞர்களில் சிறப்புப் பெற்றோரைப் பல்வேறு ஊர்களிலிருந்து அழைத்து வந்து தலைநகரில் அமர்த்தியதையும் காண்கிறோம். நில உரிமையாளர் உள்ளிட்ட, கோயில்களுக்குள் செல்லக்கூடிய அனைத்துப் பிரிவு மக்கள் மட்டுமே காணக்கூடியதாக—கண்டு பேணக்கூடியதாக உயர்நிலை நடனக் கலை இருந்தது என்பதைத்தான் இவை வெளிப்படுத்துகின்றன. இத்தகைய நடனங்களை ஏற்கின்ற அளவில் இந்த மக்களது நுகர்வுத்தரம் உயர்ந்திருந்ததையும் நாம் குறிப்பிட்டாகவேண்டும்.

மன்னர்களும் உயர்ந்தோரும் மட்டும் காணக்கூடிய நிலையிலிருந்த வேத்தியல் அத்தகைய தனித்தன்மையை இழந்தது. அதோடு, பொதுவியலும் மன்னர்களாலும் உயர்ந்தோராலும் கொடையளித்துப் பேணக்கூடியதாக மீண்டும் உயர்வு பெற்றது. நில உரிமை முறையில் தனியுடைமை மிகுந்து வந்த நிலையும் இத்தகைய நிலங்களின் உற்பத்திக்குப் பல்வேறு பிரிவு மக்களின் பங்கும் பணியும் வேண்டப்பட்டதும், தனி மனித உணர்வுகளை வெளிப்படுத்தும் வேத்தியலும் குழுத் தன்மைகளை எதிரொலித்த பொதுவியலும் கலப்பதற்கு அடிப்படைகளாயமைந்தன. இரண்டு போக்குகளும் தத்தமது தனித் தன்மைகள் சிலவற்றைத் தொடர்ந்து பேணி வந்தாலும், தனித்தனிப் பிரிவினருக்கான வேறுவேறு கலைகளாக அவை நீடிக்காமல், பெரும்பான்மை மக்களுக்கான இரு வேறு கலை வடிவங்களாக நிலை பெற்றன.

ஆங்காங்கிருந்த கோயில்கள் தமது பன்முகத்தன்மையைத் தொடர்ந்துகொண்டிருந்த நிலையில், பொருளாதார வளர்ச்சியின் உயர்நிலைக்குக் கலை வளர்ச்சியை அளவுகோலாக எடுத்துக் கொண்டால், அன்றைய தமிழகத்தின் உபரிப் பொருளாதாரத்திற்கு, கோயிலும் அதன் கலை வளர்ச்சியும் மாபெரும் சான்றாக நிற்கின்றன. ஆனால், சமூகத்தின் கீழ்நிலையில் வைக்கப்பட்டிருந்தவர்களும் நில உற்பத்தி வளர்ச்சிப் பகுதிகளுக்கு வெளியே வாழ்ந்தவர்களும் தங்களுக்கெனத் தனிக் கலை வடிவங்களைக் கொண்டிருந்தனர். வளர்ச்சி பெற்ற கோயில்களையொட்டி எழுந்த நிலவுடைமை சார்ந்த கலைப் போக்குகள் இவர்களுக்கு இயைபில்லாதனவாகவும் எட்டாதனவாகவுமே இருந்ததில் வியப்பில்லை. இவர்கள், தங்கள் மன

உணர்வுகளைக் காட்டக் கூடியதான கலை வெளிப்பாடுகளைத் தங்களுக்கேயுரிய தனித் தன்மைகளோடு தொடர்ந்து வந்தார்கள். சங்க காலத்திலும் நில உற்பத்தி வளர்ச்சிக் கட்டத்தின் தொடக்கத்திலும் போற்றிப் பாடப்பட்டவாறு, பின்னர் இத் தகைய கலைகள் சிறப்பிக்கப்படவில்லை. இடைக் காலத்தில் இக்கலை வடிவங்களைப் பற்றிய விவரமான குறிப்புகளும் இல்லை. நிலவுடைமை அமைப்பின் பதிவுகளான கல்வெட்டுகளும் அதையொட்டிய இலக்கியங்களும் அதைச் சார்ந்தே வாழக் கற்றுக்கொண்டிருந்த புலவர்களும் இக் கலைக்கூறுகளை முழுமையாக மறைத்துவிட்டது இயல்பானதே. பிற் காலத்தில், இவையே நாட்டார் கலைகளாக அறியப்பட்டனவாகும்.[26]

வணிகர்கள் தங்கள் விற்பனைப் பொருள்களை மக்களிடம் விற்பதிலும் ஏற்றுமதி செய்வதிலும் ஈடுபட்டிருந்த நிலையில், அவர்களிடம் விற்பனைக்காக இருந்த பொருள்களை உற்பத்தி செய்து தந்த கைவினைஞர்கள் சிலராக இருந்தனர். ஆனால், வேளாண் தொழிலில் ஈடுபட்டிருந்த பெருங்குடியினருக்குப் பலருடைய ஒத்துழைப்பும் உதவியும் தேவைப்பட்டது. விவசாயத் தொழிலாளர்களில் இருந்து உற்பத்திக் கருவிகளை உருவாக்கித் தருகின்ற தச்சர், கொல்லர் வரை அனைவருடைய பங்கும் பணியும் வேளாண் தொழிலுக்குத் தேவையானதாக இருந்தது. எனவே, வேளாண் தொழில் வளர்ச்சிக்கு அடிப் படையான பணிப் பகிர்வுகளால் ஏற்பட்ட—அடுத்து முறைப் படுத்தப்பட்ட—பின்னர் பிளவுபடுத்தப்பட்ட சாதிப்பிரிவுகள் யாவற்றின் துணையும் வேளாண் உற்பத்திக்கும், அதனால் பெறப்பட்ட வாழ்க்கை முறைகளைக் காத்துக்கொள்ளவும் தொடர்ந்து தேவைப்பட்டது.

இதனால், இவர்களை இயைபுடன் இணைத்து ஒற்றுமையுடன் பணியைப் பெறக் கூடிய ஒரு தத்துவமும் வேண்டப் பட்டது. இதற்குச் சைவமும் வைணவமும் துணைநின்றன, மக்களுக்கு வேண்டிய உரிமைகளைத் தராது, மண்ணக வாழ்வின் சமூக-பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை நிலைப்படுத்தி, விண்ணக வாழ்வின் உயர் நிலையினை வலியுறுத்துவதில் சைவமும் வைணவமும் வெற்றி பெற்றன.[27] பொருளாதார வளமையும் அதற்குத் துணையான தத்துவமும் இணைந்து கோயில் என்ற மாபெரும் அமைப்பின்வழி இதனை நடைமுறைப் படுத்தத் துணை நின்றன. இது வேளாண் வளர்ச்சியின் ஒரு பகுதியேயாகும்.

நிலத்தில் கிடைத்த உற்பத்தியின் உபரி, வணிகத்தையும், அதனால் ஏற்பட்ட வருவாய், பயன்படு நுகர் பொருள்களின்

தேவையை மிகுவித்ததால் கைவினைத் தொழில்களையும் உரு வாக்கின. இந்தப் பொருளாதார உயர்நிலையின் விளைவாக வணிகம் மேலும் வளர்ச்சி பெற்றது. வணிகம் இரண்டு முனை களிலும் பெருக வேளாண்மை வளர்ச்சியின் உபரி துணை நின்றது. ஒன்று, வேளாண்மை உற்பத்திப் பொருள்கள் உள்ளூரில் பயன்படுத்தப்பட்டது போக எஞ்சியிருந்தவை அங்காடிக்குச் சென்றிருக்கவேண்டும். அதே போன்று இந்த வேளாண் பொருள் விற்பனையில் கிடைத்த மிகு வருவாயின் ஒரு பகுதி, பயன்படு நுகர் பொருள்களை அங்காடியிலிருந்து வாங்கவும் செலவிடப்பட்டிருக்கலாம். இந்த நிலை முற்றிலு மாக வேளாண் மக்களைச் சார்ந்திருக்கக் கூடியதாக வணி கத்தை மாற்றிவிட்டது.

வணிகர் பலர் நிலவுடைமையாளர்களாக இருந்தமைக்குப் பல கல்வெட்டுச் சான்றுகள் கிடைத்திருக்கின்றன. மூன்றாம் குலோத்துங்கனுடைய 24ஆம் ஆட்சியாண்டு உய்யக்கொண் டான் கல்வெட்டு தரும் விவரங்கள் இதை உறுதிப்படுத்து கின்றன. ஒரு வணிகர் பல ஊர்களில் பெரும் பரப்புள்ள நிலங்களை விலைக்கு வாங்கி, புதிய நகரம் ஒன்றை அமைத்து, அதில் இருபத்தைந்து வேலியினைத் தான் வைத்துக்கொண்டு, வெளியூர்களைச் சார்ந்த பல வணிகர்களை அழைத்து வந்து அவர்களுக்கும் நிலங்களை வழங்கினார். அந்த வணிகர் கள் விளைநிலத்திலிருந்து 23,000 கலம் நெல்லும் 1,000 காசும் வரியாகச் செலுத்தவேண்டும் என்றும் குறிக்கப்படு கின்றது.[28] ராசேந்திர சிங்கபுரம் வணிகர்களிடமிருந்து முப்பத்தைந்து வேலி நிலத்தை ஒரு நாட்டியக்காரி விலைக்கு வாங்கிக் கொடையளித்திருக்கிறார்.[29] இதன்றி, வணிகர்கள் பல பணிகளுக்காக நிலக்கொடை வழங்கியதையும் காண லாம்.[30] நிலத்திற்கு நீர் தரும் ஏரியின் பழுது பார்க்கும் பொறுப்பையும் வணிகர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள்.[31] இவ்வாறு நிலம் வாங்குதல், விற்றல், நிலக்கொடை, ஏரி பழுது பார்த்தல் என நிலத்தோடு தொடர்புகொண்டிருந்த வணிகர் களின் நிலையைப் பல கல்வெட்டுக்கள் பதிந்திருக்கின்றன. வணிகர் ஒருவர் 'பட்டணம் கிழான்' என்றே அழைக்கப் பட்டிருப்பதும் வணிக நிலவுடைமையாளர் இருந்ததை உறுதிப் படுத்துகின்றது.[32] வணிகத்தைவிட வேளாண் உற்பத்தி, மிகுந்த வருவாய் தருவதாக மாறியிருந்த நிலையையே இது காட்டுகிறது எனலாம்.

அன்று செல்வமும் செல்வாக்கும் கொண்ட பகுதியாக இருந்த நிலவுடைமையாளர்களில் ஒருவராக இருக்கவே பொரு ளாதார வளம் நிறைந்த வணிகர்கள் விழைந்தனர்.[33] மறைந்த

தமிழ்ப் பேரறிஞர் கலாநிதி க. கைலாசபதி அவர்கள், மாறிய சூழ்நிலைக்கு ஏற்ப வணிகர்களில் பெரும் பகுதியினர் சைவராக மாறினர் என்று குறிப்பிடுவது நோக்கத்தக்கது.[34] தமிழ்நாடு முழுதும் வணிகம் செய்யும் வாய்ப்பைப் பெறவே வணிகர்கள் சைவத்தினை ஏற்றனர் என்று இதை வேறு வகையாக ஆய்வுப் பேரறிஞர் பேராசிரியர் நா. வானமாமலை அவர்கள் கூறுவர்.[35] நிலவுடைமை அமைப்பின் சமயமாக இருந்த சைவத்திற்கு வணிகர்கள் மாறியதற்குப் பின்னணியாக, அவர்கள் நில உரிமை கொண்டவர்களாக அன்று மாறியிருந்த அடிப்படை நிலையையும் இங்கு நாம் மறந்துவிட முடியாது. அவர்கள் வணிகர் என்ற நிலையிலிருந்து சைவராக மாறினர் என்பதை விட, நிலவுடைமையாளர்களாக மாறியிருந்த தன்மையினா லேயே சைவத்தைத் தழுவினர் என்று கொள்வது பொருத்த மாக அமைகிறது.

இத்தகைய நிலவுடைமையாளர்களுக்கும் நில உரிமை கொண்ட வணிகர்களுக்கும் அடங்கியவர்களாகவே பிற சிறு வணிகர் இருந்தனர்.[36] ஆகையால், வணிகத்தில் தனிமுழு உரிமைகொண்டு அங்காடியைக் கட்டுப்படுத்துகின்ற நிலையில் எந்த வணிகரும் இருக்க முடியவில்லை.[37] ஆனால், கைவினைஞர் கள், நிலவுடைமையாளர்களின் முழுமையான கட்டுப்பாட்டி லேயே இருக்கவேண்டிய நிலை தொடர்ந்தது. தொழில் முறை யிலான கட்டுப்பாடுகள், சமூகக் கட்டுப்பாடுகளாக மாற்றி யமைக்கப்பட்டு நிலைப்படுத்தப்பட்டன.

இந்த நிலையை எதிர்த்து அவ்வப்போது உரிமை வேண்டி நடந்த போராட்டங்களையும் கல்வெட்டுகளில் நாம் காண முடியும். நெசவுத்தொழில் செய்வோர், எண்ணெய் ஆட்டு வோர், அணிகலன் செய்வோர், மட்பாண்டம் செய்வோர் எனப் பயன்படு பொருள்களை உற்பத்தி செய்து அளித்த யாவரும் வணிகர்களை விடவும் நிலவுடைமையாளர்களை விடவும் குறைந்த வருவாய் பெற்றவர்களாகவே இருந்தனர். இவர்களில் சிலர் தங்களுக்குள் ஏற்படுத்திக்கொண்ட அமைப்பு கள்கூட, சில பொது வேண்டுகோள்களை விடுப்பதாகவோ, சில மனித உரிமைகளைக் கேட்பதாகவோ அல்லது கோயிலில் விளக்கெரித்தல் போன்ற சமூகப் பணி தொடர்பானவை யாகவோ மட்டுமே இருந்தன. கைவினைஞர்கள் அவர்தம் தொழில் அடிப்படையில் சாதிகளாக்கப்பட்டிருந்தார்கள். அதாவது, சாதிகள் செய்தொழில் அடிப்படையில் பிரிக்கப் பட்டிருந்தன. எனவே, ஒரு குறிப்பிட்ட தொழிலைச் செய்தவர் கள் ஒன்றுபட்டு நின்று, சில உரிமைகள் கேட்டதை, தொழில் அடிப்படையிலான உரிமைகள் என்று கொண்டுவிடக்

கூடாது. குறிப்பிட்ட தொழிலைச் செய்கின்றவர்களாக இருந்த சாதியினர், தமக்கெனச் சில சமூகச் சலுகைகள் கேட்டதாகவே இவை அமைகின்றன. இப்படிக் கேட்கப்பட்ட சலுகைகள் எதுவும் தொழில் சார்ந்த சலுகைகளாக இருக்கவேயில்லை. தொழில் நுட்பம், பொருள் உற்பத்தி தொடர்பான முடிவுகளை மேற்கொள்கின்ற அமைப்புகளாக இந்தச் சாதி அமைப்புகள் உருப்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். எனவே, உற்பத்தி முறை, வழக்கமான, புதிய தொழில் நுட்பங்கள் புகுத்தப்படாத, தனித்தனியான ஒன்றாகவே நீடித்தது.

பொருள் உற்பத்தியில் ஈடுபட்டிருந்தவர்களின் சமூக அல்லது சாதி அமைப்புகளைச் சிலர் ஐரோப்பிய நாடுகளின் 'கில்டு'களுடன் ஒப்பிடுகின்றனர்.[38] ஆனால் ஐரோப்பிய முறை 'கில்டு'களுக்கு இணையான ஓர் அமைப்பு இங்கு உருப்பெறவில்லை என்பதே உண்மையாகும். ஐரோப்பிய நாடுகளின் 'கில்டு'கள் பெரும்பாலும் உற்பத்தி நிறுவனங்களாக, உற்பத்திக்கு வழிகாட்டுகின்ற முறையில் முறைப்படுத்தப்பட்டு, வரையறுக்கப்பட்ட சட்ட திட்டங்களுடன், ஒழுங்குபடுத்தப்பட்ட நிர்வாகத்தின்கீழ், கட்டுப்பாடுகள் கொண்ட அமைப்புகளாக இயங்கி வந்தன. ஆனால், அத்தகையதொரு வரையறுக்கப்பட்ட, ஒழுங்குபடுத்தப்பட்ட, உற்பத்திக்கு வழிகாட்டுகின்ற நிறுவனங்களாக, தமிழகத்தின் சாதி அமைப்புகள் உருப்பெறவில்லை. அவை சாதி அமைப்புகளாகவே தொடர்ந்தன. ஒரு கூரையின் கீழ் பலர் கூடி இணைந்து பணியாற்றிய குழு உற்பத்தி முறையும் இங்கு நடைமுறைக்கு வரவில்லை. மாறாகத் தமிழ்நாட்டில், கைவினைஞர்கள், செய் தொழிலடிப்படையிலான சாதிகளாகப் பிரிந்து, கிராமங்களில் தனிமைப்படுத்தப்பட்டுக்கிடந்தார்கள். அத்துடன், ஐரோப்பாவில் இருந்த 'கில்டு'கள் உற்பத்திக்கு உதவுகின்ற கருவிகளை மட்டுமல்லாது கைராட்டினம், துணி நெய்வதற்கான ஆலை எந்திரம் போன்ற தொழில் எந்திரங்களையும்கூட உருவாக்கின.[39] அவை அங்காடி விற்பனைக்கும் அனுப்பப்பட்டன. ஆனால், தமிழகத்தில் வேளாண் உற்பத்திக் கருவிகளை உருவாக்கியவர்கள், வேளாண் தொழிலுக்கு வேண்டப்பட்ட கருவிகளை மட்டும் வழக்கமான முறைகளில் செய்து, தமது கிராமத்தில் உள்ளவர்களுக்கு மட்டுமே கொடுத்துக்கொண்டிருந்தார்களேயன்றி, அவற்றை அங்காடி விற்பனைக்காக உருவாக்கவுமில்லை, அனுப்பவுமில்லை. அதாவது, கைவினைஞர்களுக்கும் அங்காடிகளுக்கும் நேரடியான தொடர்பு இங்கு ஏற்படாமலேயேபோய் விட்டது. இந்த வேறுபாடுகள் மிக மிக அடிப்படையானவை.

பண்டைக் காலத்திலேயே வேளாண் தொழிலோடு தொடர்புடைய கருவிகளும் வேறுவகையான சில உற்பத்திக் கருவிகளும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. குறிப்பாக கரும்பில் சாறு பிழியும் எந்திரம் பற்றிய குறிப்புகளைப் பல பாடல்கள் காட்டுகின்றன.[40] அத்துடன் சங்கினை அறுத்து வளையல் செய்தல், மணிகளைத் துளையிடுதல், பொன் அணிகலன் செய்தல், புடவை நெய்தல் எனப் பல தொழில்களில் ஈடுபட்டிருந்தோர் பல்வேறு கருவிகளைப் பயன்படுத்தியுள்ளனர்.[41] இதன்றித் தச்சர், கொல்லர் மற்றும் குயவர் குறித்த குறிப்புகள் மிகுதியாகவே உள்ளன.[42] மேலும், போரில் பயன்படுத்தப் பட்ட எந்திரங்களும் குறிக்கப்பெறுகின்றன.[43] போர் எந்திரங்கள் விற்பனைப் பொருளாக அன்று இருந்திருக்காது என்பதால் அவற்றை விட்டுவிட்டால், உற்பத்திக் கருவிகளாக அன்று பயன்பட்ட வேறு எதுவும் அன்றைய அங்காடிகளில் விற்பனைப் பொருளாக இருக்கவில்லை. மதுரை நகரில் இருந்த அங்காடிகளையும் அங்கு விற்கப்பட்ட பொருள்களையும் விரிவாக எடுத்துக்கூறும் மதுரைக்காஞ்சியிலும் இதுபற்றிய விவரங்கள் இல்லை. "மலையவும் நிலத்தவும் நீரவும் பிறவும், பல்வேறு திருமணி முத்தமொடு பொன்கொண்டு, சிறந்த தேஎத்துப் பண்ணியம் பகர்நரும்" வணிகர் நிலைதான் காட்டப் பெறுகின்றது.[44] முத்து, வளையல், சுவையூட்டப்பட்ட புளி, வெள்ளுப்பு, உப்பிட்டு உளர்த்தப்பட்ட மீன் போன்றன பிற நாடுகளுக்குச் செல்வனவாகவும் குதிரை போன்றன வருவனவாகவும் அமைகின்றன.[45] பட்டினப்பாலையிலும் குதிரை, மிளகு, வடமலைப் பிறந்த மணியும் பொன்னும், சந்தனம், அகில், முத்து, பவளம், கங்கையாற்றுப் பொருள்கள், காவிரியின் பயன், ஈழத்து உணவு, கடாரத்துப் பொருள்கள் போன்றனவே வணிகப் பொருள்களாகச் சுட்டப்படுகின்றன.[46] இந்நிலை இடைக்காலத்திலும் தொடர்ந்தது.[47]

வணிகர்கள் விற்பனை செய்த பொருள்களில் அல்லது அங்காடியில் கிடைத்த பொருள்களில் வேளாண் உற்பத்திக் கருவிகள் எதுவும் இருக்கவில்லை என்பது நோக்கத்தக்கது. வேளாண் உற்பத்திக்குத் தேவைப்படும் கருவிகளான கலப்பை, கொழு, மண்வெட்டி, அரிவாள், களைக்கொத்தி, கத்தி போன்றனவும், கைவினைஞர்களின் பயன்பாட்டுக் கருவிகளான சுத்தி, அரம் போன்றனவும் அங்காடிப் பொருள்களாக விற்பனைக்கு வரவில்லை. வேளாண் உற்பத்தி அமைப்பில், அனைவருக்கும் வேண்டியதாகவும் பயன்படுவதாகவும் அமைந்திருந்த இக்கருவிகள்கூட எளிதில் வாங்குவதற்கு ஏற்றவாறு உற்பத்தியாகவில்லை — அங்காடியில் விற்பனையாகவில்லை

என்பது ஆழ்ந்த ஆய்வுக்குரியதாகும். இது மட்டுமல்லாமல் எண்ணெய் ஆட்டுவோருக்கான செக்கு, நெசவுத்தொழில் செய்வோருக்கான தறி, அணிகலன் செய்வோர் பயன்படுத்தும் பொருள்கள் போன்ற உற்பத்திக்குப் பயன்படும் கருவிகள் எதுவும் அங்காடியில் வணிகர்களால் விற்பனை செய்யப்படவில்லை. உணவுப் பொருள்களையும் நுகர்வோர் பொருள்களையும் மட்டுமே வணிகர்கள் விற்பனை செய்து வந்தார்கள். வேளாண் உற்பத்திக் கருவிகளை உற்பத்தியாளர்களே நேரிடையாக உழவர்களுக்குக் கொடுத்து வந்தார்கள். இதேபோன்று, பிற உற்பத்திக் கருவிகளும் உற்பத்தியாளர்களால் நேரிடையாக உரியவர்களுக்குத் தரப்பட்டிருக்க வேண்டும்.

தங்களுடைய தனிப்பட்ட தேவைகளுக்கு மட்டுமே உற்பத்தி செய்துகொள்கின்ற நிலைக்கு மாறாக, விற்பனைக்கான பொருளாக—பண்டமாக வேளாண் விளைவைச் செய்கின்ற நிலை ஏற்பட்டது போன்று, விற்பனைக்காக வேளாண் உற்பத்திக் கருவிகளைக் கைவினைஞர்கள் உருவாக்கிக் கொடுக்கவில்லை. ஓர் ஊருக்கு அல்லது ஒரு பகுதிக்கான உடனடித் தேவைக்காக—பயன்பாட்டுக்காக மட்டுமே இக்கருவிகளைச் செய்துகொடுத்தவர்களாகவே அவர்கள் நீடித்தார்கள். இது தனிப்பட்டவர்களின் தேவைக்கான உற்பத்தி போன்றே தொடர்ந்தது. இந்த இடத்தில், இத்தகைய நிலை ஏற்பட்டதற்கான பின்னணியினையும் புரிந்துகொள்ளவேண்டும்.

வேளாண்மைப் பெருக்கத்திற்கு ஏற்பப் பயிர்செய் முறை, விதைகள், வேளாண் உற்பத்திக் கருவிகள் யாவற்றிலும் வளர்ச்சியும் முன்னேற்றமும் ஏற்பட்டன. புதிய 'நிலப்பகுதிகள் மேலும் மேலும் உற்பத்திக்குக் கொண்டுவரப்பட்டன. இத்தகைய வேளாண்மையின் விரைவான வளர்ச்சி, நில உற்பத்திக்கு இன்றியமையாத கருவிகளின் தேவையை மிகுவித்ததால் கலப்பை, கொழு போன்ற விவசாய உற்பத்திக் கருவிகளைச் செய்து தருகின்ற தச்சர், கொல்லர் போன்ற ‘கண்மாளர்’ குடியினர் நீர்வளம் பெற்ற ஊர்களுக்குத் தேவைப்பட்டார்கள். இத்தேவையை நிறைவுசெய்ய தச்சர், கொல்லர் போன்றோர் பல்வேறு ஊர்களிலும் குடிப்படுத்தப்பட்டார்கள். இவர்கள், பல்வேறு ஊர்களில் நிலைப்படுத்தப்பட்டதால், அந்தந்த ஊரின் வேளாண்மை உற்பத்திக்கான கருவிகளின் தேவையை நிறைவு செய்யும் வாய்ப்பு ஏற்பட்டது. இது தன்னிறைவுபெற்ற ஊர்களின் தோற்றத்துக்கு வழியமைத்துக் கொடுத்தது.[48]

இருந்தாலும், தச்சர், கொல்லர் போன்றவர்களின் பற்றாக் குறை தொடர்ந்து நீடித்தது. இதனால் ஊர்களில் குடியமர்த்

தப்பட்டிருந்த தச்சர், கொல்லர் போன்றோர் அவர்கள் தொழில் செய்த ஊர்களிலேயே முடக்கப்பட்டு, வேற்றிடங்களுக்குச் செல்லமுடியாதவாறு விதிகளால் தடுக்கப்பட்டார்கள். ஊருக்கு வெளியே பணியாற்றுவோர் விதிகளை மீறியோராகவும் சபைக்குக் குற்றம் புரிந்தோராகவும் கிராமத்தை அழித்த துரோகிகளாகவும் கொள்ளப்பட்டனர்.[49] இந்த நிலை, உள்ளூரின் முழுமையான தேவைகளை நிறைவு செய்ததாக அமைந்து, உள்ளூரிலேயே உற்பத்திக்கு உதவும் யாவும் கிடைப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தி, ஊர்கள் தன்னிறைவு பெற வழிவகுத்தன. ஆனாலும், இதனால் வெளியூர் சென்று பணிபுரிவது தடுக்கப்பட்டதுடன், வெளியூரில் இருப்பவர்களின் பயன்பாட்டுக்கு உற்பத்தி செய்வதும் இயலாமல் போய்விட்டது. அதாவது, அங்காடி விற்பனைக்கான உற்பத்தியே தடை செய்யப்பட்டிருந்தது என்றுதான் எடுத்துக் கொள்ளவேண்டியுள்ளது. மேலும், இந்தக் கட்டத்தில் தேவைக்கு மிகுதியாக உற்பத்திக் கருவிகள் உருவாக்கப்படாததால், இவை விற்பனைப் பொருள்களாக மாறி அங்காடிக்கு வருவதற்கான வாய்ப்பும் ஏற்படவில்லை.[50]

இந்நிலை, உற்பத்திக் கருவிகளின் வளர்ச்சியில் ஒரு வகையான தேக்கத்தினை ஏற்படுத்தியது. கருவி உற்பத்தியாளர்கள் ஒன்றுகூடி, தங்களது பட்டறிவினைப் பகிர்ந்துகொள்ளும் வாய்ப்புத் தடைப்பட்டது. இதனால், நடைமுறையிலிருந்த உற்பத்திக் கருவிகளைச் செழுமைப்படுத்துவதற்கும் புதிய உற்பத்திக் கருவிகளை உருவாக்குவதற்குமான அடித்தளம் அமையவில்லை. அதாவது, கூட்டு முயற்சி என்ற தன்மையே நடைமுறையில் இல்லாமல் போயிற்று. அங்காடி விற்பனைக்காகப் பொருள் உற்பத்தி ஏற்படாமையும் தொழிற்பயிற்சிக்கான வாய்ப்புகள் குடும்பத்திற்குள்ளேயே முடங்கிவிட்டமையும் தொழில் நுட்பத்தினைப் பின்னுக்குத் தள்ளிவிட்டன.[51]

இந்நிலைக்கு மாறாக, ஆடைநெய்யும் தொழிலில் ஈடுபட்டோர் பலராக ஓரிடத்தில் கூடிவாழ்ந்தார்கள் என்பதற்கான கல்வெட்டுச் சான்றுகள் பல பதியப்பட்டுள்ளன.[52] தாங்கள் வாழுகின்ற ஊரில் மட்டும்தான் தொழில் செய்யவேண்டும் என்ற தடையும், வேற்றூர்க்குச் செல்லக்கூடாது என்ற கட்டுப்பாடும் கொண்ட கைவினைஞர்களின் பட்டியலில் நெசவாளர்கள் இல்லை.[53] அதனால், நெய்தல் தொழில் செய்தோரின் தொழில்நுட்பம் பெருமளவில் முன்னேற்றம் கண்டது. நெய்தலுக்கான உற்பத்திக் கருவிகளில் மட்டுமல்லாது, உற்பத்திப் பொருள்களிலும் மேன்மை ஏற்பட்டது. ஆண்களும் பெண்களும் பயன்படுத்திய உயர்ந்த வகை ஆடை

களைப் பற்றிய குறிப்புகளைப் பண்டைக் காலத்திலிருந்தே தொடர்ச்சியாகக் காணலாம்.[54] வெவ்வேறு பகுதிகளில் தனிமைப்படுத்தப்படாத நிலையினால், பட்டறிவுப் பரிமாற்றமும் இணைந்த முயற்சிகளும் கூட்டு உழைப்பும் இத்தொழிலில் வியத்தகு வளர்ச்சியினை வெளிக்கொண்டு வந்திருக்கின்றன எனலாம். கி.பி. 1225ஆம் ஆண்டளவிலேயே தமிழ்நாட்டிலிருந்து சீன நாட்டிற்கு ஏற்றுமதியான பொருள்களில் பருத்தி, பருத்திநூல், துணி, வண்ணம் தோய்த்த பட்டுநூல், பட்டாடை ஆகியனவும் அடங்கியிருந்ததாகச் சீனப் பயணியர் சௌ-சு-குவா காட்டியிருக்கிறார்.[55] ஆனால், இந்த நெய்தல் தொழில் நுட்ப வளர்ச்சிகூட ஒரு கட்டத்தையடுத்துத் தேக்கமடைந்துவிட்டதையும் புதிய எந்திரங்கள் அறிமுகப் படுத்தப்படாமையையும் குறிப்பிடாமல் இருக்கமுடியாது.

இங்கு உற்பத்தி நிலங்களின் உடைமை அளவு குறித்து நோக்கவேண்டுவதும் இன்றியமையாததாகும். இடைக்காலத்தில் பெரும் நிலவுடைமையாளர்கள் தோன்றிவிட்டதனை நொபொரு கராஷிமா சுட்டிக்காட்டியிருக்கிறார்.[56] இத்தகைய நிலவுடைமை அளவு, நூற்றுக்கணக்கான ஏக்கர் அளவிலும் பல ஊர்களைக் கொண்டதாயும் இருந்திருக்கின்றது.[57] ஆனாலும், கல்வெட்டுக்களில் காணப்படும் நில விற்பனைகளை வைத்துப் பார்க்கும்பொழுது, சிறு அளவு நிலங்களைக் கொண்டவர்களே மிகுதியாக இருந்திருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது.

இத்தகைய சிறு நிலவுடைமையாளர்கள் தங்களுடைய நிலங்களை நேரிடையாகத் தாங்களாகவேதான் பயிர்செய்திருப்பார்கள். பெரிய நிலவுடைமையாளர்களில், உயர் அரசு அலுவலர்களும் அடங்குவர்.[58] அவர்கள் தங்களுடைய அரசுப் பணிகளுக்கிடையில், நேரிடையாகத் தங்களுக்கு உரிமையான நிலங்களில் உழைப்பைச் செலுத்தியிருக்க இயலாது. அதே போன்று, பிராமணர்களும் தங்களுடைய நிலங்களில் தாங்களே உழைக்கும் இயல்புடையவர்கள் அல்லர். பிராமணர்கள் நேரிடையாக நிலத்தில் பயிரிடுவது தடை செய்யப்பட்டிருந்ததை, இரண்டாம் ராசாதிராசனின் 14ஆம் ஆட்சியாண்டு ஆச்சாள்புரம் கல்வெட்டுப் பதிந்திருப்பதையும் இங்கு பார்க்க வேண்டும்.[59] இவையொத்த நிலங்கள் நிலமில்லாதிருந்த பயிரிடும் மக்களால்தான் உற்பத்தி செய்யப்பட்டிருக்கும்.[60] இப்படி வார முறையிலோ, வேறு வகை உடன்பாட்டு முறையிலோ பிறருடைய நிலத்தில் விளைவித்த பகுதியினர், தாங்களே தங்களுடைய இல்லத்தினர் துணையுடன் உழைப்பில் ஈடுபடவேண்டியிருந்ததால், அதற்கேற்பச் சிறு அளவு நிலத்

தையே பயன்படுத்தியிருக்க முடியும். உற்பத்தியில் நேரிடையாக ஈடுபடும் தனி ஒருவரின் நிலவுடைமை அளவு மிகுந்திருந்த இடத்திலும்கூட, அது பலரால் பிரித்துப் பயிரடப்பட்டது. இப்படி நில அளவு குறைவாக இருந்ததால், உற்பத்திக் கருவிகளில்—முறைகளில் பெரிய அளவு மாற்றங்களைப் புகுத்த வேண்டிய தேவை ஏற்படவில்லை. அத்துடன், பிறருடைய நிலத்தைப் பயன்படுத்தி வந்த உடைமை நிலமற்ற பயிரிடுவோர், உற்பத்திக் கருவிகளின் முன்னேற்றத்தில் ஈடுபாடு காட்டும் சூழ்நிலையும் எழவில்லை.

மேலும், கோயில் பணிகளில் ஈடுபட்டிருந்த தச்சர், கொல்லர், தட்டர் போன்றோர் போற்றப்பட்டு, பட்டமளிக்கப்பட்டுச் சிறப்பிக்கப்பட்டார்கள்.[61] அவர்களுக்கு நல்ல ஊதியமும் மிகுந்த வாய்ப்புகளும் தொடர்ந்து கிடைத்தன.[62] ஆனால், உழவுக் கருவிகளைச் செய்தவர்கள், புதிய தொழில் நுட்ப முறைகளுக்காகவோ புதிய வகைக் கருவிகளின் கண்டு பிடிப்புகளுக்காகவோ போற்றப்படவில்லை; ஊக்குவிக்கப் படவும் இல்லை. இதற்காக, அவர்களுக்கு மேலூதியம் எதுவும் கிடைத்ததாகவும் தெரியவில்லை. இதனால், அன்றாட உற்பத்திப் பணிகளுக்காக அவர்களது உழைப்பும் நுட்பமும் பயன்படுத்திக்கொள்ளப்பட்டனவேயன்றி, புதிய தொழில் நுட்ப முறைகளைப் புகுத்துதற்கான ஊக்கம் சிறிதும் ஊட்டப் படவில்லை.

தமிழ் நாட்டில் உழவுக் கருவிகளின் உற்பத்தி என்பது வேளாண் உற்பத்தியின் ஓர் உறுப்பாகவேதான் தொடர்ந்ததேயன்றி, தொழில் உற்பத்தியாகவோ, அங்காடியின் வணிகப் பொருளாகவோ உருப்பெறவில்லை. தமிழகத்தில், வேளாண் உற்பத்தி ஈட்டித் தந்த பொருளாதார வளர்ச்சி, தொழில் வளர்ச்சியாகவோ, வணிக வளர்ச்சியாகவோ உருவாகாமல் இருந்தது எதிர்பாராத ஒரு விளைவாக ஏற்பட்டுவிட்டது எனலாம்.

நானூறு நடன மகளிர், கலைஞர்கள், பிற பணியாளர்கள் எனச் சற்றேறக்குறைய எழுநூறு பேர், தஞ்சைக் கோயிலின் வருவாயில் ஊதியம் பெற்றார்கள். இவர்கள் அனைவருக்கும் ஊதியமாக நெல்தான் வழங்கப்பட்டது.[63] பல பொருள்களின் விலைகள், தொகையாக வழங்கப் படாமல், நெல் அளவில் அல்லது பிற வேளாண் உற்பத்திப் பொருள் அளவில் குறிக்கப்பட்டிருப்பதும் இங்குக் குறிப்பிடத் தக்கது.[64] வணிகமும் கைவினைப் பொருள் உற்பத்தியும் கிராமப்புற வேளாண் மக்களையே சார்ந்திருந்தன என்பதற்கான சான்றுகளாகவே இவை விளங்குகின்றன.

இத்துடன், உழவுக் கருவிகளை உருவாக்கிக் கொடுத்தவர்களுக்கும் பயன்படு நுகர் பொருள்களை ஆக்கியோருக்கும்கூட வேளாண் உற்பத்திப் பொருள்களே ஊதியமாகவோ விலையாகவோ தரப்பட்டன. அல்லது, இவர்களில் பலருக்கு ஊதியமாக, உள்ளூரிலேயே சிறு அளவு நிலம் கொடுக்கப்பட்டிருந்ததால், இவர்கள் அவ்வவ்வூரிலேயே நிலைப்பட்டு, வேளாண் தொழிலோடு பிணைக்கப்பட்டுக் கிடந்தார்கள்.

வேளாண்மைக்கும் கைத்தொழில்களுக்கும் இடையில் மிகத் தெளிவான நுட்பமான உழைப்புப் பிரிவினை ஏற்பட்டிருந்தாலும், இது சாதிகளால் நிலைப்படுத்தப்பட்டிருந்தாலும், ஒருவகையான தொழில்முறைப் பிணைப்பு ஏற்பட இந்நிலை வழியமைத்துக் கொடுத்துவிட்டது.

மேலும், பணத்தைப் பற்றிய குறிப்புகள் 9-11ஆம் நூற்றாண்டுகளைவிட, 12-13ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் மிகுதியாகக் காணக்கிடைக்கின்றன.[65] நில உற்பத்தி மிகுதி கொடுத்த எச்சமும் அதனால் ஏற்பட்ட விளை பொருள்களின் வணிக வளர்ச்சியும் பணப்புழக்கத்தைப் பரவலாக்கியுள்ளன. ஆனாலும், கோயில்களுக்கு வழங்கப்பட்ட கொடையினை ஒப்பிட்டுப் பார்க்கும்போது நிலைமை மாறாக உள்ளது. 9-10ஆம் நூற்றாண்டுகளில் காசு, பொன், அணிகலன்கள் போன்றன கோயில்களுக்கு மிகுதியாகக் கொடையளிக்கப்பட்டுள்ளன. இந்த நிலை மாறி, 11-13ஆம் நூற்றாண்டுகளில் நிலம் மற்றும் நில உற்பத்திப் பொருள்களே பெருமளவில் கோயில்களுக்கான கொடைகளாக அமைந்துள்ளன.[66] வேளாண் உற்பத்தியின் தாக்கத்தினை மட்டுமல்லாது, அதன் முதன்மையையும் இந்நிலை தெளிவுபடுத்துகிறது.

பணப் புழக்கம் மிகுந்திருந்தும், விளை பொருள்கள் ஊதியமாக வழங்கப்பட்டதும் பண்டமாற்று முறை புதிய வழியில் தொடர்ந்ததும் ஏன் என்ற கேள்வி எழுவது இயற்கை. உணவு உற்பத்தி பெருகியிருந்த ஓரமைப்பில் பெருந்திரளான மக்கள் உணவு உற்பத்தி தொடர்பான பணிகளிலேயே ஈடுபட்டிருந்த நிலையில், அன்றாட வாழ்வுக்கு அடிப்படைத் தேவையான உணவுப் பகிர்வு, பணத்தின் வழியாக அன்றி நேரிடையாக நடைபெற்றதையே இது காட்டுகிறது. நிலத்தில் கூலி உழைப்பைச் செலுத்தியவர்கள், பிற உற்பத்திக்கருவிகளை உருவாக்கிக் கொடுத்தவர்கள் மற்றும் இந்த உற்பத்தித் தொடர்பான பிற மறைமுகப் பணிகளைச் செய்தவர்கள் என அனைவரும் விளைபொருள்களையே ஊதியமாகக் கொண்டார்கள். உற்பத்தியான விளைபொருளை விற்று, அதில் கிடைக்கும் பணத்தைக் கொண்டு, பணிகளுக்கான ஊதியம் வழங்கி,

மீண்டும் அதே பணத்தைக் கொண்டு பணியாளர்கள் உணவுப் பொருள்களை வாங்குவது என்பது தேவையற்ற இரட்டிப்பு நடைமுறையாக இருந்தது. மேலும், தாங்கள் உற்பத்தி செய்த விளைபொருள்களையே தங்கள் உணவுக்குப் பயன்படுத்துவது என்கிற ஒரு நிறைவும் இதில் இருந்திருக்கலாம்.

இத்தகைய முறையில் உள்ளடங்கியிருந்த மற்றொரு தன்மையையும் நோக்கவேண்டும். நிலவுடைமையாளர்கள் மற்றும் செல்வக் குடியினர் நீங்கலாக பிறர் உணவு, உடை, உறையுள் போன்ற குறைந்த அளவு வாழ்க்கைத் தேவைகளை மட்டுமே நிறைவு செய்யக்கூடிய வகையில் வைக்கப்பட்டிருந்தார்கள். இந்தக் குறைந்த தேவைகளுக்கு மீறிய வாழ்க்கை வளத்தை எண்ணிப் பார்க்கக் கூடிய நிலையில்கூட அவர்கள் இல்லை. எனவே, ஊதியமாகக் கிடைத்த விளைபொருள்களில் தங்கள் இல்லத்தினர் பயன்படுத்தியதில் எஞ்சியதைக் கொண்டு உடைகள் போன்ற தேவைகளை அவர்கள் ஓரளவுக்கு நிறைவு செய்துகொண்டார்கள். இந்த உடைகளைக்கூடப் பெரும்பாலும் விளைபொருள்களைக் கொண்டே பெற முடிந்ததையும் நாம் நோக்கவேணடும்.

பணப் புழக்கம் இருந்தாலும், அது உழைக்கும் கீழ்ப்பிரிவு மக்களின் பயன்பாட்டுக்கு எட்டவில்லை. உழைக்கும் மக்கள் வறுமையில் வாடினார்கள் என்று சொல்லுவது பொருத்தமாக இருக்குமா என்பதற்கான சான்றுகள் ஆய்வுக்குரியன என்றாலும், அவர்கள் அடிப்படைத் தேவைகளை ஓரளவுக்குப் பெறுவதில் மட்டுமேதான் நிறைவுகொள்ளவேண்டியிருந்தது என்று உறுதியாகக் கூற முடியும். இவ்வாறு தங்கள் தேவைகளை நிறைவுசெய்தது போக அவர்களிடம் எஞ்சியதாக எதுவும் இருக்கவில்லை.

வேளாண்மை செய்யக்கூடிய பகுதிகளில், மனித வாழ்க்கைக்குத் தேவையான உணவே உற்பத்தி செய்யப்பட்டதால், அதுவே அடிப்படை அலகாக அமைந்துவிட்டதில் வியப்பு ஒன்றுமில்லை. அன்றைய சூழ்நிலையில், பெரும்பான்மை மக்களின் தேவைக்கு எஞ்சிய செல்வமாக எதுவும் இல்லாது இருந்த நிலையில், மாற்று அலகாகப் பணம் போன்ற எதுவும்—அது நடைமுறையில் இருந்தும்—பண்டமாற்று அலகாகப் பரவலாக நடைமுறைக்கு வர வாய்ப்பில்லாமல் போய் விட்டது.

இதனால், உற்பத்திக் கருவிகளை உருவாக்கிக் கொடுத்த கைவினைஞர்களிடம் பண அளவில் எச்சம் ஏற்படவும் வாய்ப்பில்லாமல் போய்விட்டது. இதன் எதிர்விளைவாக, எச்சம் ஏற்படாத நிலையில், மூலதனம் உருவாகக்கூடிய சூழல்

ஏற்படவில்லை. வருவாயும் சமூக மதிப்பும் செல்வாக்கும் மிகுதியாகக் கிடைத்ததால், வணிகத்தில் வருவாயாகக் கிடைத்த எச்சப் பணத்தை—அது எந்த அளவில் இருப்பினும்—வணிகர்கள் விளைநிலங்களை வாங்குவதற்கே பயன்படுத்தினார்கள். வணிக மக்களில் பெரும் பகுதியினரும் வேளாண் தொழிலோடு தொடர்புடையவர்களாகவே நீடித்தார்கள் என்பதை இவை உறுதிப்படுத்துகின்றன. இப்படி, வணிக வருவாயும் எச்சமும் நிலத்தில் முடக்கப்பட்டதால், தொழில் வளர்ச்சிக்கு ஊக்கம் தரப்படவில்லை.

வேளாண்மையில் கிடைத்த வருவாயும், நில உற்பத்தியை விரிவாக்குதற்கும் பரவலாக்குதற்குமே பயன்படுத்தப்பட்டது. மேலும் புதிய நிலங்கள் வாங்கப்பட்டன. ஆனால், நில உற்பத்திக் கருவிகளின் வளர்ச்சியில் ஈடுபாடு காட்டப்படவில்லை. நில வருவாய், கருவிகளின் உற்பத்திக்கான மூலதனமாக—தொழில் மூலதனமாக உருமாறவில்லை என்றே கொள்ளலாம்.

இவர்களன்றி, பலவகைப்பட்ட உழைக்கும் மக்கள் பிரிவினருக்கும் நிலத்தோடு இருந்த தொடர்பும் உறவும் ஏதாவது ஒரு வகையில் நீடித்தபோது, பணம் இருந்திருந்தாலும், அது மூலதனமாக உருவாகியிருக்கமுடியாது. பணம், மூலதனமாக மாறுவதற்கு, அந்தப் பணத்தைக்கொண்டு விலை கொடுத்து வாங்குவதற்கு வேலையற்ற உழைக்கும் சக்திகொண்ட மக்கள் கிடைக்க வேண்டும்.[67]

தமிழ்நாட்டில் வேலையற்ற உழைக்கும் சக்திகொண்ட மக்கள், அதாவது நிலத்தோடு தொடர்பில்லாமல்—நிலத்தில் உழைப்பதற்கு வழியும் வாய்ப்பும் இல்லாமல் இருக்கின்ற மக்கள் திரள், அக்காலகட்டத்தில் ஒருவேளை இருந்திருந்தாலும், சாதிகளுக்கென ஒதுக்கப்பட்டிருந்த வேலைப் பிரிவினைகளையும் மீறி, பணத்தைக்கொண்டு வாங்கப்படுவதற்கு அத்தகையோர் கிடைத்திருப்பார்களா, அப்படிக் கிடைத்திருந்தாலும் வாங்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டிருப்பார்களா என்பன போன்ற வினாக்களும் ஆழமான ஆய்வுக்குரியன. இதே போன்று, படைகளுக்கான ஆள்சேர்ப்பு எப்பிரிவினரிடமிருந்து நடைபெற்றது என்பதும் தனி ஆய்வுக்குரியது.

2ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் வேளாண்மையின் பிடிக்குள் கிடந்த வணிகமும் கைத்தொழிலும் பிரிந்து, தனித்தன்மை பெற்றதாகக் கூறப்பட்டாலும்,[68] தொழில் நுட்ப வளர்ச்சியில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டதாகவோ, பலர் பணிபுரியும் தொழில் அமைப்புகள் உருப்பெற்றதாகவோ, உற்பத்திக் கருவிகள் அங்காடி விற்பனைக்கு மாறியதாகவோ, புதிய பொருள்களின் வரவுடன் வணிகம் விரிவாக்கம் பெற்ற

தாகவோ சான்றுகள் எதுவும் தெளிவாகக் கிடைக்கப் பெற வில்லை.

உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட தொழில் நுட்ப வளர்ச்சியின் நிலை ஒருவாறு முடக்கப்பட்டுக் கிடந்தாலும், கட்டடத் தொழில் நுட்பம், போர்த் தொழில் நுட்பம், நுண் கலை நுட்பம் ஆகியன உச்ச நிலையில் வளர்ச்சி பெற்றிருந்தன. உற்பத்தித் தொழில் நுட்ப வளர்ச்சியின் முடக்கத்திற்கும் பிற வளர்ச்சி பெற்ற துறைகளின் முனைப்பிற்குமிடையில் காணக் கூடிய எதிர்நிலை வேறுபடும் தன்மைக் கூறுகள் இங்கு நோக்கத்தக்கன. இடத்திற்கும் இயற்கைச் சூழலுக்கும் ஏற்ப, வேளாண் உற்பத்திக் கருவிகளை உருவாக்குவோர் வெவ்வேறு இடங்களில் தனித்தனியாகக் குடிப்படுத்தப்பட்டு, பிரித்து வைக்கப்பட்டிருந்தார்கள். ஆனால். உயர்ந்த கோயிலைக் கட்டுதற்கும், பெரும் போரினை நடத்துதற்கும் பலருடைய சீரிய ஒத்துழைப்பும் உதவியும் முயற்சிகளும் தொடர்புச் செயல் பாடுகளும் ஒத்த முடிவுகளும் தேவைப்பட்டன. இதன் விளை வாக ஏற்பட்ட அறிவுப் பரிமாற்றங்களும் ஆக்கச் சிந்தனை களும் புதிய நுட்பங்களை உருவாக்கித் தந்தன; இவை வளர்ச்சி யின் புதிய எல்லைகளையும் தொட்டுக் காட்டின. இது போன்றே, பல்வேறு நுண் கலைஞர்கள் சில மையங்களில் குழுமப்படுத்தப்பட்டமை ஆக்க முறையிலான வளர்ச்சிக்குத் துணையாக அமைந்திருக்கக்கூடும். மாறாக, பேரரசுகள் சிதைவுற்று வேளாண் உற்பத்தி வளன் முடங்கி, வளமை குறைந்தவுடன், உயர்ந்த கோயில்களைக் கட்டுகின்ற—பெரும் போரினை நடத்துகின்ற நிலைமைகள் மாறியவுடன், கூட்டுரு வாக்க முயற்சிகளும் அறிவுப் பரிமாற்றங்களும் தடைப்பட்டு, கட்டடத்தொழில் நுட்ப வளர்ச்சியும் போர்த் தொழில் நுட்ப வளர்ச்சியும் நுண்கலை வளர்ச்சியும் தேக்கமுற்று, வளர்ச்சியில் பின்தங்கி நின்றுவிட்ட நிலையினையும் அறியலாம்.

இங்குகூட, மற்றுமோர் அடிப்படை வேறுபாட்டையும் நோக்கவேண்டும். வேளாண் உற்பத்தி விரிவாக்கம் உச்சக் கட்டத்தில் இருந்தபோதும், வேளாண் உற்பத்திக் கருவிகளில் பெரியதொரு முன்னேற்றமான வளர்ச்சி—நுட்ப மாற்றம் ஏற் படவில்லை. ஆனால், வேளாண் உற்பத்தி விரிவாக்கம் முனைப்போடு இருந்த அதே காலகட்டத்தில்தான், கட்டடத் தொழில் நுட்பமும் போர்த் தொழில் நுட்பமும் நுண்கலை நுட்பமும் வளர்ச்சி பெற்று உயர்நிலையை எட்டின; அந்தக் காலகட்டத்தின் முன்னேற்றமான நிலையினைப் பெற்றுப் போற்றப்பட்டன. ஆனால், வேளாண் விரிவாக்கத்தின் முனைப்பு நின்று தேக்கமடைந்தவுடன், அதன் விளைவாக ஏற்

பட்ட வளக்குறைவின் தாக்கத்தினால் கட்டடம், போர், நுண் கலை ஆகியவற்றின் நுட்பங்கள் மேலும் வளர்ச்சி பெறாது நின்றுவிட்டன. ஆயினும், இந்த வேளாண் விரிவாக்கத்தின் தேக்கமும்கூட, எதிர்மறையான அளவில் வேளாண் உற்பத்திக் கருவிகளின்—உற்பத்தி முறைகளின் நுட்ப வளர்ச்சியினை உருவாக்காமல் போய்விட்டது.

அடுத்தடுத்து ஏற்பட்ட வேளாண் விரிவாக்கத்தின் தேக்கம், அதனால் ஏற்பட்ட செல்வ வள வீழ்ச்சி, நிலவுடைமையாளர் களின் திடமான வலுப்பாடு, ஆங்காங்கு ஏற்பட்ட வேளாண் தலைவர்களின் உரிமை ஈடுபாடு, பேரரசுகளின் தளர்ச்சி ஆகியன ஒன்றுக்கொன்று இயைபுகொண்ட, வேளாண் வளர்ச்சியின் பின் விளைவுகளேயாகும்.

ஒரு காலகட்டத்தில், ஏரி குளங்கள் வெட்டியும் அவற்றி னின்றும் வாய்க்கால்கள் அமைத்தும், ஆறுகளைத் தடுத்து இயற்கையான அணைகள் ஏற்படுத்தியும் நில உற்பத்தியை விரிவாக்கி, வேளாண் வளர்ச்சியை உறுதிப்படுத்திய பேரரசு கள் மேன்மேலும் தங்கள் முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. இதற்கு இரண்டு காரணிகள் இருக்கலாம். ஒன்று, புவியியல் சூழல்; மற்றொன்று தொழில் நுட்பக் குறை.

எந்தவொரு அமைப்பிலும். அந்த அமைப்பின் அடிப்படை யாக விளங்குகின்ற உற்பத்தி மேலும் வளர்ச்சி பெற்றுக் கொண்டேயிருக்கவேண்டும். அதுதான் சமூக வளர்ச்சியைக் காட்டுவதாகும். நில உற்பத்தி அமைப்பில், வேளாண் வளர்ச்சி, நிலப்பரப்பு விரிவாக்கத்திலும் உற்பத்தி அளவுப் பெருக்கத்திலும்தான் இருக்க முடியும். நிலப்பரப்பு ஒரு கட்டத்தில் விரிவாக்கம் பெற முடியாதபோது அல்லது நில மேம்பாட்டுக்கான நீர்ப்பாசன வாய்ப்புகளை இயற்கை யாகவே உருவாக்க முடியாதபோது, இருக்கின்ற நிலத்தின் உற்பத்தி அளவைப் பெருக்குவதுதான் வளர்ச்சிக்கான ஒரே வாய்ப்பாகும். இதை வேளாண் தொழில் நுட்ப முன்னேற்றத் தினால்தான் அடைய முடியும். தமிழ்நாட்டில், புவியியல் சூழல்களால் இயற்கையாக நிலப்பரப்பு விரிவாக்கத்தில் தேக்க நிலை ஏற்பட்டபோது, தொழில்நுட்ப வளர்ச்சி முனைப்புப் பெற்றிருக்க வேண்டும். ஆனால், ஒரு கட்டத்திற்குப் பிறகு, எதிர்பார்த்த அளவு—தேவைப்பட்டவாறு இது ஏற்படாமல் தடைபட்டுவிட்டது.

வேளாண் விரிவாக்கத்தில் காட்டப்பட்ட ஈடுபாடும் செய லூக்கமும், அதன் நுட்ப வளர்ச்சியில் தென்படவில்லை. வேளாண் உற்பத்தியைப் பொறுத்தவரை உலகின் பல்வேறு பகுதிகளிலும் இதே நிலைதான் இருந்துவந்திருக்கிறது. மேலும்,

அன்று சில முனைகளில் ஏற்பட்ட நுட்ப வளர்ச்சிகளும்கூட வேளாண் உற்பத்தியோடு இணைந்தவாறு — தொடர்பு கொண்டவாறு ஏற்படவில்லை. இதனால், வேளாண் விரிவாக்கம் நிலப்பரப்பு அளவில் ஒரு கட்டத்தில் முடக்கப்பட்ட போது, அதையடுத்த நுட்ப வளர்ச்சி உடனடி மாற்றாக உருப் பெறவில்லை. சமூக அமைப்பு, உற்பத்தி உறவுகள், கல்விநிலை என்று வெவ்வேறு சூழல்களும் இத்தகைய நுட்ப வளர்ச்சிக் கான வாய்ப்புகளுக்கு வழியமைத்துத் தரவில்லை. மேலும், கட்டடம், போர் நுட்பம் போன்றவற்றில் திருப்பப்பட்ட ஈடு பாடும் செலவிடப்பட்ட முயற்சிகளும், வேளாண் நுட்பத்தில் செய்யவேண்டிய பணிகளை வழிமாற்றியும் இருக்கலாம்.

இந்த இடத்தில், கல்வி வளர்ச்சியின் தேக்கநிலை குறித்தும் நாம் நோக்கவேண்டும். ''வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும், கீழ்ப்பால் ஒருவன் கற்பின், மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே''[69] என்று கல்வியின் சிறப்பு ஏற்றப்பட்ட சங்ககால நிலைமாறி, மேலானவராகக் கொள்ளப்பட்ட பிராமணர் மட்டுமே கற்க முடியும் என்ற நிலை ஏற்பட்டது. அதுவும் வேதம், புராணம் தொடர்பான கல்வியே இடைக்காலத்தில் சிறப்பிக்கப்பட்டது. மக்களுடைய மொழி தமிழ் என்றும் அறி வூட்டும் மொழி சமக்கிருதம் என்றும்[70] மிகுந்த செருக்குடன் சொல்லிக் கொள்வதில் பெருமையும் பேரின்பமும் கொண்ட நீலகண்ட சாத்திரியார் போன்றவர்களால்கூட, கல்வி என்பது வேதம் உள்ளிட்ட புராணம் தொடர்பானதாகவே இருந்தது என்பதை மறைக்க முடியவில்லை. கோயில்களும் கல்விச்சாலை களும்கூட இத்தகைய வேதக் கல்வியையே புகட்டி வந்தன. மன்னர்களும் இதையே பேணினர். இலக்கிய வளம் மிகுந்த பண்டைய மொழியாக இருந்தும் தமிழ் கற்பித்தலுக்கான ஊக்கம் ஊட்டப்படவில்லை. அதற்கென அறக்கொடைகள் வழங்கப்பட்டமைக்குச் சான்றுகளும் இல்லை.[71] வேதம் கற் றோருக்கு நிலங்களும் கொடையாக வழங்கப்பட்டன. ஆனால், தமிழ் கற்றோருக்கு இத்தகைய நிலக் கொடைகள் கிடைக்கப் பெறவில்லை. கல்வியில் சிறந்தவர்கள்—உயர்ந்தவர்கள் என்று போற்றப்பட்ட பிராமணர்கள் எவரும், அன்றைய சமூகம் பெற்றிருந்த அறிவியல், தொழில் நுட்பம் போன்ற அறிவுச் செல்வங்களைக் கற்றவர்களாக இருக்கவில்லை. வெறும் வேதக் கல்வியோடு அவர்களது அறிவு முடங்கிக் கிடந்தது.

கட்டட வளர்ச்சி, ஐம்பொன் சிலைகள் வார்ப்பு போன்ற பல பணிகளின் நுட்பங்கள் கோயிலோடு தொடர்புகொண் டிருந்தபோதிலும், அவற்றைக் கல்வியாகப் புகட்டுவதில் கோயில்கள் நாட்டம் கொள்ளவில்லை.

மேன்மை மிக்க பண்பாடும் மேலான படிப்பறிவும் கொண்ட மக்கள் பிரிவினர் பங்கு பெற்ற அமைப்புகளாகப் பிரமதேயச் சபைகள் போற்றப்பட்டாலும்,[72] சபை உறுப்பினர்களின் தகுதிகளாக வேதக் கல்வி போன்றனவே வேண்டப்பட்டன. சபை உறுப்பினர்களின் அன்றாடப் பணிகளான நில உற்பத்தி, நீர் வள மேற்பார்வை போன்ற நுட்ப அறிவு வலியுறுத்தப்படவில்லை.

இடைக்காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சியினால், ஐரோப்பாவில் சமயக் கல்வியும் அறிவியல் கல்வியும் தனித்தனியாகப் பிரிந்துவிட்டன. இதனால், கிறித்துவ நிறுவனங்கள் சமயக் கல்விக்குச் சிறப்பிடம் கொடுத்த நிலை ஒருபுறம் இருந்தாலும், மறுபுறம், சமயக் கல்வியல்லாத அறிவியல்—நுட்பப் படிப்புகள் உள்ளிட்ட பொதுக் கல்வி தருவதற்கான பல்கலைக்கழகங்கள் போன்ற அமைப்புகள் அக்காலகட்டத்திலேயே தோன்றுவதற்கு வழி பிறந்தது. ஆகவே, அறிவியல் வளர்ச்சி மேலும் மேலும் பெருக முடிந்தது. தமிழ்நாட்டில், காஞ்சி போன்ற இடங்களில் தொடக்க நிலையிலேயே அறிவு புகட்டும் அமைப்புகள் பல இருந்திருப்பினும், அடுத்த கட்ட வளர்ச்சிக்கு ஏற்ப அந்த அமைப்புகளோ அல்லது வேறு தனி நிறுவனங்களோ அறிவைப் பரப்பும் கல்விக்கூடங்களாக மாற்றம் பெறவில்லை. அன்றைய சமூகம் பெற்றிருந்த அறிவியல்—நுட்ப வளர்ச்சி, பொதுக் கல்வியாக—சமூகக் கல்வியாக உருப்பெறாமல் போய்விட்டது. கட்டடத் தொழில் நுட்பம் போன்ற வளர்ச்சியடைந்த துறைகள்கூட, தொடர்பான தொழில் புரிந்த பிரிவினர் அல்லது சாதியினர், உழைப்பின் ஒரு பகுதியாகத் தங்களுக்குள் கற்றுக் கொண்ட முறையிலேதான் நீடித்தன—ஏற்றம் பெற்றன. அதாவது, அன்று வளர்ச்சி பெற்றிருந்த துறைகளில்கூட, இன்றைய அளவுகோள்களின்படியான தொழில் நுட்பக்கல்வி முறை ஏற்படவில்லை.[73] அறிவியல்—தொழில் நுட்ப ஆற்றலினைப் பிறருக்குக் கற்பித்தல் வழியாக அறிவுப் பெருக்கம் ஏற்படுத்தும் கல்வி முறை அமையவில்லை.

இடைக்கால அறிவுலகின் சார்பாளர்களாகத் தங்களைக் காட்டிக் கொண்ட பிராமணர்கள், அன்று வளர்ச்சி பெற்றிருந்த—தொழில் நுட்பத்தைக் கற்றுக் கொள்வதிலோ, அதன் வழி பிறருக்குக் கற்பிப்பதிலோ எத்தகைய முனைப்பும் கொண்டிருக்கவில்லை. சமக்கிருதத்திலிருந்த சமய—புராண நூல்களில் திளைத்திருப்பதிலேயே அவர்கள் நிறைவு கொண்டனர். தங்களையன்றி வேறு சாதியினர் கல்வி கற்கக்கூடாது என்ற புதிய வேலியினையும் அமைத்துவிட்டதனால், வழக்கமான சமயக் கல்வியன்றிப் பிற அறிவியல்—தொழில் நுட்பத் துறை

கள், பொதுக்கல்வி என்ற வரையறைக்குள் வராமலேயே போய் விட்டன. இது கல்வி வளர்ச்சியை விரிவாக்குவதில் பெரும் தடையாக அமைந்து, அறிவியல்—தொழில் நுட்ப முன்னேற்றத்தையும் முடக்கிவிட்டது.

இந்தப் பின்னணியில்தான் அரசியல் அமைப்பையும் நோக்க வேண்டும். வேளாண் வளர்ச்சியின் விளைவாக எழுந்த சமூக-பொருளாதார மாற்றங்கள் பரந்துபட்ட பாதுகாப்பையும் பொறுப்பையும் நிறைவேற்றுகின்ற பேரரசு உருவாக அடிப்படையினை அமைத்துத் தந்தன. இந்த அடித்தளத்தையொட்டி, ஒரு பேரரசு உருப்பெற்றிருந்தாலும், ஒரு பேரரசுக்கு வேண்டிய நிர்வாக அமைப்பு முறை உருவாகவில்லை. இது பற்றிப் பல்வேறு அறிஞர்களிடையே பல்வேறான மாறுபட்ட கருத்துக்கள் இருப்பினும், நமக்குக் கிடைத்திருக்கின்ற கல்வெட்டுகள் தெளிவான படத்தை வரைந்து காட்டுகின்றன.

வேளாண்மை உற்பத்திக்கான அன்றாட நடைமுறைகளை நிறைவேற்றித் தருகின்ற பணிகளுக்குத் தேவையான நிர்வாக அமைப்பாகவே உள்ளாட்சிகள் தோன்றின. காலத்துக்கும் இடத்துக்கும் பணிகளுக்கும் உற்பத்தியின் தேவைக்கும் ஏற்ப இவை சிறுசிறு மாற்றங்களுடன் வெவ்வேறு இடங்களில் அமைந்திருந்தன. அடுத்தடுத்து ஏற்பட்ட வளர்ச்சியின் தேவைகளால் இந்த அமைப்புகளின் பணிகள் விரிவடைந்தன. வேளாண்மைக்கான ஏரி, குளங்கள், வாய்க்கால்கள் போன்றவற்றைப் பாதுகாப்பதும் பராமரிப்பதும்கூட உள்ளூர் அமைப்புகளாலேயே நிறைவேற்றப்பட்டன. வேளாண் உற்பத்திக்குத் தேவையான கருவிகளை உற்பத்தி செய்து தந்த கைவினைஞர்களும் உள்ளூர்களிலேயே குடியிருந்ததால், அவர்களுடைய பணிகளைக் கட்டுப்படுத்துகின்ற செயலையும் உள்ளூர் அமைப்புகளே மேற்கொண்டன. இதன் தொடர்ச்சியாக, நில உற்பத்தியை முழுமையாகச் கட்டுப்படுத்துகின்ற சமூக-பொருளாதார நிறுவனங்களாகவே இந்த அமைப்புகள் ஏற்றம் பெற்றதைக் காணலாம்.

கரையோரப் பாசனப்பகுதிகளில் உணவு உற்பத்தி—குறிப்பாக நெல் உற்பத்தி—பெரும்பாலும் உபரியாகவே இருந்ததால், உள்நாட்டின் மையப்பகுதிகளில் உணவுப் பொருள்களைப் பங்கீடு செய்ய வேண்டிய நிலையும் அவற்றை முறைப்படுத்தவேண்டிய சூழலும் அமையவில்லை. வேளாண் உற்பத்தி உபரியை, பாசனப் பகுதிகளற்ற—நெல் பயிரிடப்படாத—எல்லைப் பகுதிகளில் விற்பதும் தேவையான பொருள்களைப் பெற்று வருவதும் வணிகர்களின் துணையால் நடைபெற்று வந்தன.

உள்ளூர் அமைப்புகளின் பணிகளையும் செயல்பாடுகளையும் நுணுகிப் பார்க்கும்போது, மக்களின் அன்றாட வாழ்வோடு தொடர்புள்ள அனைத்திலும் அவற்றின் பங்கு இருந்திருப்பது தெரிகின்றது. உற்பத்தி, உற்பத்தி வாய்ப்புகள், கலை, சமயம், நீதி வழங்குதல் என்று யாவற்றிலும் உள்ளூர் அமைப்புகள், முழு அளவில் ஆட்சியுரிமை கொண்ட சிற்றரசுகள் போலவே விளங்கியுள்ளன. மேலும், இந்த உள்ளூர் அமைப்புகள், தங்கள் ஆட்சிப்பணிகளை நிறைவு செய்து கொள்ள வேண்டப்பட்ட பொருள் வாய்ப்புகளை உள்ளூர் உற்பத்தியில் கிடைத்த எச்சத்திலிருந்தே பெற்றுக்கொண்டதால் தாங்கள் மேற்கொண்ட கடமைகளுக்காக உயர் அமைப்புகளை அல்லது பேரரசரின் துணையினை நாடவேண்டிய நிலையும் ஏற்படவில்லை. பல ஊர்களுக்குப் பயன்படுகின்றவாறு பெரிய அளவில் ஏரி குளங்களை அமைத்தல், வணிகத்துக்கும் படையினரின் பயன்பாட்டுக்கும் சாலைகள் போடுதல், எதிரிகளிடமிருந்து காத்தல் போன்றவற்றுக்கு மட்டுமே பேரரசு அமைப்பின் துணை வேண்டப்பட்டது.

உள்ளூர் உற்பத்தி—வேளாண் உற்பத்தி தொடர்பான வரி அளவுகள் தெளிவாகத் தெரியவில்லையென்றாலும், இடத்துக்கும் வளத்துக்கும் ஏற்ப இவை இறுதி செய்யப்பட்டிருந்ததால், இவற்றைப் பெறுவதில் பெரும்பாலும் இடையூறுகள் ஏற்படவில்லை. இத்தகைய வரிகளை உள்ளூர் அமைப்புகளே பெற்றுப் பேரரசுக்குக் கொடுத்தன. எனவே, இதற்கெனப் பேரரசின் அலுவலர்கள் எவரும் ஊர்களில் இருந்ததாகத் தெரியவில்லை. ஆகையால் வணிக வரிகள், சுங்கம் போன்றவற்றைப் பெறுதற்கும் உள்ளாட்சி அமைப்புகளை மேற்பார்வையிட்டு, உற்பத்தி நிலங்களைக் கண்டறிந்து உரிய பங்கினை உள்ளாட்சிவழி பெறுதற்குமான அலுவலர்களே இருந்தார்கள். மேலும், பொருளாதார நடவடிக்கைகள், நலத் திட்டங்கள் என்று செயல்படுத்த வேண்டிய பெரும் பணி எதையும் பேரரசு மேற்கொண்டிருக்கவில்லை. பொதுப்பணி, நில—நீர் நிர்வாகம், வணிகம், உள்ளாட்சி, கோயில் போன்றவற்றில் பேரரசின் வலுவான மேலாண்மை நீடித்திருந்தாலும், அவை தொடர்பான நிர்வாக அமைப்புகளோ, அலுவலர்களோ பெரிய அளவில் இருக்கவில்லை. ஆட்சிமுறை பரவலாக்கப்பட்ட நிலையில் பேரரசுக்குப் பெரியதொரு நிர்வாக எந்திரம் வேண்டப்படவில்லை எனக் கூறுவதே பொருத்தமானதாக இருக்கும்.[74] உள்ளூர் மக்களே பல பணிகளைச் செய்து கொண்டு, தன்னிறைவு பெற்ற பொருளாதாரப் பிரிவுகளாக ஊர்கள் உருவான நிலையில் பேரரசின் பங்கு குறைவதும் இயற்கைதான்.[75]

நிலவுடைமை முறையின் உறவுகள், ஒருபுறம் பேரரசுக்குக் கட்டுப்பட்டு மேலாண்மைக்குப் பணிந்து கிடந்ததாகவும், மறுபுறம் தன்னிச்சையான உரிமைகள் கொண்ட பகுதிகளைக் கைக்கொண்டிருந்ததாகவும் விளங்கின.

இந்த நிலைமைகளில், பேரரசு நிர்வாக அமைப்பு முறை வழியாகக் கிடைக்கக்கூடிய நிர்வாக ஏற்பாட்டுக்கான அடிப்படைக் கூறுகள் நடைமுறையில் அப்போது அமையப் பெறவில்லை. ஆனாலும், வரிகளைப் பெறுதற்கும் பெரும் படையை போற்றுதற்குமான எந்திரம் இருந்து வந்தது. இது மக்களின் சமூக-பொருளாதார வாழ்வில் எத்தகைய பங்கைக் கொண்டிருந்தது என்பது தொடர்ந்து விரிவாக ஆராயப்பட்டுவருகிறது.

மக்கள் வாழ்வின் வளர்ச்சியிலும் மாற்றத்திலும் வேளாண்மையின் வளர்ச்சி குறிப்பிடத்தக்க பங்கை வகித்தது. முன்னிருந்த பொருத்தமற்ற சமூக-பொருளாதாரக் கட்டமைப்பை முழுமையாக மாற்றி, அன்றைய தேவைகளுக்கு ஏற்ப வேறு ஒரு புதிய முன்னேற்றமான சமூக-பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்கித் தந்ததற்கு வேளாண்மை வளர்ச்சியே அடிப்படையாக அமைந்தது என்றால் மிகையாகாது. இதன் ஒவ்வொரு மாற்றமும் அமைப்பு முறையும் மேலும் விரிவாக, ஆழமாக ஆய்வு செய்யப்படவேண்டும்.

## குறிப்புகள்

1 த. வசந்தா, 'பண்டைத் தமிழ்நாட்டில் ஏற்பட்ட சமூக—பொருளாதார மாற்றத்தின் சில தன்மைகள்', நாவாவின் ஆராய்ச்சி எண் 38-39, சென்னை, 1991, பக். 86-94.

2 அரங்க. பூங்குன்றன், சங்கம் நடுகற்களில் தொறுப்பூசல், தொல்குடிகள், அரசியல் (வெளியிடப்படாத எம்ஃபில் ஆய்வு), பாரதியார் பல்கலைக்கழகம், கோவை, 1989.

3 கார்த்திகேசு சிவத்தம்பி, தமிழில் இலக்கிய வரலாறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1988, பக். 202-203.

4 பட்டினப்பாலை 283-4.

5 நா. வானமாமலை, தமிழர் வரலாறும் பண்பாடும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1966, ப. 94

ரகுநாதன், இளங்கோவடிகள் யார்?, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1984. பக். 327-333.

Karthigesu Sivathamby, *Drama in Ancient Tamil Society*, NCBH, Chennai, 1981, p. 172.

க. கைலாசபதி, பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், மக்கள் வெளியீடு, சென்னை, 1978, ப. 102.

6 புறநானூறு 7, 16, 78, 109.
7 புறம் 338; 'மகட்கொடை'யைப் பெரும் கொள்ளை எனப் பொருள் தரும் வகையில் 'அருங்கொண்டியள்' என்ற சொல் இப்பாடலில் கூறப்படுவதும் நோக்கத்தக்கது.
8 பட்டினப்பாலை 203-205.
9 பட்டினப்பாலை 212.
10 நச்சினார்க்கினியர் உரை, பத்துப்பாட்டு (உ.வே.சா. பதிப்பு), 1961, சென்னை, ப. 554.
11 க. கைலாசபதி, பண்டைத்தமிழர், ப. 101.
12 பெரும்பாணாற்றுப்படை 333
13 மதுரைக்காஞ்சி 357-8.
14 பட்டினப்பாலை 20.
15 நெடுநல்வாடை 49.
16 கா. மீனாட்சி சுந்தரம், 'சமுதாயம்', தமிழ்நாட்டு வரலாறு—சங்க காலம்—வாழ்வியல், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1983, பக். 58-64.
17 மா. இராசமாணிக்கனார், பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1970, ப. 482. மதுரைக்காஞ்சி 442.
18 பெரும்பாணாற்றுப்படை 353-5. எ. சுப்பராயலு, 'பொருளியலும் வாணிகமும்,' தமிழ்நாட்டு வரலாறு—சங்க காலம்—வாழ்வியல், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1983, ப. 149.
19 Burton Stein, *Peasant State and Society in Medieval South India*, Oxford University Press, Delhi, 1985, pp. 242, 251.
20 கா. சுப்பிரமணியன், சங்க காலச் சமுதாயம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1987, பக். 51, 105.
21 K. Sivathamby, *Drama*, pp. 230, 332.
22 தெக 2: ப. 306; கஆஅ 1931: 120
23 சிலப்பதிகாரம் 14:148; அடியார்க்குநல்லார் உரை.
24 C. Minakshi, *Administration and Social Life undar the Pallavas*, University of Madras, Chennai, 1977, p. 311.
25 Padma Subrahmanyam, 'History, Technic and Notation for Adavu System in Dance', *South Indian Studies*, SAHER, Chennai, 1978, pp. 109-110.
26 K. Sivathamby, *Drama*, p. 332.
27 க. கைலாசபதி, பண்டைத் தமிழர், பக். 179, 182. நா. வானமாமலை, தமிழர், பக். 47–48.
28 கஆஅ 1939-40: 388; ப. 242.

29 தெக 18: 463.
30 கஆஅ 1939-40: 225.
31 கஆஅ 1935-36: 141; 1939-40: 233.
32 கஆஅ 1929-30: 250.
33 மே. து. ராசுகுமார், பிற்காலச் சோழர் கால வாழ்வியல் (வெளியிடப்படாத பிஎச்டி ஆய்வு), சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1978, பக். 71-73.
34 க. கைலாசபதி, பண்டைத் தமிழர், ப. 174.
35 நா. வானமாமலை, தமிழர், ப. 49.
36 Hennath, R. Hall, *Trade and State Craft in the Age of Colas*, New Delhi, Abhinav Publications, 1980, p. 128.
37 மேலது, ப. 149.
38 A. Appadorai, *Economic Conditions in Southern India (1000—1500 A.D.)*, Madras University, Chennai, 1936, pp. 357-402.
39 தி. கே. மித்ரோபோல்ஸ்கி, ஒய். எ. ஜுப்ரிட்ஸ்கி, வி. எல் கெரோல், சமுதாய வரலாற்றுச் சுருக்கம்—முதல் பாகம்—முதலாளித்துவத்திற்கு முந்திய சமுதாயம் (மொழி பெயர்ப்பு), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 1968, சென்னை, ப. 249.
40 புறம் 322; மதுரைக்காஞ்சி 258; பெரும்பாண் 260; ஐங்குறுநூறு 55.
41 மதுரை 511-521.
42 புறம் 87, 206, 290; 21, 36, 170, 180, 312, பெரும் 207; புறம் 228, 256.
43 புறம் 177; பதிற்றுப்பத்து 19, 53.
44 மதுரை 504-506.
45 மதுரை 315-24.
46 பட்டினப்பாலை 185-192.
47 Appadorai, *Economic*, pp. 351, 429-31.
48 மே. து. ராசுகுமார், 'தன்னிறைவு பெற்ற ஊர்களின் தோற்றம்', தமிழக வரலாற்றுக் கருத்தரங்கு, வரலாற்றுப் பேரவை, சென்னை, 1979 பக். 316-20.
49 கஆஅ 1919: 205.
50 Engels Frederick, *Anti-Duhring*, Progress Publishers, Moscow, 1975, p. 325.
51 D.D. Kosambi, *An Introduction to the Study of Indian History*, Popular Prakashan, Mumbai, 1975, pp. 338-9.
52 கஆஅ 1912: 136.
53 கஆஅ 1919: 205.

54 பாலாவி போன்ற மெல்லிய ஆடை பெரும்பாணாற்றுப் படையில் (467-70) குறிக்கப் பெறுகிறது. நூல் இழை தெரியாதவாறு நெய்யப்பட்ட மெல்லிய ஆடையை மலை படுகடாம் (561-2) காட்டுகிறது.
55 K. A. Nilakanta Sastri (Ed), *Foreign Notices of South India*, University of Madras, 1972, p. 144.
56 நொபொரு கராஷிமா, வரலாற்றுப் போக்கில் தென்னகச் சமூகம்—1 சோழர் காலம் (850-1300), தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர், 1995, ப. 7.
57 மேலது, பக். 37, 46, 48.
58 மேலது, பக். 39, 48, 49.
59 கஆஅ 1918: 538; பக். 97, 98.
60 நொபொரு கராஷிமா, வரலாற்றுப் போக்கில், பக். 43, 60.
61 புதுக்கோட்டைக் கல்வெட்டுக்கள் 200.
62 Hennath R. Hall, *Trade*, p. 111.
63 தெக 2: 65, 66, 69.
64 Hennath R. Hall, *Trade*, pp. 119-120.
65 P. Shanmugam, *The Revenue System of the Cholas 850-1279*, New Era Publications, Chennai, 1987, pp. 254-6.
66 மே. து. ராசுகுமார், பிற்காலச் சோழர் கால வாழ்வியல், பக். 22-33.
67 Marx Karl, 'Pre-capitalist Economic Formations', '*Pre-capitalist Socio-Economic Formations-A Collection*, Progress Publishers, Moscow, 1979, p. 123-25.
68 Burton Stein, *Peasant*, pp. 251-2.
69 புறநானூறு 183.
70 K. A. Nilakanta Sastri, *Colas*, p, 662.
71 மேலது, ப. 633.
72 A. S. Altekar, *State and Government in Ancient India*, Motilal Banarsidass, Delhi, 1984, p. 231.
73 K. A. Nilakanta Sastri, *Colas*. p. 628.
74 ஆர். எஸ். சர்மா, பழங்கால இந்தியாவில் அரசியல் கொள்கைகள், நிலையங்கள்—சில தோற்றங்கள் (மொழி பெயர்ப்பு), என்சிபிஎச். சென்னை, 1989, ப. 409.
75 ஆர். எஸ். சர்மா, இந்திய நில மானிய முறை (மொழி பெயர்ப்பு), என்சிபிஎச், சென்னை, 1989, ப. 90.

# 'மணிக்கொடி'யில் நாவா

இரண்டாம் உலகப் போருக்கு முந்தைய காலகட்டத்தில் தமிழ்ப் பதிப்புலகம் பற்றிய என் முனைவர் பட்ட ஆய்வின் தொடர்பாகத் தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் முக்கிய இடம் பெற்றுள்ள 'மணிக்கொடி' இதழைப் பார்வையிட்டபோது பேராசிரியர் நா. வானமாமலையின் 'இலக்கியம்' என்ற கட்டுரை காணக் கிடைத்தது. அதனை நாவாவின் அன்பர் களோடு பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சியுறுகிறேன். இன்றைக்கு நமக்குக் கிடைக்கும் தரவுகளைக் கொண்டு பார்த்தால் இதுவே அச்சில் வெளியான நாவாவின் முதல் படைப்பு என்று கொள்ள லாம்.

இக்கட்டுரை, 'மணிக்கொடி' தொகுதி 7 இதழ் 1இல் வெளி யாகியுள்ளது. எனக்குப் பார்க்கக் கிடைத்த இதழின் இரண்டு படிகளிலும் அட்டைத் தாள் கிழிந்திருந்ததால் இதழ் வெளி யான காலம் தெரியவில்லை. இதற்கு முந்தைய இதழ்களின் காலத்தைக் கொண்டு 1938 பிற்பகுதி அல்லது 1939 முற்பகுதி என்று கணக்கிடலாம்.

'மணிக்கொடி' தொகுதி 7, இதழ் 5இல் ஆங்கில இலக்கிய வாணர் ஜான் கால்ஸ்வொர்த்தியின் 'தோல்வி' என்ற ஓரங்க நாடகத்தையும் நாவா மொழிபெயர்த்திருக்கிறார்.

'மணிக்கொடி' இதழின் வரலாற்றை மூன்று கட்டங்களா கப் பிரிப்பது வழக்கம்:

1 செப்டம்பர் 1933—ஜனவரி 1935:
வ. ரா., டி. எஸ். சொக்கலிங்கம், கு. சீனிவாசன் ஆசிரியர்கள்

2 மார்ச் 1935—பிப்ரவரி 1938:
பி. எஸ். ராமையா பொறுப்பில் வெளிவந்தது.

3 1938—1939:
ப. ரா. என்ற ப. ராமசாமியின் ஆசிரியப் பொறுப் பில் வெளிவந்தது.

மூன்றாம் கட்டத்தில்தான் நாவா 'மணிக்கொடி'யில் எழுதியுள்ளார்.

—ஆ. இரா. வேங்கடாசலபதி

# இலக்கியம்

**நா. வானமாமலை**

கவிதையும் வசனமும் இலக்கியத்தின் இரு பிரிவுகள். இலக்கியத்தில் இதுவரை கவிதையே செல்வாக்கு வகித்து வந்தது. தமிழ்நாட்டில் மட்டுமல்ல; இந்திய பாஷைகளில் மட்டுமல்ல; மேல் நாட்டு இலக்கியத்திலும் கவிதை ஓர் உயர்ந்த மதிப்பைப் பெற்று வந்தது. வசனம் கவிதையைவிடக் காலத்தில் பிற்பட்டது.

வசன ரூபத்திலிருந்தாலும் உணர்ச்சி மிகுந்து, இசையின் பங் கலந்து, ஓர் எண்ணம், உணர்ச்சி, செய்கை இவைகளைச் சித்திரிக்கும் வார்த்தைகள் கவிதையேயாகும். வால்ட் விட்மானது கவிதை இந்த ரகத்தைச் சேர்ந்தது. இதை வசனக் கவிதை என்று சொல்லலாம். ஆனாலும் இதைக் கவிதையென்ற பிரிவிலேயே சேர்க்கவேண்டும்.

நாவல், நாடகம், சிறுகதை, ஒற்றையங்க நாடகம், இவை இலக்கியத்தின் பகுதிகள். நாவலுக்கும் சிறுகதைக்கும் என்ன தொடர்போ, அதேதான் ஒற்றையங்க நாடகத்துக்கும், நாடகத்துக்கும்.

கலைஞன் (வசன இலக்கியாசிரியனை மட்டுமே இங்கு குறிப்பிடுகிறேன்) தனது சிருஷ்டியான கதாபாத்திரங்களிடம் நடுநிலைமை வகிக்கிறான். பற்றற்ற பிரம்ம ஞானிபோல அவன் அழகுணர்ச்சியில் லயித்துச் சித்திரங்களை வரைகிறான். ‘இதை நன்றாக வரையவேண்டும்’, ‘இதை உருப்படாமல் அடிக்கவேண்டும்’ என்ற எண்ணம் அவனுக்கில்லை. எந்தத் தனிக் கதாபாத்திரத்திடமும் அவனுக்கு அநுதாபமில்லை. எல்லாவற்றையும் சம திருஷ்டியோடு காண்கிறான். ஒரு பந்தயத்தில் ஈடுபட்டிருப்பவனைவிட அதை எட்ட நின்று பார்ப்பவனே அதிகமாக ரஸிக்கிறானல்லவா? அது போலவே மனிதரது உணர்ச்சிப் போராட்டத்தைக் கலையுணர்ச்சியுடன் நோக்கி அதன் தத்துவத்தைக் கலைஞன் கிரஹித்துக் கொள்ளுகிறான். பிறகு தன் அகத்திலே பிறந்த அழகுணர்ச்சியைத் தன் சக்திக்கேற்ப வெளியிடுகிறான்.

மேற்கண்ட கொள்கைக்கு முற்றிலும் ஒத்து வருவன கால்ஸ்வர்தி, டாஸ்டாய்யவஸ்கி, டர்ஜினீவ், ஸால்டியகாவ், ரோமேன் ரோலந்து, தாமஸ் ஹார்டி முதலியோரின் சிருஷ்டிகள். கால்ஸ்வர்தியின் சிருஷ்டிகளான ஜாலியன், ஜேம்ஸ், ஸோம்ஸ், இரீன், ப்ளூர், ஜான் எல்லோரையும் அவன் பற்றின்றி

வரைந்திருக்கிறான். தாமஸ் ஹார்டியின் 'டெஸ்' மற்றொரு உதாரணம். தாகரே, டால்ஸ்டாய், ஹியூகோ முதலியோர் தங்கள் ஆசாபாசங்களைச் சற்றே கதைக்குள் நுழைத்தாலும் கதாபாத்திரங்களைப் பற்றின்றி சிருஷ்டி யின்பத்திற்காகவே சிருஷ்டித்திருக்கிறார்கள்.

இனி வசன இலக்கியத்தின் ஒவ்வொரு பிரிவைப் பற்றியும் சிற்சில வார்த்தைகள். நாவல் மேல் நாடுகளில் கடந்த நூற்றாண்டிலிருந்து மிகுந்த உன்னத நிலையடைந்திருக்கிறது. சமூக அமைப்பைத் தழுவி மனித இதயத்தின் உணர்ச்சியைப் பற்றிய தன்னுடைய அறிவை நாவல் மூலம், நாவலாசிரியன் வெளியிடுகிறான். ஒரே நூலில் பல வேறு போக்குடைய பலரை உருவாக்குகிறான். கால்ஸ்வர்தி முதலியவர்கள் நாவலை அறிவுப் பொக்கிஷமாக்கிவிட்டார்கள். பொதுவாக, ஒரு நாட்டின் இலக்கியமே அந்நாட்டின் வாழ்க்கைச் சீரைப் புலனாக்குகிறதென்றாலும், ஒரு நாவலிலேதான் அதன் வாழ்க்கைப் போக்கைப் பூராவாக அறிய முடியும்.

சிறுகதை அமெரிக்காவின் அபூர்வ சிருஷ்டி. தற்காலம் துரித காலம். நாவல் வாசிக்க, அதுவும் 'ஜீன் கிறிஸ்தபர்,' 'பார்ஸைட் ஸாகா,' 'மாடர்ன் காமெடி' போன்ற நீண்ட நாவல்களை வாசிக்க எங்கே நேரமிருக்கிறது? ஆகவே சிறு கதைகளுக்கு மதிப்பு எழுந்தது. பிரபல கதாசிரியர்கள் தோன்றினார்கள். இங்கிலாந்தும் பிரான்ஸும் இப் புது முறையைத் தழுவின.

சிறுகதையின் அமைப்பு ஏதாவதொரு நிகழ்ச்சி, எண்ணம், உணர்ச்சி, கொள்கை இதைச் சுற்றியிருக்கும். நாவலாசிரியனைப் போல வாழ்க்கையின் பல துறைகளையும் கதாசிரியன் சுற்றிக்காட்டமாட்டான். அவனது நினைப்பெல்லாம் மூல எண்ணத்தைப் பற்றித்தான். நிகழ்ச்சியைப் பற்றிய சிறு கதைகளில் ஏதாவது வாழ்க்கையைப் பாதிக்கக்கூடிய, வாழ்க்கையில் பெரிய மாறுதல்களை உண்டுபண்ணக்கூடிய சம்பவங்களில் ஏதேனுமொன்றைப் பற்றிக் கதாசிரியன் வரைவான். தாகூரின் சிறுகதைகளில் பல இந்த வகையைச் சார்ந்தன. ஒரு எண்ணம் அல்லது உணர்ச்சியின் போக்கைப் பற்றிச் சித்திரிக்கும் சிறு கதைகள் மிகவும் குறைவு. கால்ஸ்வர்தியின் சிறுகதைகளில் பல இந்த வகையைச் சார்ந்தன. ஒரு பிரசாரக் கொள்கையை விளக்குவதற்குச் சிறுகதையை உபயோகித்துக் கொள்வது கவிதை முறைக்கு மாறானது. என்றாலும் கவிதையுணர்ச்சி ததும்பும்படி சிலர் கதைகள்மூலம் தங்கள் கருத்துக்களை வெளியிடுகிறார்கள். டால்ஸ்டாயின் இருபத்து மூன்று கதைகளையும், ராஜாஜியின் மதுவிலக்குக் கதைகளையும்,

இத்தகையனவென்று சொல்லலாம். சிறுகதை ஓர் முடிந்த ஓவியம், நாவலின் ஒரு பகுதியன்று.

நாடகம் ஏறக்குறைய ஒரு சிறு நாவல். நீளம் முக்கிய மன்று. சித்திரத்தின் அழகுதான் பிரதானம். நாவலாசிரியனுக்குள்ள உரிமைகளில் சில நாடகாசிரியனுக்கில்லை. நாடகத்தில் பாத்திரங்கள் மூலமாகவே அவன் பேசவேண்டும். நாடகத்திலுள்ள கதாபாத்திரங்களின் உணர்ச்சிகளை நம் ஊகத்துக்கு விட்டுவிடவேண்டும்.

நாடகங்கள் அநேகமாகத் தற்போதிருக்கும் சமூக ஊழல்களைச் சுட்டிக்காட்ட உபயோகிக்கப்படுகிறது. கால்ஸ்வர்தியின் 'வெள்ளிப் பெட்டி', பெர்னாட் ஷாவின் நாடகங்கள், டால்ஸ்டாயின் 'ஜீவப்பிரேதம்' போன்ற நாடகங்கள் சமூகச் சீர்திருத்தப் புஸ்தகங்கள் பலவற்றைக் காட்டிலும் அதிகப் பலனை அளித்திருக்கின்றன.

ஒற்றையங்க நாடகம், சிறுகதையைப் போல. இது தமிழ் மறுமலர்ச்சி எழுத்தாளர்களை முழுதும் கவர்ந்திருக்கிறது.

தமிழில் சிறுகதைகள் பெருகி வருகின்றன. சில ஒற்றையங்க நாடகங்களும் வெளிவந்திருக்கின்றன. அழகிய நாவல் ஒன்றுகூட மறுமலர்ச்சிக் காலத்தில் வெளிவரவில்லை (மொழி பெயர்ப்பு நாவல்கள் பல வெளிவந்திருப்பதை நான் மறந்து விடவில்லை). ஜப்பானிய அறிஞர் ககவா சொல்லியிருப்பது போல, "ஒவ்வொரு நாடும், காலமும் தனது கவிஞனை எதிர்நோக்கி வரவேற்கிறது." அது போலவே தமிழ்த் தாய் தமிழ் நாவலாசிரியனை எதிர்நோக்கி நிற்கிறாள்.

---

## நாவாவின் ஆராய்ச்சி

(எண் 48 ஏப்ரல் 1999)

அடுத்த இதழில்

**கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பி**

எழுதும் ஆய்வுக்கட்டுரை

**திராவிட இயக்கக் கருத்து நிலையின்**

**இன்றைய பொருத்தப்பாடு**

SAMINATHAIYER LIBRARY Besant Nagar Chennai

# கட்டுரையாளர்கள்

**தி. கு. இரவிச்சந்திரன், முனைவர்**

பாளையங்கோட்டை நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையத்தில் ஆய்வு இயக்குநர். 'நாட்டுப்புற வழக்காறுகள்: ஃபிராய்டிய உளப்பகுப்பாய்வு' என்ற பொருளில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.

**ஆ. சிவசுப்பிரமணியன்**

தூத்துக்குடி, வ.உ.சி. கல்லூரித் தமிழ்த் துறையில் பணி யாற்றும் இவர், 'வ. உ. சி. சமூக அறிவியல் நிறுவன'த்தின் உதவி இயக்குநர். நாட்டார் வழக்காற்றியல், சமூக வரலாறு, பண்பாட்டியல் முதலான துறைகளில் முன்னோடி ஆய்வுகள் பல நிகழ்த்தியுள்ளார். இத்துறைகளில் இவர் எழுதிய நூல்கள் பல வெளிவந்துள்ளன.

**மே. து. ராசு குமார், முனைவர்**

தமிழக வரலாற்றுப் பேரவையின் தலைவர். இலக்கியம் வரலாறு, பண்பாடு, வேளாண் பொருளாதாரம், அரசியல் தொடர்பான கட்டுரைகளை எழுதி வருகிறார்.

**வசந்தா, த.**

சென்னைப் பல்கலைக்கழகத்தின் பண்டை வரலாறு— தொல்லியல் துறையில் 'பண்டைத் தமிழ்நாட்டின் சமூக-பொருளாதாரக் கட்டமைப்புகள்' குறித்து ஆய்வு செய்து வரு கிறார். பழந்தமிழ் இலக்கியங்களை, சமூக-பொருளாதாரக் கண்ணோட்டத்துடன் ஆய்வதில் இவர் முனைப்புக்கொண்டுள் ளார்.

**ஆ. இரா. வேங்கடாசலபதி, முனைவர்**

திருநெல்வேலி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் வரலாற்றுத்துறை விரிவுரையாளர். தமிழ்ச் சமூக வரலாறு பற்றிய ஆய்வுகளும், வ.உ.சி., பாரதி, புதுமைப் பித்தன் தொடர்பான பதிப்புப் பணிகளும் செய்திருக்கின் றார்.

# அஞ்சலி

## திரு. ஆ. சுப்பிரமணியன்
## பேராசிரியர் கா. சுப்பிரமணியன்

'ஆராய்ச்சி' ஆசிரியர் குழுவைச் சார்ந்த திரு. ஆ. சுப்பிரமணியன், பேரா. கா. சுப்பிரமணியன் ஆகிய இரண்டு பேரறிஞர்களின் மறைவு பேரிழப்பாக ஏற்பட்டுள்ளது.

பேரா. நாவா அவர்கள் தொடங்கிய 'நெல்லை ஆய்வுக் குழு'வுடனும் 'ஆராய்ச்சி'யுடனும் பின்னர் 'நாவாவின் ஆராய்ச்சி' இதழுடனும் தொடக்கத்திலிருந்து முழுமையான தொடர்புகொண்டிருந்தவர்கள் இவர்கள்.

திரு. ஆ. சுப்பிரமணியன் அவர்கள் நெல்லை இந்துக் கல்லூரி மேனிலைப்பள்ளித் தலைமை ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர். இவருடைய ஆய்வுகள் 'ஆராய்ச்சி'யில் வெளி வந்துள்ளன. வேறு பல இதழ்களிலும் தொடர்ந்து கட்டுரை கள் எழுதியுள்ளார். நெல்லை மாவட்டத்தில் முற்போக்கு இயக்கம் வலுப்படத் துணை நின்ற இவர், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்திலும் பல பொறுப்புகளைப் பெற்றி ருந்தார்.

பேராசிரியர் கா. சுப்பிரமணியன் அவர்கள் ஸ்ரீவைகுண்டம் குமரகுருபரர் கலைக் கல்லூரித் தமிழ்த்துறையில் பணியாற்றி யவர். பழந்தமிழ் இலக்கியங்களில் ஆழ்ந்த பயிற்சியும் நுணுக்க மான அறிவும் தெளிவான பார்வையும் கொண்டிருந்தார். 'ஆராய்ச்சி' இதழில் அவர் எழுதிய கட்டுரைகள், இனக் குழு வாழ்க்கை நிலையிலிருந்து, வளர்ச்சி பெற்ற அமைப்பு உருவானதைச் சங்க இலக்கியச் சான்றுகளோடு நிறுவுகின்றன. இக்கட்டுரைகள் தொகுக்கப்பட்டு, 'சங்ககாலச் சமுதாயம்' என்ற நூலாக வெளிவந்தது. தமிழ்நாட்டின் தொடக்க வரலாற்றினைப் புரியவைக்கும் அடிப்படையான ஆய்வுகள் அவை.

முற்போக்கு இயக்கத்திற்கும் தமிழியல் ஆய்வுகளுக்கும் மார்க்சிய சிந்தனை வளர்ச்சிக்கும் இவர்களது பங்கு குறிக்கத் தக்கதாகும். இவர்கள் பணி என்றென்றும் நிலைத்திருக்கும்.

இறுதிவரை 'நாவாவின் ஆராய்ச்சி' ஆசிரியர் குழுவில் இருந்து துணை நின்ற இவர்களுக்கு ஆழ்ந்த அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மே.து.ரா**
**ஆசிரியர் குழுவுக்காக**